16 - 30 ஏப்ரல் 1997 ரூ. 3.50

www.padippakam.com

அஸ்ஸாம் : சட்டபூர்வ இராணுவ ஆட்சி

# புதிய ஜனநாயகம்




## நாற்காலிக் கனவுகள்

படிப்பகம்

www.padippakam.com

# தொழிற் சங்க உரிமை கேட்ட தொழிலாளர்களின் வேலை பறிப்பு; கொலைப் பழி!

## கோவை கே.ஜி. நிர்வாகத்தின் அடாவடித்தனம்

கோவை மாவட்டத்திலுள்ள மேட்டுப் பாளையத்தில் இருந்து பத்ரகாளியம்மன் கோவில் செல்லும் வழியில் ''சாரதா டெர்ரி பிராடக்ட்ஸ்'' என்னும் ஆலை இயங்கி வருகிறது. கோவையைச் சேர்ந்த கே.ஜி. நிர்வாகத்திற்குச் சொந்தமான இத்தொழிற்சாலையில் ஒருவித பூச்சி கொல்லி மருந்து தயாரிக்கப்பட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கே.ஜி. நிர்வாகத்தின் சர்வாதிகாரத் திமிர், பழிவாங்கும் போக்கைக் கண்டித்து, அவ்வாலைத் தொழிலாளர்கள் ஜீவ மரணப் போராட்டமொன்றை கடந்த நான்கு மாதங்களாக நடத்தி வருகின்றனர்.

சென்ற ஆண்டு டிசம்பரில் அத்தொழிற்சாலையைச் சேர்ந்த பெண் தொழிலாளி ஒருவர் இரண்டு நாள் விடுப்பு எடுத்துச் சென்றுள்ளார். பின் அவசியம் காரணமாக, மேலும் இரண்டு நாள் விடுப்பு கோரிய அவரை, வேலையில் இருந்து நீக்கிவிட்டது நிர்வாகம். இந்த அடாவடித்தனத்தை ஏற்க மறுத்த சக தொழிலாளர்கள், அப்பெண் தொழிலாளி தண்டிக்கப்பட்டது நியாயமன்று என நிர்வாகத்தை நிர்ப்பந்திக்கத் தொடங்கினர். நிர்வாகமோ கேள்வி கேட்ட தொழிலாளர்களை வேலையில் இருந்து நீக்கிவிடப் போவதாக அச்சமூட்டி, தொழிலாளர்களைப் பணிய வைக்க முயன்றது.

அரசியல் செல்வாக்கும், அதிகாரத் துணையும் கொண்ட கே.ஜி. நிர்வாகத்தை, சங்கமின்றி எதிர்த்துப் போராட முடியாது எனப் புரிந்துகொண்ட தொழிலாளர்கள், தொழிற்சங்கமொன்றை உருவாக்க முனைந்தனர். நிர்வாகமோ, சங்கம் உருவாவதைத் தடுக்க, அப்பாவித் தொழிலாளிகளை மிரட்டி, வெள்ளைத் தாளில் கையெழுத்து வாங்கத் தொடங்கியது. நிர்வாகத்தின் இக்குள்ளநரித்தனத்தை முறியடிக்கும் முகமாக, 12.12.'96 முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கி, சமரசமின்றி போர்க்குணத்தோடு நடத்தி வருகின்றனர், தொழிலாளர்கள். ''கே.ஜி. நிர்வாகம் தொழிற்சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும்'' என்பதுதான் அத்தொழிலாளர்களின் மையமான கோரிக்கை.

தனது அரட்டல் உருட்டல்களுக்கு அஞ்சாத தொழிலாளர் தலைவர்களை விலைக்கு வாங்கி, போராட்டத்தை ஒடுக்கிவிட முனைந்தது கே.ஜி. நிர்வாகம். இதற்காக தனது நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சி.பி.சி. நிறுவனத்தில் பணிபுரியும் ஜெய வீரன் என்ற தரகனை அனுப்பி வைத்தது. பேச்சுவார்த்தை என்ற பெயரில் அவன் நடத்திய பேரத்திற்கு, தொழிற்சங்கத் தலைவர் இராஜ முகம்மது, செயலர் சந்தோஷ் குமார், பொருளாளர் கண்ணன் - மூவரும் அடிபணிய மறுத்து விட்டனர்.

மூக்கறுபட்டுப் போன நிர்வாகம், இதன் பின் சதி வலையொன்றைப் பின்னியது. நிர்வாகத்தின் கைக்கூலியான தங்கவேல் என்ற தொழிலாளி, ''போராடும் தொழிலாளர்கள் தன்னைக் கொலை செய்ய முயன்றதாக'' போலீசில் புகார் கொடுத்தான். கே.ஜி. நிர்வாகத்திடம் வாங்கிய காசுக்கு மிக நன்றாகவே குரைத்தது போலீசு. பதினைந்து தொழிற்சங்க முன்னோடிகள் மீது கொலை முயற்சி வழக்கு தொடரப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

சதித் திட்டம் வெற்றி பெற்றாலும், கே.ஜி. நிர்வாகத்தால் மகிழ்ச்சிக் கடலில் நீந்த முடியவில்லை. வர்க்க உணர்வால் உந்தப்பட்ட தொழிலாளர்கள் முன்னை விட இரு மடங்கு தீவிரத்தோடு போராட்டத்தைத் தொடர்ந்தனர். இதனிடையே தொழிற்சங்க முன்னோடிகள் பிணையில் வெளிவரவே, போராட்ட உற்சாகம் கரைபுரண்டோடியது.

பணத்திற்கும் மயங்காத, அச்சுறுத்தலுக்கும் அடிபணியாத போராட்டத்தை, சலுகைகள் காட்டி பிசுபிசுக்கச் செய்துவிடும் திட்டம் அடுத்ததாகத் தயாரானது. ''தொழிற்சங்கம் அமைப்பதைவிட்டு, வேலைக்கு வருபவர்களுக்கு எல்லாவித சலுகைகளும் வழங்கப்படும்'' என்ற அறிக்கையை ஆலை நிர்வாகிகள் வெளியிட்டனர்; அதே பொழுதில், ''கொலைக் குற்றம் சுமத்தப்பட்ட பதினைந்து தொழிலாளர்களுக்கு இனி வேலை தரமாட்டோம்'' எனக் கூறி, தங்களின் பழி வெறியையும் காட்டிக் கொண்டனர்.

''சலுகை அறிவிப்புகள்'', ''மாவட்டத் தொழிலாளர் நல அலுவலர் முன் பேச்சு வார்த்தை'' என்ற வகையில் கண்துடைப்பு நாடகங்கள் ஒருபுறம் அரங்கேறிக் கொண்டிருக்க, மறுபுறம் கே.ஜி. நிர்வாகம், ''புதிதாக ஆட்களை நியமித்து தொழிற்சாலையை இயக்கலாம்'' என்ற நீதிமன்ற ஆணையைப் பெற்றது. காஞ்சிபுரம், குடும்பனூர் பகுதிகளில் வாழும் தாழ்த்தப்பட்டவர்களிடம் ஆசைகாட்டி வேலையில் சேர்த்துக் கொள்வதற்காக, மாவட்ட லாரி உரிமையாளர் சங்க முன்னாள் செயலர் குருசாமி, ஜெயவீரன் போன்ற கைக்கூலிகளிடம் இலட்சக்கணக்கில் பணத்தை அள்ளி வீசியுள்ளது, ஆலை நிர்வாகம்.

தொழிலாளர்கள் தங்களின் போராட்ட நியாயத்தை பொது மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதன் மூலம் மட்டுமே, நிர்வாகத்தின் இச்சதித்தனத்தை முறியடிக்க முடியும். மேலும், கே.ஜி. நிர்வாகத்தின் பிற ஆலைத் தொழிலாளர்களையும் இணைத்துக் கொண்டு போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு வளர்த்துச் செல்வதும் இன்றைய உடனடிப் பணிகளாகும்.

தகவல்:
தொழிலாளர்கள்,
சாரதா டெர்ரி பிராடக்ட்ஸ்.

**தொழிற்சங்க உரிமைகளுக்காகப் போராடிவரும் சாரதா டெர்ரி பிராடக்ட்ஸ் தொழிலாளர்கள்!**





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 12

இதழ்: 10 - 11

1 ஏப்ரல் '97 - 30 ஏப்ரல் '97

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


## ஓட்டுக் கட்சி அரசியலில் தேக்கநிலை! நாடாளுமன்ற ஜனநாயகத்தின் இறுதி நிலை!!

ஆளும் ஐக்கிய முன்னணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை காங்கிரசுக் கட்சி விலக்கிக் கொண்டுள்ளதைத் தொடர்ந்து, நாடாளுமன்ற ஜனநாயகம் மீண்டும் தீராத நெருக்கடிக்குள் சிக்கித் திணறுகிறது. இதன் விளைவாக உருவாகும் நாடாளுமன்ற அராஜகம், கட்சி மாறுவது - குதிரை வியாபாரம், ஆட்சிக் கவிழ்ப்பு, கட்சிகளின் மறுசேர்க்கை, மறுதேர்தல் ஆகியவை தவிர்க்க முடியாதவையாகி விட்டன.

தம் மீதான வருமான வரி - ஊழல் வழக்குகளிலிருந்து தப்பிக்கவும், பிரதமர் நாற்காலியைக் கைப்பற்றும் நோக்கத்துடனும்தான் காங்கிரசுத் தலைவர் கேசரி, தமது கட்சியின் ஆதரவை விலக்கிக் கொண்டுள்ளார். ''பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் கௌடா தனது மந்திரி சபையுடன் பதவி விலகுவார்; அதன் பிறகு, குடியரசுத் தலைவர் அடுத்த பெரிய கட்சியான தம்மையே ஆட்சியமைக்க அழைப்பார்; ஐ.மு. கட்சிகளைப் பிளவுபடுத்தி, ஒரு பெரும் பிரிவைக் கூட்டணி சேர்த்துக் கொண்டு, காங்கிரசு ஆட்சியைப் பெரும்பான்மையுடன் நிறுவிவிடலாம்'' என்று கேசரி நாற்காலிக் கனவுகளுடன் கணக்குப் போடுகிறார்.

ஆனால் ஐக்கிய முன்னணித் தலைவர்களோ, தமது அரசின் பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டுவதாக உறுதியாக நின்றதும், ஏப்ரல் 11-ஆம் தேதியன்று மக்களவையில் நம்பிக்கை வாக்கு மூலம் நிரூபிக்குமாறு 'குடியரசு'த் தலைவர் பணித்துள்ளார். ''காங்கிரசில் கேசரிக்கு எதிரான நரசிம்ம ராவ், சரத் பவார், கருணாகரன், ராஜேஷ் பைலட் முதலான அதிருப்தி கோஷ்டியினரைத் தமக்கு ஆதரவாகத் திரட்டிக் கொண்டு ஆட்சியைக் காப்பாற்றி விடலாம்; கேசரியைத் தனிமைப்படுத்தி விடலாம்'' என்று ஐக்கிய முன்னணியினர் கணக்குப் போடுகின்றனர்.

''கௌடா அரசு கவிழ்ந்து மறுதேர்தல் வருமானால், காங்கிரசு - ஐ.மு. கட்சிகளிலிருந்து ஒரு பெரும்பிரிவைப் பிளவுபடுத்தி, கூட்டணி கட்டிக் கொண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்கலாம்'' என்று பாரதீய ஜனதா கட்சி நாற்காலிக் கனவு காண்கிறது.

தற்போதைய நாடாளுமன்ற மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையான 543-இல் ஐ.மு. கட்சிகளின் பலம் 196. அது தனது பெரும்பான்மையை நிரூபிக்க இன்னும் 86 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. அதேபோல 140 உறுப்பினர்களைக் கொண்டுள்ள காங்கிரசுக்கு, தனது பெரும்பான்மையை நிரூபிக்க 132 அங்கத்தினர்களின் ஆதரவு தேவை. 193 உறுப்பினர்களைக் கொண்டுள்ள பாரதீய ஜனதாவுடன் பகுஜன் சமாஜ் கட்சியின் 11 எம்.பி.க்கள் சேர்ந்தாலும், அது பெரும்பான்மையை நிரூபிக்க இன்னும் 73 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

பாரதீய ஜனதா கட்சி கேசரியை ஆதரித்தால், காங்கிரசு ஆட்சியமைக்கலாம். ஆனால் வகுப்புவாத எதிர்ப்பு நாடகமாடிவரும் காங்கிரசு அவ்வாறு கூட்டணி சேர வாய்ப்பில்லை. ஒருக்கால் அவ்வாறு சேர்ந்தால் காங்கிரசின் வாழ்வே முடிந்துவிடும்.

காங்கிரசு - பா.ஜ.க. - ஐக்கிய முன்னணி ஆகிய மூன்று அணிகளுக்கு வெளியிலுள்ள உதிரிக் கட்சிகள், சுயேச்சைகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஏதாவது ஒரு அணியில் சேர்ந்தாலும்கூட, தனிப் பெரும்பான்மை பெறவோ, ஆட்சியமைக்கவோ வழியில்லை. காங்கிரசு - தேசிய முன்னணியிலிருந்து ஒரு பெரும் பிரிவைப் பிளவுபடுத்தி, தம்பக்கம் இழுத்து, பா.ஜ.க. தனித்து ஆட்சியமைக்கவும் இப்போதைக்கு வழியில்லை. பொதுத் தேர்தல் முடிந்த பிறகு பாரதீய ஜனதா மேற்கொண்ட இந்த முயற்சி ஏற்கனவே தோற்றுப்போய், 13 நாட்களில் வாஜ்பாயி அரசு கவிழ்ந்து விட்டது. இப்போது பாரதீய ஜனதாவுடன் பகுஜன் சமாஜ் கட்சி சந்தர்ப்பவாதமாகக் கூட்டணி சேர்ந்திருந்தாலும், தனிப் பெரும்பான்மை பெற அது போதாது.

அதே சமயம் காங்கிரசும், தேசிய முன்னணியும், 'இடதுசாரி' முன்னணியும் கூட்டுச் சேராமல், தனித்தனியே ஆட்சியமைக்கவும் வழியில்லை. வகுப்புவாதக் கட்சியான பாரதீய ஜனதாவை அதிகாரத்துக்கு வரவிடாமல் தடுப்பதும் மதச்சார்பற்ற அரசமைப்பதும்தான் தம் நோக்கம் என்று இக்கட்சிகள் கூறினாலும், இவர்கள் கூட்டுச் சேர்ந்து அரசமைக்க முடியாதபடி, தனி நபர் - கோஷ்டி நலன்கள் தடையாக நிற்கின்றன. தற்காலிகமாகச் சமரசம் ஏற்பட்டு, ஏதாவது ஒரு கூட்டணி அரசு அமைந்தாலும்கூட, பதவிவெறி - கோஷ்டிப் பூசல்களால் அது விரைவிலேயே கவிழ்ந்து மறுதேர்தல் வருவது தவிர்க்க முடியாததாகி விட்டது.

ஆனால் மறுதேர்தல் வந்தாலும் திரிசங்கு - தொங்கு நிலையையே ஏற்படுத்தும் என்பது நிச்சயமாகி விட்டது. ஏனெனில் பல்வேறு சாதி, மத, இன மற்றும் பிராந்திய ரீதியில் பன்முகமானதாகவும், ஏற்றத்தாழ்வானதாகவும் இந்தியா உள்ளதால், இவை தேர்தல்களிலும் பிரதிபலித்து, நாடாளுமன்ற தொங்குநிலையை ஏற்படுத்துகிறது. இந்த வேறுபாடுகளைக் கடந்த அரசியல் - பொருளாதாரத் திட்டங்களோ, கவர்ச்சிகரமான தலைமையோ கொண்ட அகில இந்தியக் கட்சிகள் எதுவுமே இல்லை. நூறாண்டு கண்ட தேசியக் கட்சியாகக் கூறிக்கொள்ளும் காங்கிரசே, மாநில - பிராந்தியக் கட்சியாகச்

www.padippakam.com

சுருங்கிப் பிளவுபட்டுக் கிடக்கிறது. அதே போல பாரதீய ஜனதாவும் வட மாநிலங்க ளைத் தாண்டாத கட்சியாகி, அதுவும் கோஷ்டி மோதல்களால் பிளவுபட்டுக் கிடக்கிறது.

ஒருவேளை சந்தர்ப்பவாதக் கூட்ட ணிகள் மூலம் பாரதீய ஜனதா பெரும் பான்மை பெற்றால், அது நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கே சாவுமணி அடிப்பதாகி விடும்; இந்து மதவெறி பாசிசத்துக்கே வழி வகுக்கும் என்று சொல்லத் தேவை யில்லை. மறுபுறம், காங்கிரசு அல்லது ஐ.முன்னணியின் நித்திய கண்ட அரசு அமைந்து, நாடாளுமன்ற தொங்குநிலை - சிறுபான்மை அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவு என்ற நிலை மீண்டும் ஏற்படுமா னால், மீண்டும் அது கவிழ்ந்து விரைவி லேயே அது ஒரு பாசிச அல்லது இராணுவ சர்வாதிகாரத்துக்கே வழிவகுக்கும்.

அரசியலில் நிரந்தர எதிரியுமில்லை; நண்பனுமில்லை என்கிற பிழைப்புவாதக் கொள்கையின்படி, தற்போதைய நெருக்க டியிலிருந்து கௌடா அரசைக் காப்பாற் றும் முயற்சியில் ஐ.மு. தலைவர்கள் எதிர்க் கட்சிகளுடன் கூச்சநாச்சமின்றி பேரங்கள் - பேச்சுவார்த்தைகளைத் தொடருகின்ற னர். குறிப்பாக, 'மார்க்சிஸ்டு' கட்சிப் பொதுச் செயலாளரான சுர்ஜித் வெளிப்ப டையாகவே காங்கிரசு, பாரதீய ஜனதா வுடன் பேரங்கள் நடத்தும் தரகராகச் செயல்படுகிறார். ''கௌடாவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, மூப்பனார் அல்லது ஜோதி பாசுவை பிரதமராக்குவது; கேசரி மற்றும் காங்கிரசு பெருச்சாளிகள் மீதான ஊழல் வழக்குகளை முடக்கி வைப் பது; கேசரியை 'குடியரசுத் தலைவர்' பதவி யில் அமர்த்துவது'' எனச் சமரசத் திட்டங் கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் இச் சமரசத் தீர்வுகளும், பேரங்களும் எத்தனை நாளைக்கு நீடிக்கும் என்பதற்கு உத்திரவா தமே இல்லை.

தற்போதைய நாடாளுமன்ற அராஜக - அரசியல் நெருக்கடிக்குத் தீர்வாக, ஆளும் தரகு அதிகார முதலாளிகள் மறு தேர்தல் நடத்தி, பந்தயக் குதிரை மீது பணம் கட்டிச் சூதாடுவதற்குத் தயாராக இல்லை. ''சிதம்பரத்தின் புரட்சிகரமான பட்ஜெட்டால் ஏற்படும் 'வளமான' முன் னேற்றத்தைத் தடுத்துவிடக் கூடாது; பொருளாதாரக் குதிரையை அரசியல் வண்டிக்குப் பின்னால் பூட்ட முயற்சிக்கா தீர்கள்'' என்று அவர்கள் கோருகின்றனர். தற்போதைய அரசியல் நெருக்கடியால் பங்குச் சந்தையில் பெரும் சரிவு ஏற்பட்டுள் ளதைக் காட்டி எச்சரிக்கின்றனர். இத னாலேயே

சி. சுப்பிரமணியம் முதலான தரகு முதலா ளித்துவ மூதறிஞர்கள், ''பொருளாதார நலன்களைக் கணக்கில் கொண்டு, அனைத் துக் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய அரசு அமைய வேண்டும்'' என்று ஆலோ சனை கூறுகின்றனர்.

ஏனெனில், ராவ் - மன்மோகன் சிங் கும்பலால் நடைமுறைப்படுத்தப்பட்டு, ப. சிதம்பரத்தால் தீவிரமாக்கப்பட்டுள்ள புதிய பொருளாதாரக் கொள்கையில் எந் தக் கட்சிக்கும் அடிப்படையில் வேறுபாடு கிடையாது. நிலையான ஆட்சியோ - நிலையற்ற ஆட்சியோ, ஒரு கட்சி ஆட் சியோ - கூட்டணி ஆட்சியோ, தனியார் மயம் - தாராளமயம் - உலகமயம் - நாட்டை மறுகாலனியாக்குதல் என்கிற அடிப்படைக் கொள்கையில் எல்லாக் கட்சி களுமே ஒன்றுபடுகின்றன. எத்தகைய ஆட்சி வந்தாலும் இக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ப, தயார் நிலையில் அரசு எந்திரமும் கட்டியமைக் கப்பட்டுள்ளது. இருப்பினும், புதிய பொரு ளாதாரக் கொள்கையின் சுமைகளை மக் கள் மீது சுமத்திக் கட்டுப்படுத்தவும், திசை திருப்பவும் ஆளும் வர்க்கங்களுக்கு நாடா ளுமன்ற போலி ஜனநாயக ஆட்சிமுறை அவசியமாக உள்ளது. அதேசமயம் இந்த ஏற்பாடு தொடர முடியாத அளவுக்கு நாடாளுமன்ற அராஜகம் முற்றும்போது, பாசிச அல்லது இராணுவ சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கு அவர்கள் தயங்க மாட்டார் கள். இது முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயக அரசியலின் தவிர்க்கவியலாத அங்கமாக உள்ளது.

''நிலையான ஆட்சியை எங்களால் தான் தரமுடியும்'' என்று காங்கிரசு, பாரதீய ஜனதா, ஐக்கிய முன்னணி கட்சிகள் பெருங்கூச்சல் போட்டு வருகின்றன. ஆனால், யாருக்கு வேண்டும் நிலையான ஆட்சி? நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை மையை முன்னேற்றவோ, அல்லது குறைந் தபட்சம் இன்றைய ஏழ்மை நிலையிலி ருந்து சரிந்துவிடாமல் காப்பதற்கோ எந்த வொரு ஓட்டுக் கட்சியின் நிலையான ஆட் சியாவது பயன்பட்டதுண்டா? தற்போ தைய அரசியல் - பொருளாதார அமைப்பு நீடிக்கும்வரை, நிலையான ஆட்சி என்பது உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டி, ஆளும் வர்க்கங்களுக்குச் சேவை செய்யத்தான் பயன்படும்.

ஆகவே, நிலையான ஆட்சி அமைய வேண்டும் என்பதில் உழைக்கும் மக்கள் கவலை கொள்ளவோ, அக்கறை கொள் ளவோ தேவையில்லை. இன்றைய அரசி யல் அமைப்புக்குள்ளாகவே தீர்வைத் தேடி, கேடுகெட்ட நாடாளுமன்ற ஜனநாய கத்தைக் கட்டிக் காக்க வேண்டிய அவசிய முமில்லை. நமக்குப் பயன்படாத, நமக்கே எதிரான இந்த அரசியல் பொருளாதார அமைப்பையே தூக்கி எறிந்துவிட்டு, நமக்கு அவசியமான மாற்று அரசியல் அமைப்பை நிறுவிக் கொள்வதைத் தவிர வேறு வழியுமில்லை. கிராமங்கள் மற்றும் ஆலைகளிலிருந்து உழைக்கும் மக்களே நேரடியாக நிர்வாகம் செலுத்தும் ஒரு புதிய ஜனநாயக அரசியலமைப்பு முறை தான் தேசிய ஒருமைப்பாடு, முன்னேற்றத் துடன் கூடிய நிலையான ஆட்சியைத் தர முடியும்.

* * *

## சட்டபூர்வ ரௌடிக் கும்பலாக வத்திராயிருப்பு போலீசு

இராசபாளையம் பகுதி விவசாயிகள் விடுதலை முன்ன ணியைச் சேர்ந்த தோழர்கள் கணபதியும் சேகரும் பொதுக்கூட் டம் நடத்த போலீசின் அனுமதி வாங்குவதற்காக வத்திராயி ருப்பு காவல் நிலையத்திற்குச் சென்றுள்ளனர். அந்நிலையத் தில் உதவி ஆய்வாளராகப் பணியாற்றும் காக்கிச் சட்டை ரௌடி, அனுமதி கேட்கச் சென்ற தோழர்களை எவ்விதக் காரண முமின்றி மிருகத்தனமாகத் தாக்கியுள்ளான்.

''பொதுக்கூட்ட அனுமதி கேட்கும் அளவிற்கு வந்திட்டீங் களாடா? ஊர் முழுவதும் எழுதி வைத்திருக்கீங்களே யாரைக் கேட்டுடா எழுதினீங்க? உங்களை ஒழிப்பதுதான்டா என் வேலை; நான் அடிக்கிறேன், நீங்க என்ன வேண்டுமானாலும் செய்யுங்க; ...உங்களால ஒன்னும் புடுங்க முடியாது'' - இவை யெல்லாம் அந்த உதவி ஆய்வாளரின் வாயில் இருந்து வெளி வந்த 'முத்துக்கள்'; நாக்கூசும் ஆபாச வார்த்தைகளால் தோழர் களை இழிவுபடுத்தித் தாக்கி, துரத்தியடித்தது அம்மனித மிரு கம்.

தாக்கப்பட்டவர்களுள் தோழர் கணபதி எழுபது வயதைக் கடந்த முதியவர். இவர் தற்பொழுது சிகிச்சைக்காக மதுரை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ''வயதுக்கு மரியாதை தரவேண்டும்'' என்ற சாதாரண மனித நாகரிகம் கூடத் தெரியாத இக்காட்டுமிராண்டிக் கும்பலிடமா உயர்ந்த மனித உரிமைகளை எதிர்பார்க்க முடியும்? பாசிச ஜெயா ஆட்சி யானாலும் சரி, கருணாநிதி ஆட்சியென்றாலும் சரி, போலீசின் அணுகுமுறை மாறப் போவதில்லை. அது என்றுமே சட்டபூர்வ கிரிமினல் கும்பல்தான்; புரட்சியாளர்களுக்கும், உழைக்கும் மக் களுக்கும் எதிரானதுதான்.

வத்திராயிருப்பு போலீசின் அராஜகத்தைக் கண்டித்து, இரா சபாளையம் பகுதியெங்கும் வி.வி.மு. தோழர்களால் உடனடியா கச் சுவரொட்டி இயக்கம் எடுக்கப்பட்டது. மேலும், இம்மனித உரிமை மீறலைத் தமிழகமெங்கும் அம்பலப்படுத்தி, ம.க.இ.க. - பு.மா.இ.மு. - வி.வி.மு. தோழர்கள் பிரச்சாரம் செய்து வருகின்ற னர்.

தகவல்:
மக்கள் கலை இலக்கியக் கழகம்,
புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி,
விவசாயிகள் விடுதலை முன்னணி,
தமிழ்நாடு.



படிப்பகம்

www.padippakam.com

## பாரதீய ஜனதா - பகுஜன் சமாஜ் கூட்டணி ஆட்சி

# அரசியல் விபச்சாரம்

"தேர்தலில் ஒன்றையொன்று எதிர்த்துப் போட்டியிட்ட கட்சிகள் பாரதீய ஜனதாவை ஆட்சிக் கட்டிலில் இருந்து விலக்கி வைக்க வேண்டும் என்பதற்காகவே அமைத்துள்ள சந்தர்ப்பவாதக் கூட்டணி" என பாரதீய ஜனதா அடிக்கடி ஐக்கிய முன்னணியை இடித்துப் பேசும். உத்திரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதா - பகுஜன் சமாஜ கட்சிகளின் கூட்டணி ஆட்சி அமைந்த பின், ஐக்கிய முன்னணியை விமர்சிக்கும் தகுதியற்றதாகி விட்டது பாரதீய ஜனதா. இவ்விரண்டு கட்சிகளுமே உ.பி. சட்டசபைத் தேர்தலில் ஒன்றையொன்று எதிர்த்துப் போட்டியிட்டவை; மேலும், முலயம் சிங் யாதவ் உ.பி. முதல்வராகி விடக்கூடாது என்ற பொது நோக்கும்(!) இக்கூட்டணிக்கு உண்டு.

உ.பி.யின் சட்டசபை தேர்தல் முடிவுகள் வெளியாகி, தொங்குநிலை என்ற நிலை உருவானவுடனேயே பாரதீய ஜனதாவின் ஒரு கோஷ்டி கன்சிராமின் பகுஜன் சமாஜ் கட்சியுடன் கூட்டணி சேர்ந்து ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துவிடத் துடித்தது. இக்கோஷ்டியின் நாற்காலிக் கனவுகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்தார், பா.ஜ.க.வைச் சேர்ந்த உ.பி.யின் முன்னாள் முதல்வர் கல்யாண் சிங். இக்கோஷ்டிப் பூசலை, கொள்கைப் போராட்டமாக யாரும் எண்ணிவிட வேண்டாம். அக்கட்சியின் பார்ப்பனர் - தாகூர் மேல் சாதியினருக்கும், 'பிற்படுத்தப்பட்ட' சாதியினருக்கும் இடையே அதிகாரத்துக்காக நடந்த நாய்ச் சண்டைதான் இது.

கல்ராஜ் மிஸ்ரா, லால்ஜி டாண்டன் போன்ற பா.ஜ.க. மேல்சாதித் தலைவர்கள், தாழ்த்தப்பட்ட கன்சிராமுடன் கூட்டணி சேர்ந்து கல்யாண் சிங்கை ஒதுக்கிவிடத் துடித்தனர். 'பிற்படுத்தப்பட்ட' கல்யாண் சிங்கோ மேல்சாதியினர் தனது தலைமையை ஏற்றுக் கொள்ள நிர்பந்தம் கொடுத்தார். இறுதியில் பா.ஜ. கட்சிக்குள் மேல் சாதியினரின் கை ஓங்கி, பார்ப்பனர் - தாகூர் மற்றும் தாழ்த்தப்பட்டவர் தலைமையில், ஒட்டு ரக இந்து ராஷ்டிர கூட்டணி ஆட்சி அமைந்துள்ளது.

இந்த ஒட்டு ரக கூட்டணிக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த கல்யாண் சிங், தனது தலைமையில் இந்து ராஷ்டிரத்தை அமைப்பதற்காக காங்கிரசின் வழியில் குதிரை வியாபாரத்தில் இறங்கினார். பகுஜன் சமாஜ் கட்சி, காங்கிரசு, திவாரி காங்கிரஸ், அஜித் சிங்கின் பாரதீய விவசாயிகள் கட்சியில் இருக்கும் பிற்படுத்தப்பட்ட எம்.எல்.ஏ.க்களைத் தன்பக்கம் இழுத்து, சட்டசபையில் பெரும்பான்மையைக் காட்டிவிட முனைந்தார். பா.ஜ.க. குறி வைத்திருந்த அந்த எம்.எல்.ஏ.க்கள், "உ.பி. மாநில ஆளுநர் ரொமேஷ் பண்டாரி பா.ஜ.க.வை ஆட்சி அமைக்க அழைத்தால், தாங்கள் கட்சி தாவத் தயார்" என நிபந்தனை விதித்தனர். ஆனால், முலயம் சிங்கின் பினாமியாக மாநிலத்தை ஆண்டு வந்த ஆளுநர் பண்டாரி, பா.ஜ.க.வை ஆட்சி அமைக்கும்படி அழைக்க மறுத்துவிட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த பா.ஜ.க., "உ.பி.யில் அரசியல் மற்றும் சாதிப் படுகொலைகள், வழிப்பறிக் கொள்ளை, கற்பழிப்பு போன்ற கிரிமினல் குற்றங்கள் பெருகி வருவதையும், ஆளுநர் பண்டாரியின் உல்லாச-ஊதாரித்தன வாழ்வையும்" சுட்டிக்காட்டி, பண்டாரியை ஆளுநர் பதவியில் இருந்து நீக்கப் பாராளுமன்றத்தில் தீர்மானமொன்றைக் கொண்டு வந்தது. இதனிடையே காதும் காதும் வைத்தாற்போல் பா.ஜ.க. - பகுஜன் சமாஜ் கூட்டணி உருவாகிவிடவே, "எங்கள் குறிக்கோள் நிறைவேறிவிட்டதாக"க் கூறித் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டது அக்கட்சி. இதன் மூலம், "மக்கள் நலன் என்பதை விட, அதிகார நாற்காலிதான் எங்கள் இலட்சியம்" என்பதைப் பச்சையாகவே காட்டிக் கொண்டு விட்டனர், இந்து மத வெறியர்கள்.

தேர்தல் முடிவுகளின் பின் பகுஜன் சமாஜ் கட்சியின் துணையின்றி எந்தவொரு கட்சியும் ஆட்சியில் அமர்ந்துவிட முடியாது என்று உருவான நிலை, கன்சிராமின் சந்தர்ப்பவாத பேரத்திற்கு வசதியாய் அமைந்தது. பாரதீய ஜனதாவில் கல்யாண் சிங்கின் கை ஓங்கியிருந்த பொழுது, "அக்கட்சியை ஆட்சி அமைக்க அழைக்கக்கூடாது" என ஆளுநருக்கு கடிதம் எழுதினார், மாயாவதி உ.பி.யில் சமீபத்தில் நடந்த பாராளுமன்ற மேல்சபை உறுப்பினர்கள் தேர்தலின் பொழுது, ஐக்கிய முன்னணி, காங்கிரசு, பகுஜன் சமாஜ் கட்சி - மூன்றும் கூட்டணி அமைத்து பா.ஜ.க.வைத் தோற்கடித்தன. இத்தோல்வியால் கல்யாண் சிங் துவண்டு விழ, பா.ஜ.க.வும், பகுஜன் சமாஜ் கட்சியும் தேனிலவுக்குத் தயாராயின.

"வருடத்தில் ஆறு மாதம் மாயாவதியும், அடுத்த ஆறு மாதம் கல்யாண் சிங்கும் முதல்வர் பதவியை வகிப்பர்" என ஒரு புதிய விக்கிரமாதித்தன் கதையை எழுதத் தொடங்கியுள்ளது, அக்கூட்டணி. இரு வருடங்களுக்கு முன்பு, உ.பி.யில் பகுஜன் சமாஜ் கட்சியின் ஆட்சிக்கு கொடுத்த ஆதரவை பா.ஜ.க். விலக்கிக் கொண்டபொழுது, மாயாவதி அக்கட்சியை, "தாழ்த்தப்பட்டோருக்கும், ஏழைகளுக்கும் எதிரி" என விமர்சித்தார். புராணக் கதையில் நரி பரியானதைப் போல, இன்று பா.ஜ.க. ஏழைப் பங்காளன் ஆகிவிட்டது போலும்!

உ.பி. தேர்தலில் ஓட்டுப் பொறுக்குவதற்காக, மனுவாதக் கட்சி என்று தன்னாலேயே முத்திரை குத்தப்பட்ட காங்கிரசுடன் கூட்டணி சேர்ந்து கொண்டார், கன்சிராம். இப்பொழுது முதல்வர் நாற்காலியில் மாயாவதியை அமர்த்த, காங்கிரசைக் கைவிட்டு, மற்றொரு மனுவாதக் கட்சியான பா.ஜ.க.வுடன் சேர்ந்து கொண்டுள்ளார், அவர். இடையே, ஐக்கிய முன்னணியுடனும் கூட்டு வைத்துக் கொண்டு மேலவை எம்.பி. பதவிகளைப் பொறுக்கிக் கொண்டார்.

பதவி - அதிகாரத்தைக் கைப்பற்ற எந்தக் கழுதையின் மீதும் ஏறி மாறி மாறி சவாரி செய்து வரும் கன்சிராமுக்கு சந்தர்ப்பவாதமே கொள்கை; தனது சுயநலன் ஒன்றே குறி. சிறிதளவுகூட கொள்கை நாணயமற்ற இக்கும்பல் தாழ்த்தப்பட்டோர் விடுதலை பற்றிப் பேசுவது எல்லாம் மோசடிதான். கன்சிராம் கும்பலின் இச்சந்தர்ப்பவாத சதிராட்டம் இதோடு நின்றுவிடப் போவதில்லை. நாடு முழுவதும் செல்வாக்கு செலுத்தக் கூடிய ஓட்டுக் கட்சிகள் இன்று ஏதுமில்லாததால், தொங்கு நிலை அபாயம் இந்திய நாடாளுமன்ற அரசியலை ஆட்டிப் படைக்கத் தொடங்கிவிட்டது. எனவே, இனிவரும் தேர்தல்களிலும், தனக்கு வாக்களித்த தாழ்த்தப்பட்டவர்களின் நலன்களை அடகு வைத்து அரசு பதவி - சன்மானங்களைப் பெற கன்சிராம் தயங்கப் போவதில்லை.

இக்கூட்டணி எத்தனை நாள் நீடிக்கும் என்பது இரு கட்சிகளுக்கும் முக்கியமானதல்ல. விரைவில் பாராளுமன்றத்துக்குத் தேர்தல் வரும் என எதிர்பார்க்கும் பா.ஜ.க., பாராளுமன்றத் தொகுதிகள் அதிகமுள்ள இம்மாநிலத்தில் இக்கூட்டணி மூலம் தனது சமூக அடித்தளத்தை விரிவாக்கிக் கொள்ள மீண்டும் ஒரு முயற்சியினை எடுத்துள்ளது. மேலும், இரு கட்சிகளும் பதவியேற்றவுடனேயே தங்கள் சாதிகளைச் சேர்ந்த அதிகாரிகளை முக்கியமான பதவிகளில் இடமாற்றம் செய்து, விரைவில் தேர்தல் வரும் பட்சத்தில், தேர்தல் வெற்றியை உறுதி செய்துகொள்ளும் தகிடுதத்தங்களிலும் இறங்கியுள்ளன. உ.பி.யில் ஓட்டுக் கட்சிகள் மட்டுமல்ல, அதிகார வர்க்கமும் சாதிரீதியாகப் பிளவுண்டு கிடக்கிறது.

ஓட்டுக் கட்சி அரசியலின் வெற்றியும் தோல்வியும் சாதிக் கூட்டணிகளின் சேர்க்கை - மறுசேர்க்கையைப் பொருத்துதான் அமைகின்றன என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. மண்டல் ஆதரவாளர்கள் இதை "தாழ்த்தப்பட்டவர் - பிற்படுத்தப்பட்டவர் ஒற்றுமை" எனப் பச்சையாகக் கூறினால், 'கொள்கை'ப் பிடிப்புள்ள பா.ஜ.க. இதை "இந்து ஒற்றுமை" என நாசுக்காகக் கூறுகிறது. ஓட்டுக் கட்சிகளின் பதவி வேட்டைக்காக மாறி மாறி மேலிருந்து உருவாக்கப்படும் இச்சாதி கூட்டணியால், சாதிய முரண்பாடும், மோதலும்தான் தீவிரமாகுமேயொழிய, மண்டல் மற்றும் கமண்டல ஆதரவாளர்களின் ஒற்றுமை முழக்கங்கள் நனவாகப் போவதில்லை!

• செல்வம்.



படிப்பகம்

www.padippakam.com

# ஆட்சி மாறினாலும்...

**ஆளும்கட்சி அரசியல்வாதிகள் – போலீசு – அதிகாரிகள் துணையோடு கள்ளச் சாராய விற்பனை, சந்தன மரம் – அரிசி கடத்தல் போன்ற சட்டவிரோதத் தொழில்களும், இலஞ்ச – ஊழல் அதிகார முறைகேடுகளும், கொட்டடிக் கொலைகளும் கருணாநிதியின் ஆட்சியிலும் தடையின்றித் தொடர்கின்றன.**

''ஆண்டவனே வந்தாலும் இவற்றை நிறுத்த முடியாது. ஆட்சி வருவதும், போவதும் இந்த விஷயத்தில் எந்த மாற்றத்தையும் உருவாக்குவதில்லை'' - இப்படிச் சொல்பவர்கள், ''எவன் ஆட்சிக்கு வந்தாலும் இப்படித்தான், யாராலும் ஒன்னும் செய்துட முடியாது'' என்று சலித்துக் கொள்ளும் திருவாளர்கள் ''பொது ஜனம்'' அல்ல. திருந்தவே திருந்தாத போலீசு அதிகாரிகள்.

''அரசியல்வாதிகள் யார் வந்தால் என்ன? எங்களுக்கு அதிகாரிகள்தான் ஏஜென்டுகள். அவர்களைச் சரி செய்தாலே வேலையைக் கச்சிதமாக முடித்து விட முடியும்'' என்று அசைக்க முடியாத நம்பிக்கையோடும் திமிரோடும் எக்காளமிடுகின்றனர், சந்தன மரக் கடத்தல் வேலை செய்து வரும் முதலாளிகள்.

''ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லை'', ''புதிய ஆட்சியிலும் தொடரும் கொடுமை'' என்று ஒரு செய்தித் தொடரே தொடங்கி எழுதி வருகிறது, ஆளுங்கட்சி ஆதரவு வாரமிருமுறை ஏடு ஒன்று.

கடந்த ஆட்சியில் இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், அக்கிரமங்கள் - அட்டூழியங்களில் ஈடுபட்டவர்களில் சிலர் மாட்டிக் கொண்டாலும், பலர் இன்னும் அதே அதிகாரத்துடன் தி.மு.க. அரசில் செயல்படுகின்றனர். இதற்குக் காரணம், ''அறியாமையா அல்லது அட்ஜஸ்ட்மெண்டா (ஒருவருக்கொருவர் இசைந்து போவதா) என்று சந்தேகம் எழுகிறது'' என்று எழுதுகிறது, இன்னொரு வாரமிருமுறை ஏடு.

இதுதான் நிலைமை இந்த ஆட்சியிலும்!

- ☆ சந்தன மரக் கடத்தல், கருங்கல், மணல் கொள்ளையடித்தல், அரிசி கடத்தல்.
- ☆ கள்ளச் சாராயத் தொழில் பெருக்கம், மாமூல் வசூல், விஷச் சாராயச் சாவுகள்.
- ☆ கூட்டுறவுத் துறை ஊழல்கள், இலவச வேட்டி சேலை மோசடி, வெள்ளம் - வறட்சி நிவாரண மோசடிகள்.
- ☆ தாழ்த்தப்பட்ட - ஆதிவாசி மக்கள் மீது படுகொலைத் தாக்குதல்கள், கற்பழிப்புகள், போலீசு நிலையச் சித்திரவதைக் கொலைகள்.

இப்படி ஒரு பட்டியலை அடுக்கிக் கொண்டே போகலாம். இவையெல்லாம் பத்திரிகைகளில் தினமும் வருபவைதாம்.

இவைதவிர சாதிக்கோ, சாவுக்கோ சான்றிதழ் கேட்டுப் போனாலும் சரி, விற்பனை வரிக்கும், வருமான வரிக்கும் சோதனை வந்தாலும் சரி, உதவித் தொகைக்கோ அரசு நிறுவனக் கடனுக்கோ மனுப் போட்டாலும் சரி, மின்சார இணைப்புக்கும் சாக்கடை குடிநீர் இணைப்புக்கும் விண்ணப்பித்தாலும் சரி, எங்கும் எதிலும் இலஞ்ச ஊழல் இல்லாமல் காரியம் நடக்காது என்பதுதான் நிலை.

''எவன் ஆட்சிக்கு வந்தா எனக்கென்ன? எங்கள ஒன்னும்...... முடியாது? சும்மாவா வேலைக்கு வந்தோம். நாங்களும் குடுத்துட்டுத்தான் இந்த இடத்துக்கு வந்திருக்கோம். அவனவனுக்கு வெட்ட வேண்டியதை வெட்டினாத்தான் வேலை நடக்கும். இல்லையானால் உன்னால ஆனதைப் பார்!'' என்ற திமிர்வாதம்தான் ஆட்சி நடத்துகிறது.

ஜெயலலிதா - சசிகலா கும்பலின் மீது எடுக்கப்படும் கிரிமினல் குற்ற விசாரணை நடவடிக்கைகள் எதுவும் அதிகார - அரசு அமைப்பைத் திருத்திப் பாடம் புகட்டுவதாக இல்லை. ''இலஞ்ச ஊழலை ஒழித்துக் கட்டுவேன், நிர்வாக அமைப்பைச் சீரமைப்பேன்'' என்று கருணாநிதி அடிக்கும் சவடால், மேலும் மேலும் இலஞ்ச ஊழலும் அதிகார முறைகேடுகளும் அதிக்கிரமங்களும் பெருகவே பயன்படுத்தப்படுகின்றன.

''முன்பு மாதிரி இல்லை. கெடுபிடி அதிகமாகி விட்டது. பாதிப்பை எதிர்பார்த்துக் (ரிஸ்க் எடுத்து) காரியத்தை முடிப்பதால் இன்னும் அதிகமாகக் கொடு!'' என்று பேரத்தை வலுவாக நடத்துவதற்கே வழி வகுக்கிறது.

''கள்ளச் சாராயப் பானைகளின் மீது துப்பாக்கிக் குண்டுகள் பாயும்'' என்று வீராவேசமாகச் சூளுரைத்தார் கருணாநிதி. மதுவிலக்கு அமலாக்கப் போலீசுப் பிரிவைக் கலைத்து விட்டு, நேரடி நடவடிக்கையில் சட்ட - ஒழுங்கு போலீசை இறக்கி விட்டார். அதனால் கள்ளச்சாராயத் தொழில் நின்று போனதா? அதற்கு மாறாக, பகிரங்கமாகவும், பன்மடங்கும் பெருகிவிட்டது. ''கருணாநிதி ஆட்சிக்கு வந்தாலே இப்படித்தான்! '' என்று தாய்க்குலங்கள் தூற்றுகின்றன.

கள்ளச் சாராயம் காய்ச்சவும் விற்கவும் மறுக்கும் முன்னாள் வியாபாரிகளை மிரட்டியும், தாக்கியும் மீண்டும் தொழிலில் ஈடுபடும்படி போலீசாரே நிர்ப்பந்திப்பது அதிகரித்து விட்டது. ஊரல் போட்டு கள்ளச் சாராயம் காய்ச்சுவதும், விற்பதும் நேரடி புகைப்படச் செய்தியுடன் வந்தும் போலீசு நடவடிக்கை எடுக்க மறுக்கிறது. வழக்கம் போலத் தொழிலில் ஈடுபடவும், மாமூல் தரவும் தயங்கும் - மறுக்கும் பல சிறு வியாபாரிகளை போலீசுக்காரர்களே அடித்துக் கொல்லும் சம்பவங்களும் அதிகரித்து விட்டன.

மதுரை மாவட்டம் சேடப்பட்டி தொகுதி கோடங்கிப்பட்டியில் மாமூல் வசூலிக்கக் கிளம்பிய போலீசுப் படை, சாராயம் கடத்திய பெருமாள் தேவனைப் பிடித்தது. புது வியாபாரியான அவன், உடனே மாமூல் தர முடியாததால், அடித்துக் கொல்லப்பட்டான். ஆத்திரமடைந்த மக்கள் போலீசு நிலையத்தையும் போலீசுக்காரன்களையும் தாக்கி, கலவர நிலை எழுந்தபோது விசாரணைக்கு உத்தரவிட்டது அரசு.

இதே போல சாராய வியாபாரி ஒருவர் திருவோணம் போலீசு நிலையத்திலும், தஞ்சை அருகே திருக்காட்டுப்பள்ளி போலீசு நிலையத்தில் ராமசாமி என்ற சாராய வியாபாரியும் மாமூல் தரத் தவறியதற்காக அடித்தே கொல்லப்பட்டனர்.

இப்படிப் போலீசே சாராயத் தொழிலை வளர்ப்பதைக் கண்டு வெறுப்பும் ஆத்திரமும் கொண்டுள்ள பொது மக்கள் தாமே நடவடிக்கைகளில் இறங்குவதும், அரசியல்வாதிகள் - போலீசுக்காரர்கள் - கள்ளச் சாராய வியாபாரிகள் எதிர்த்தாக்குதல் தொடுப்பதும்கூட அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. இப்படிப் பட்டதொரு தாக்குதலில் திண்டுக்கல் யாகப்பட்டி மக்கள், சாராய தங்கம் என்ற வியாபாரியை அடித்தே கொன்று விட்டனர். பொது மக்கள் மீது ஆத்திரம் கொண்ட சாராயக் கும்பல் அந்தக் கிராமத்தின் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தி, அனைவரையும் அடித்து விரட்டி விட்டது. குமரி மாவட்டம் அருமனை பகுதி முழுவதும் கள்ளச் சாராயமும் அராஜக ரௌடித்தனமும் தலைவிரித்தாடுவதைக் கண்டு கொதித்துப் போன மக்கள், மாமூல் வசூலிக்கப்போன இரண்டு போலீசுக்காரன்களைப் பிடித்து உதைத்துச் சிறைப் பிடித்தனர். அவர்களை மீட்கப்போன ஆய்வாளர் தலைமையிலான கும்பலையும் சுற்றி வளைத்தனர். வேறுவழியின்றி கள்ளச் சாராயத்தை ஒழிப்பதாக மேலதிகாரிகள் வாக்குறுதியளித்து மீட்டனர்.

சென்னை அருகே சோழவரம் மக்களும், காஞ்சி அருகே சிறுவள்ளூர் மக்களும் கள்ளச் சாராயம் ஒழிப்பு இயக்கத்தைத் துவங்கினர். சிறுவள்ளூரில் பஞ்சாயத்துத் தலைவரும் போலீசும் கூட்டுச் சேர்ந்து அந்த இயக்கத் தலைவியைத் தாக்கி நிர்வாணப்படுத்தி தமது வெறியையும் ஆதிக்கத்தையும் நிலை நாட்டியுள்ளனர். இதற்கெல்லாம் எதிராக விசாரணைக்கு உத்திரவிடுவதும், போலீசுக்காரன்களை எச்சரிப்பதும் தவிர, கருணாநிதி அரசு வேறெதுவும் செய்ய்வில்லை. மந்திரிகள் ஜெனிபர் சந்திரன், வீரபாண்டி ஆறுமுகம் போன்றவர்களின் ஆதரவோடு இத்தொழில் விரிவடையும் போது ஒரு முதல்வர் என்ன செய்து விடுவார்?

கருணாநிதி ஆட்சிக்கு வந்து ஓராண்டு கூட முடியவில்லை. அதற்குள் புதுக்கோட்டை, சேலம், கருங்குளம் முதலிய பகுதிகளில் விஷச் சாராயத்துக்குப் பலர் பலியாகி விட்டனர். கள்ளச் சாராய வியாபாரத்தை மட்டுமல்ல, இன்னும் அதிக போதையேற்றி வசூல் வேட்டையைத் தீவிரமாக்குவதற்காக போலீசுக்காரன்களே விஷச் சாராய வியாபாரத்தை நடத்தும்படி தூண்டுவதாகவும் தெரிகிறது. ஆட்சி மாறினாலும் இந்த அவலம் மாறாத அதே சமயம், விஷச் சாராய சாவுகளையே காரணமாகக் காட்டி, மீண்டும்



படிப்பகம்

www.padippakam.com

மலிவுவிலை மதுக் கடைகளைத் திறந்துவிடு வதற்காகச் சாராய அதிபர்களிடம் கருணாநிதி அரசு பேரம் பேசுவதாகவும் தெரிகிறது.

கள்ளச் சாராயத்துக்கு அடுத்து, கருணாநிதி ஆட்சியில் தொடரும் கொள்ளை சந்தன மரக் கடத்தலிலும் அரிசி கடத்தலிலும் கொடி கட்டிப் பறக்கிறது. 'திருப்பத்தூரில் அரசுக்குச் சொந்தமான சந்தனமரக் கிடங்கில் தீ வைத்து, சுமார் 125 கோடி ரூபாய் மதிப்புடைய சந்தன மரக் கட்டைகளை எரித்த விவகாரமும், ஆற்காடு வீராசாமியின் உறவினர் அரிசி கடத்தலில் ஈடுபட்டிருப்பதாக சட்டப்பேரவையில் தாமரைக்கனி கூறிய புகாரும், அத்திப்பழம் புழுத்து நாறுவதைப் போல, கருணாநிதி ஆட்சியின் உண்மை நிலையை வெளிக் கொண்டு வந்து விட்டன.

சந்தனமரக் கடத்தல் என்றாலே சத்திய மங்கலம் - பர்கூர் காடுகளில் ஒளிந்திருக்கும் வீரப்பன் மீதுதான் மக்கள் கவனம் குவிக்கப் பட்டுள்ளது. ஆனால் சந்தன மரங்கள் ஏராளமாக விளையும் ஜவ்வாது, நீலகிரி, ஏற்காடு - சேர்வராயன், கல்வராயன் மலைப் பகுதிகளில் இருந்து மாதத்துக்கு 500 லாரிகள் வீதம் ஏறக்குறைய 5000 கோடி ரூபாய் மதிப்புடைய சந்தன மரங்கள் கடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள சர்வகட்சி அரசியல்வாதிகளும், வனத்துறை அதிகாரிகள் - ஊழியர்களும், கடத்தல் வியாபாரிகள் - கிரிமினல் கும்பல்களும் கேரளா, கர்நாடகா, ஆந்திர வியாபாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து இந்தக் கொள்ளையை நடத்துகின்றனர். கள்ளச் சாராயம் போலவே மாமூல் வசூலித்துக் கொண்டு, வழக்கமான பறிமுதல்கள் கைது - வழக்குகள் என்று கணக்குக் காட்டி விட்டு காடுகள் மொட்டையடிக்கப்படுகின்றன. பதவியேற்ற புதிதில் சவடால் அடித்த மந்திரி பொங்களூர் பழனிச்சாமி உட்பட இன்றைய ஆளுங்கட்சி பிரமுகர்களும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளி வருகின்றன.




வனத்துறை திமிரிமரத்தூரில் நடத்திய சட்ட விரோத துப்பாக்கி சூட்டில் தங்களது ஒரே மகன் செல்வராசைப் பறி கொடுத்த பெற்றோர். ஜெயா ஆட்சியில் வாச்சாத்தி எனில், கருணாநிதிக்கு ஜவ்வாது மலை - திமிரிமரத்தூர்!

சந்தன மரக் கடத்தலுக்குத் தடையாக இருக்கும் கிராம மக்கள், வனத்துறையில் உள்ள சில ஊழியர்கள் பழிவாங்கப்பட்டு படுகொலை செய்யப்படுவது அடிக்கடி நடக்கிறது. ஜெயா ஆட்சியில் கரூர் அருகே வாச்சாத்தி கிராமத்தில் புகுந்து ஆதிவாசிப் பெண்களைக் கும்பலாகக் கற்பழித்ததைப் போலவே, இந்த ஆட்சியிலும் ஜவ்வாது மலை திமிரிமரத்தூரில் கடந்த ஆகஸ்டு மாதம் அட்டூழியம் புரிந்திருக்கிறார்கள் வனத்துறை அதிகாரிகள். அம்மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தி ஒரு சிறுவனையும் கொன்றிருக்கின்றனர்.

திருப்பத்தூரில் உள்ள அரசுக்குச் சொந்தமான சந்தன மரக் கிடங்கில் இருந்தே திருடிக் கடத்துவதை வனத்துறை அதிகாரிகள் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். கிடங்கின் இருப்பைச் சோதனையிடப் போவதாக அறிந்து கடத்தல்காரர்களும் - அதிகாரிகளுமே தீயிட்டுக் கொளுத்தி விட்டனர். இந்தச் சதிக்குக் காரணமான குற்றவாளிகளைக் கைது செய்து தண்டிப்பதற்குப் பதில் (ஜெயா விவகாரத்தில் கமிசன் தேவையில்லை; தாமதமாகும் என்று நேரடி விசாரணை, கைது, வழக்கு என்று விவரமாக நடவடிக்கை எடுத்த கருணாநிதி) விசாரணைக் கமிசன் போட்டிருக்கிறார். கடும் தண்டனைக்குரிய வழக்குகள் போடுவதற்குப் பதில், கவனக் குறைவு போன்ற தவறுகளுக்கு சில வனத்துறை அலுவலர்களையும் கைது செய்திருக்கிறது. காரணம் செல்வாக்குள்ள நபர்களின் நிர்பந்தம் தான்.

விலைவாசி எகிறிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் சந்தன மரக் கடத்தலைப் போலவே அரிசி, நெல் கடத்தல் முக்கியமான கிரிமினல் தொழிலாகி விட்டது. கோவை, பொள்ளாச்சி, கம்பம் வழியாக கேரளாவிற்குக் கடத்தப்படுகிறது. முன்பு நடராஜன் (சசிகலா) குடும்பம் பினாமிகள் மூலம் நடத்தி வந்ததை, இப்போது சர்வகட்சியினரும் பேதமின்றிச் செய்து வருகின்றனர். முக்கியமாக சபாநாயகர் பழனிவேல்ராஜனுக்கு வேண்டிய தி.மு.க. பிரமுகர் கம்பம் சையது மீரானும், மூப்பனாருக்கு வேண்டிய த.மா.கா. மதுரை எம்.எல்.ஏ. தெய்வநாயகமும் பதுக்கல் கடத்தலில் பிடிபட்டுள்ளனர். அதிலும் தெய்வநாயகம், நியாய விலைக் கடைகளில் விற்கும் அரிசியைப் பதுக்கி வைத்துச் சிக்கினார். சையது மீரான் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், மூப்பனார் ஆளைத் தப்பவிட முயலுகின்றனர்.

ஜெயா - சசி ஆட்சியில் கருங்கல் கடத்தி விற்பது மிகப் பெருமளவில் நடந்தது. அரசு புறம்போக்கு நிலங்களைச் சட்ட விரோதமாக ஆக்கிரமித்து, வரைமுறையின்றிப் பாறைகளை வெட்டி ஏற்றுமதி செய்து, வரி ஏய்ப்பு செய்தனர். இந்த ஆட்சியிலும் இம்மோசடி சேலம், தர்மபுரி, செங்கை, தென்னார்காடு மாவட்டங்களில் தடையின்றித் தொடர்கிறது. ஆற்று மணல் - கடற்கரை மணலைத் திருடி விற்பதும் பெருமளவில் நடக்கிறது.

இதெல்லாம்கூட தலைநகருக்கு வெளியே நடப்பவை. எங்கள் கவனத்துக்கு வராதவை என்று கருணாநிதி கூறிவிடலாம். ஆனால் அவரது கட்சியினர் சூதாட்ட விபச்சார விடுதிகள் (உடற்பயிற்சி, அழகு சாதன நிலையங்கள்), மதுபானக் கடைகள் ஆங்காங்கே திறந்து, உண்மையில் ''சிங்காரச் சென்னை''யாக மாற்றி வருகின்றனர்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு, தூய்மையான ஆட்சி, நிர்வாகச் சீரமைப்பு ஆகிய வாக்குறுதிகளைக் கொடுத்து ஆட்சிக்கு வந்தது தி.மு.க. இதையேதான் காமராஜரின் கரைபடியாத ஆட்சியாகக் காண்பதாகப் புகழ்ந்து தள்ளுகிறது அதன் கூட்டணி கட்சியான த.மா.கா. ஆனால் அன்றாட வாழ்வில் எண்ணற்ற சமூக விரோதக் கிரிமினல் குற்றங்களும், இலஞ்ச ஊழலும் அனைத்து மட்டங்களிலும் ஊடுருவியிருப்பதைக் கண்டு ஆட்சி மாறினாலும்... என்று வெதும்புகிறார்கள் மக்கள்.

தேர்தல்கள் மூலம் ஆட்சியைத்தான் மாற்றிட முடியும். அடுத்த ஐந்தாண்டுகளுக்கு கொள்ளையடிக்கும் கட்சிக் கும்பலைத் தான் மாற்றிட முடியும். அரசு நிர்வாக அதிகார அமைப்பை மாற்றிட முடியாது. அது எப்போதும் போலவே கிரிமினல்மயமான, ஊழல்மயமான அமைப்பாகவே நீடிக்கிறது. இதைத் தாக்கித் தகர்க்காமல் எந்த ஆட்சி வந்தாலும் இந்த நிலைமையே நீடிக்கும்.

• ஆர்.கே.


படிப்பகம்

www.padippakam.com

## வடகிழக்கு மாநிலங்களில் இராணுவ ஆட்சி:

# இந்தியாவில் உள்நாட்டுப் போர்

அஸ்ஸாம் மாநிலத்தில், கடந்த ஆண்டின் இறுதி மூன்று நாட்களிலும் தொடர்ச்சியாக மூன்று குண்டுவெடிப்பு சம்பவங்களை, ''ரா'' வால் உருவாக்கப்பட்ட போடோலாந்து விடுதலைப் புலிப் படையினர் நடத்தினர். இதனால் அஸ்ஸாம் மாநிலமும், பிற வடகிழக்கு மாநிலங்களும் இந்தியாவின் பிற பகுதியில் இருந்து முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டன.

அஸ்ஸாமின் மீது இராணுவத்தின் பிடியை இறுக்குவதற்கு, மைய அரசு இக்குண்டுவெடிப்புச் சம்பவங்களை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டது. ''ஒருங்கிணைந்த அதிகாரம்'' (unified command) என்ற பெயரில், அம்மாநிலத்தின் போலீசு துறையும், பல்வேறு துணை இராணுவப் படைகளும் இராணுவத் தலைமையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இனி, அம்மாநிலத்தின் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையைத் தீர்ப்பதில் கூட இராணுவத்தின் தலையீடு இருக்கும். ஏற்கனவே ''ஆயுதப் படையினர் சிறப்பு அதிகாரச் சட்ட''த்தின் கீழ், மாநில சிவில் நிர்வாகத்திற்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாங்கத்திற்கும் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பின்றி ஆட்டம் போட்டு வந்த இராணுவம், ஒருங்கிணைந்த அதிகாரத்தின்படி சர்வ வல்லமை பொருந்தியதாக உருவெடுத்துள்ளது. ''தீவிரவாதிகளை ஒடுக்க இராணுவத்திற்கு முழுச் சுதந்திரம் வேண்டும்'' என்ற 'தேசிய' வெறியர்களின் கூச்சலுக்கு முழு அங்கீகாரம் அளிக்கப்பட்டு விட்டது.

இந்த ஒருங்கிணைந்த அதிகாரம் மூன்று படிநிலைகளைக் கொண்ட அமைப்பு. தாக்குதல் திட்டங்களை வகுக்கும் முதல் அமைப்பில், இராணுவ மற்றும் மாநில அரசு அதிகாரிகள் பங்கு பெறுவர். இக்குழுவிற்கு மாநிலத் தலைமைச் செயலர் தலைவராக இருப்பார்; தாக்குதல் நடவடிக்கைகளைச் செயலாக்கும் இரண்டாம் குழுவின் தலைமை இராணுவத்தின் கரங்களில் இருக்கும். மூன்றாம் குழு மாவட்ட அளவில் கட்டப்பட்டிருக்கும். அதிகாரங்களை இராணுவத்தின் கரங்களில் மையப்படுத்தத் தயங்கிய அம்மாநில முதல்வர் மகந்தாவைச் சமாதானப்படுத்தியவர், திருவாளர். இந்திரஜித் குப்தா.

அஸ்ஸாமில் தனி நாடு கேட்டுப் போராடும் ''அல்ஃபா'' போராளிகள் தொடங்கி அஸ்ஸாமிய மொழி பத்திரிகைகள் வரை அனைவரும், மாநில அரசின் இப்பாசிச நடவடிக்கையை ''இராணுவ இராச்சியம்'' என்றும், ''அஸ்ஸாம் தேசிய இனத்தை நசுக்கும் முயற்சி'' என்றும் குற்றஞ் சுமத்தினர். அம்மாநிலத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்கள், பல்வேறு இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள் அனைத்தும் கூட்டாக இணைந்து சனவரி 23-ஆம் தேதி கண்டனப் பொதுக்கூட்டமொன்றை நடத்தி, குடியரசு தினத்தைப் புறக்கணிப்பதாக முடிவெடுத்தன. இதன் மறுநாள், அனைத்து அஸ்ஸாம் மாணவர் சங்கம் அழைப்பு விடுத்திருந்த கடையடைப்புப் போராட்டம், மாநிலமெங்கும் வெற்றிகரமாக நடந்தது.

வடகிழக்கிந்தியாவின் மற்றொரு மாநிலமான திரிபுராவில் ''போராக்'' மலைவாழ் மக்களுக்கும், அம்மாநிலத்தில் குடியேறியுள்ள வங்காளிகளுக்கும் இடையே கடந்த மூன்று மாதங்களாக விட்டுவிட்டு நடந்து வரும் இன மோதல்கள் - படுகொலைகளைக் காரணம் காட்டி, அம்மாநிலத்தில் மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகள் எங்கும் ''கலவரப் பகுதி'' சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது, 'மார்க்சிஸ்ட்' அரசு. மேலும், இராணுவத்திற்குத் தடையற்ற அதிகாரம் வழங்கும் ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டமும் அமலுக்கு வந்துள்ளது. இம்மக்கள் விரோதச் சட்டங்களை மீண்டும் அம்மாநிலத்தில் நடைமுறைக்குக் கொண்டுவருவதில், 'மார்க்சிஸ்ட்' கட்சி பொதுச் செயலர் சுர்ஜித் மிகுந்த முனைப்புக் காட்டினார்.

ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டம் இராணுவத்திற்கு அசாதாரண அதிகாரங்களையும், இராணுவ அட்டூழியங்கள், மனித உரிமை மீறல் கிரிமினல் குற்றங்களின் கீழ் இராணுவத்தினரைத் தண்டித்துவிடாதபடி பாதுகாப்பும் அளித்திருப்பதோடு, இச்சட்டம் நடைமுறையிலுள்ள பகுதி மக்களின் வாழ்வுரிமைக்கும் உலை வைத்துவிடும். அதாவது, அரசியல் சாசனப் பிரிவு 21-ன்படி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாழ்வுரிமை, தற்காலிகமாகப் பறிக்கப்படும். அவசர நிலை ஆட்சியில்கூட மறுக்கவியலாத இச்சட்ட பூர்வ உரிமையைப் பறிப்பது, அதைவிடக் கொடூரமான பாசிச சர்வாதிகாரம் அரங்கேறுவதைத்தான் குறிக்கும்.

இச்சட்டத்தின் உட்பிரிவுகளின்படி, இராணுவத்தினர் எந்தவொரு கட்டிடத்தையும் தகர்க்கவும், எந்தவொரு இடத்திலும் நுழைந்து தேடுதல் வேட்டை நடத்தவும், அத்தாட்சி ஏதுமின்றி யாரையும் கைது செய்யவும் உரிமை உண்டு. மேலும், குற்றவாளி எனச் சந்தேகிக்கும் யாரையும் இராணுவக் காவலில் வைக்கலாம். சட்டத்தை மீறுபவர்களின் மீது சுடவும், பலப்பிரயோகத்தைப் பயன்படுத்தவும் இராணுவத்துக்கு அதிகாரமுண்டு; கூடுதல் பலப்பிரயோகத்தால் அந்நபர் இறந்து போனாலும், இராணுவம் சட்டப்படி நடந்ததாகவே கருதப்படும்.

கலவரப் பகுதியாக அறிவிக்கப்பட்டு, ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டம் அமல்படுத்தப்படும் பகுதிகளில் வாழும் மக்கள், இராணுவ அத்துமீறல்களால் ஏற்படும் இழப்புகளுக்கு நட்ட ஈடோ, நிவாரணமோ பெற முடியாது. இச்சட்டத்தின் 6-ஆவது உட்பிரிவின்படி, மைய அரசின்

**பாம் காலகோவா எனும் ஊரில் புகுந்து பெண்களைப் பாலியல் பலாத்காரப்படுத்திய இராணுவத்தின் அத்துமீறலை எதிர்த்து அஸ்ஸாமியப் பெண்கள் போராட்டம்.**





படிப்பகம்

www.padippakam.com

முன் அனுமதியின்றி இச்சட்டத்தின் துணையோடு நரவேட்டையாடி வரும் இராணுவத்தினர் மீது யாரும் வழக்குத் தொடரவோ அல்லது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கவோ முடியாது.

இப்படி சாதாரண மக்கள் இராணுவத்தின் முன் உரிமையிழந்து நிற்பது ஒருபுறமிருக்கட்டும்; தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசிற்குக்கூட இராணுவம் கட்டுப்படவில்லை என்பதற்குப் பல சான்றுகளைக் கூறமுடியும்:

● 1994-ஆம் ஆண்டு டிசம்பர் 24-ஆம் தேதி நாகலாந்தின் மோகோக்சுங்க் பகுதியில் ரோந்து சுற்றி வந்த மராத்தா இளம் காலாட்படையைச் சேர்ந்த இருவர் போராளிகள் சுட்டதால் இறந்து போயினர். இதனால் வெறிபிடித்துப் போன அப்படை வீரர்கள், அப்பகுதியில் இருந்த கடைகளையும், வீடுகளையும் தீயிட்டுக் கொளுத்தினர். கொழுந்துவிட்டு எரிந்த தீயில் ஐந்து அப்பாவிகள் உயிரோடு எரிந்து சாம்பலாயினர். பகுதி மக்கள் அனைவரும் சுற்றி வளைத்துத் தாக்கப்பட்டதோடு, நான்கு பெண்கள் துப்பாக்கி முனையில் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டனர்.

● 1995-ஆம் ஆண்டு சனவரி 23-ஆம் தேதி அதிகாலையில் நாகலாந்தின் அகுலாடோ பகுதியில் அஸ்ஸாம் துப்பாக்கிப் படையினருக்கும், போராளிகளுக்கும் இடையே துப்பாக்கி மோதல் நடந்தது. மோதலின் பின் போராளிகளைத் துரத்திச் சென்ற படையினர், அவர்களைப் பிடிக்க முடியாத ஆத்திரத்தில், அப்பகுதி மக்களை வீட்டைவிட்டு வெளியே துரத்தியடித்தனர்; அவர்களின் கண் முன்னாலேயே அவர்களின் வீடுகளை மண்ணெண்ணெயை ஊற்றித் தீயிட்டுக் கொளுத்தினர். இராணுவத்தின் மிரட்டலுக்குப் பணியாது, வீட்டைவிட்டு வெளியே வர மறுத்த ஹொசேடோ செமா என்ற விவசாயியின் மனைவி சுட்டுக் கொல்லப்பட்டார்; மனைவியின் கையில் இருந்த மூன்று மாதக் குழந்தையின் கை சிதறுண்டு போனது.

● அதே ஆண்டு மார்ச் 5-ஆம் தேதி, தேசிய துப்பாக்கி படைப் பிரிவினர் துப்பாக்கியாலும், கையெறி குண்டுகளாலும் பொது மக்களைத் தாக்கியதில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்; 20 பேர் படுகாயமடைந்தனர்.

— இம்மூன்று அத்துமீறல்கள் பற்றி விசாரணை நடத்த நாகலாந்து அரசு, ஓய்வு பெற்ற கௌஹாத்தி உயர்நீதி மன்ற நீதிபதி டி.எம். சென் என்பவரின் தலைமையில் விசாரணைக் கமிசன் ஒன்றை அமைத்தது. ஆனால் இராணுவமோ, ''தங்களை விசாரிக்க மாநில அரசிற்கு அதிகாரமே கிடையாது'' எனக் கமிசனில் வாதாடியது. இவ்வாதத்தை கமிசன் ஏற்றுக்கொள்ள மறுத்துவிடவே, இராணுவம் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தது. அவ்வழக்கு உயர்நீதி மன்றத்தில் தோற்ற பின், உச்சநீதி மன்றத்திற்குச் சென்றது, இராணுவம். இராணுவத்திற்கு எதிராக கமிசன் அளித்த தீர்ப்பை முதலில் தடை செய்த உச்சநீதி மன்றம், பின்னர் அத்தடையை விலக்கிக் கொண்டுவிட்டது.

● 1987-ஆம் ஆண்டு மணிப்பூர் மாநில மந்திரிசபை மைய அரசுக்கு அனுப்பிய குறிப்பில், ''அஸ்ஸாம் துப்பாக்கி படையின் அட்டூழியங்களாலும், மாநில சிவில் நிர்வாகத்திற்கு அவர்கள் பணிந்து போக மறுப்பதாலும் சேனாபதி மாவட்டத்தில் மாநில அரசின் சட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை; அஸ்ஸாம் துப்பாக்கிப் படைப்பிரிவு அப்பகுதியில் இணையான அரசாங்கமொன்றை நடத்தி வருகின்றனர்'' எனப் புலம்பியுள்ளது. இச்சட்டம் நடைமுறையிலுள்ள நாகலாந்தின் அகுலாடோ பகுதியிலும் இராணுவம் தனியொரு இராச்சியத்தையே நடத்தி வருகிறது.

# இராணுவ அத்துமீறல் வடகிழக்கில் மட்டுமா?

**கடந்த மார்ச் 16-ஆம் தேதி கர்நாடக மாநிலத்திலுள்ள பெல்காம் நகரின் புகை வண்டி நிலையத்தினுள் முப்பது பேர் அடங்கிய இராணுவக் கும்பலொன்று நுழைந்தது. கொலைவெறியோடு நுழைந்த அக்கும்பல், கண்ணில்பட்ட இரயில்வே ஊழியர்களையும், இரயில்வே போலீசாரையும் பிரயாணிகளையும் இடைவார்களையும், கருக்கருவாளையும் கொண்டு தாக்கியது. நிலையத்தில் இருந்த தொலைபேசி இணைப்புகளையும், இருக்கைகளையும் தாக்கி சேதப்படுத்திவிட்டு ஓடி மறைந்தனர் அவர்கள். இக்காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் 14 பேர் படுகாயமடைந்தனர். இருவரின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமானது.**

**தாக்குதல் நடந்த அன்று அமர்தீப் சிங் என்ற இராணுவ உயர் அதிகாரி, இரயில்வே விதிமுறைகளை மீறி புகை வண்டி நிலையத் தடத்தினுள் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றுள்ளார். இதைக் கண்ட இரயில்வே போலீசார் வாகனத்தைக் கைப்பற்றி, அந்த அதிகாரியைக் காவலில் வைத்தனர். இதற்குப் பழி வாங்கவும், தங்களைக் கேள்வி கேட்டவர்களுக்குப் பாடம் புகட்டும் முகமாகவும் தான் இத் தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது. முகாமில் அடைந்து கிடக்கும் இராணுவத்தினருக்கே இத்துணை அதிகார வெறியும், பழி வேட்கையும் இருக்குமென்றால், மனித வேட்டை சட்டபூர்வமாக்கப்பட்டுள்ள வடகிழக்கிந்தியாவில் இவர்கள் எத்துணை அட்டூழியம் புரிவார்கள்?**

● 1995 நவம்பர் 25-ஆம் தேதி மணிப்பூர் மாநிலத்தில் ''சன்னி வாலி'' என்ற தேடுதல் வேட்டையைத் தொடங்கியது இராணுவம். ஆனால் இந்நடவடிக்கை தொடங்குவது பற்றிய தகவல் முன்னரே மாநில அரசுக்குத் தெரிவிக்கப்படவில்லை. இந்நடவடிக்கையின் பொழுது அம்மாநில ஆளுநரின் தொலைபேசி பேச்சுகள் இராணுவத்தால் உளவறியப்பட்டன. இதனைப் போன்றே, அஸ்ஸாமில் சென்ற ஆண்டு மீண்டும் தொடங்கப்பட்ட ''காண்டாமிருக நடவடிக்கை'' பற்றியும் அம்மாநில அரசுக்குத் தெரிவிக்கப்படவில்லை. ம்க்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் கடந்த நாற்பது ஆண்டுகளாக வடகிழக்கு மாநிலங்களில் முழுமையாகவோ, பகுதியாகவோ நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

''கலவரப் பகுதி அறிவிப்புச் சட்டம் அரசியல் சாசன ரீதியாகச் செல்லத்தக்கதல்ல'' எனக் கூறி, சனநாயக உரிமைகளுக்கான மக்கள் கூட்டணியும், நாகலாந்து மனித உரிமை அமைப்பும் இணைந்து 1982-இல் உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தன. உச்சநீதி மன்றம், கடந்த 15 ஆண்டுகளில், இவ்வழக்கை ஒருமுறைகூட விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

1990-ஆம் ஆண்டு அஸ்ஸாம் மாநிலம் முழுவதும் கலவரப் பகுதியாக அறிவிக்கப்பட்டதை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கில் கௌகாத்தி உயர்நீதி மன்றம், ''அம்மாநிலத்தின் 11 மாவட்டங்கள், கௌகாத்தி நகரத்தையும் மட்டும்தான் கலவரப் பகுதியாக அறிவிக்க வேண்டும்'' எனத் தீர்ப்பளித்தது. ஆயின், இத்தீர்ப்பை உச்சநீதி மன்றம் 1991 ஏப்ரல் 29-ஆம் தேதி தடை செய்துவிட்டது. கடந்த ஆறு ஆண்டுகளாக அம்மாநிலம் எங்கும் இராணுவம் ஏவிவரும் அடக்குமுறைகளுக்கு உச்சநீதி மன்றத்தின் இத்தடைதான் உயிர்நாடியாக விளங்குகிறது.

☆ ☆ ☆

மணிப்பூரிலும், நாகலாந்திலும் போராடி வரும் 7000 போராளிகளை ஒடுக்க, இராணுவத்தின் 57-வது மலைப்படைப் பிரிவும், அஸ்ஸாம் மற்றும் தேசிய துப்பாக்கிப் படைப் பிரிவுகளும் நர வேட்டையில் இறங்கியுள்ளன. அஸ்ஸாமில் ''ஒருங்கிணைந்த அதிகாரம்'' அமைக்கப்பட்ட பின், போடா பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் 25,000 இராணுவத்தினர் வேட்டையில் இறங்கியிருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. அம்மாநிலத்தில் மட்டும் கடந்த ஆறு ஆண்டுகளில் 1230 கோடி ரூபாய் இராணுவ வேட்டைக்குத் தீனியாகப் போடப்பட்டுள்ளது. வடகிழக்கிந்தியாவில் இராணுவத்தினரைத் தவிர பிறரின் உயிருக்கும், உடைமைக்கும், பெண்களின் மானத்திற்கும் எவ்வித உத்தரவாதமில்லை என்பதற்குச் சமீபத்தில் நடந்த சம்பவங்களை உதாரணமாகக் கூறலாம்.

● மார்ச் 6-ஆம் தேதி நள்ளிரவில், அஸ்ஸாம் துப்பாக்கிப் படையினர் நாகலாந்து தலைநகர் கோகிமாவில் சாமுவேல் ரிசோம் என்ற கௌகாத்தி உயர்நீதி மன்ற வழக்குரைஞர் வீட்டினுள் நுழைந்தனர். வீட்டிலிருந்த அவரது இரு பாதுகாப்பு அதிகாரிகள் தங்களின் அடையாள அட்டையை அத்துணை இராணுவப் படையினரிடம் எடுத்துக் காட்டினர். அடையாள அட்டையைப் பிடுங்கித் தூக்கியெறிந்துவிட்டு, அவ்விரு பாதுகாப்பு அதிகாரிகளையும் கண்ணிமைக்கும் நேரத்தில் சுட்டுக் கொன்றது, அப்படை. மேலும்


படிப்பகம்

அந்த வீட்டை நாசமாக்கி, அவ்வழக்குரைஞரின் உறவினர்களையும் மிகக் கேவலமாக நடத்தியது.

• இதற்கு இரு நாட்கள் முன்பு திரிபுராவில் கலவரப் பகுதியாக அறிவிக்கப்பட்ட பர்கபாரா கிராமத்தில் நுழைந்த அஸ்ஸாம் துப்பாக்கிப் படையினர், 3 பெண்களைப் பாலியல் பலாத்காரப்படுத்தியதோடு, 13 பெண்களை மானப்பங்கப்படுத்தியுள்ளனர். மேலும் இப்பெண்களை தொடர்ந்து இரு நாட்கள் சட்டவிரோத இராணுவக் காவலில் அடைத்து வைத்தனர்.

“கொலை, கொள்ளை, கற்பழிப்பு; வான்வழித் தாக்குதல் நடத்தி கிராமங்களை நிர்மூலமாக்குவது; இனக் குழுக்களுக்கு இடையே மோதலைத் தூண்டி இரத்தம் குடிப்பது; போராளிகளிடையே ஊடுருவித் துரோகிகளை உருவாக்குவது” - இந்திய இராணுவத்தின் இச்சட்ட விரோத, போர்க்கால குற்றங்கள் அனைத்தும் “தேசிய ஒருமைப்பாடு”, “தீவிரவாதத்தை ஒடுக்குவது” என்ற பெயரில் நியாயப்படுத்தப்படுகின்றன. இராணுவத்தினரின் “பூட்ஸ்”களைத் துடைத்து



“தடா”வின் கீழ் எண்பது வழக்குகள் தொடரப்பட்டு, ஆறு ஆண்டுகளாகச் சிறையில் வாடும் அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த 76 வயது முதியவர் அர்ஜுன் சர்மா.

விடுமளவிற்கு, அம்மாநில மக்கள் இரண்டாம் தரக் குடிமக்களாகக் கேவலப்படுத்தப்படுகின்றனர். வடகிழக்கிந்தியாவைச் சேர்ந்த தேசிய இனங்களின், பழங்குடி இன மக்களின் உரிமைகளை நசுக்குவதற்கு, இந்திய அரசு நியாயமற்ற போரைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

இந்திய இராணுவத்தைச் சேர்ந்த “பிரிகேடியர்” ஜெயின் என்ற உயர் அதிகாரி, “அரசையும், ஆயுத பலத்தையும் கொண்டு தேசியத்தைக் கட்டியெழுப்பும் காலனியப் பார்வை காரணமாகத்தான், அம்மக்கள் தேசிய நீரோட்டத்தில் இருந்து விலகி நிற்கின்றனர்” எனக் கூறியுள்ளார். தேர்தல்கள், பழங்குடியினருக்கு தன்னாட்சி அமைப்புகள், சிறப்பு பொருளாதாரச் சலுகைகள் என்ற அலங்கார வார்த்தைகளால் மூடி மறைக்கப்படும் இந்திய அரசின் காலனிய ஒடுக்குமுறை, இந்த அதிகாரியின் வார்த்தையில் அம்மணமாகி நிற்கிறது.

• ரஹீம்

# மே – 1, 1997

## நெய்வேலி நிலக்கரி கழகத்தின் முன்

# மறியல்

### நெய்வேலியில் சீரோ யூனிட் அனல் மின் நிலையத்தை அமெரிக்காவிற்கு விலைபேசும் ஒப்பந்தத்தை ரத்து செய்!

**அன்பார்ந்த உழைக்கும் மக்களே,**

நெய்வேலி சீரோ யூனிட் என்ற அனல் மின் நிலையம் அமைப்பதை எஸ்.டி.-சி.எம்.எஸ். என்ற அமெரிக்க நிறுவனத்திற்கு வாரிக் கொடுத்து விட்டது தமிழக மின்சார வாரியம். 1200 கோடி ரூபாய் மூலதனத்தில் இந்நிறுவனம் தயாரிக்கும் மின்சாரத்தை யூனிட் ஒன்றுக்கு ரூ.2.53 கொடுத்து வாங்கி, அதற்கு மேல் இலாபம் வைத்து நம் தலையில் கட்டப் போகிறது தமிழக அரசு. இதைவிடக் குறைந்த மூலதனத்தில், குறைந்த விலையில் மின்சாரம் உற்பத்தி செய்து தரத் தயாராக இருந்த அரசுத் துறை நிறுவனமான நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தை (என்.எல்.சி.) ஓரங் கட்டிவிட்டு, இம்மின் நிலையத்தைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்த்ததன் மூலம் ஜெயாவைப் போலவே கருணாநிதியும் தமிழக மக்களுக்குத் துரோகம் இழைத்து விட்டார்.



சீரோ யூனிட் தாரை வார்க்கப்பட்டது ஒருபுறமிருக்க, 2280 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய 5 தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது தமிழக அரசு; 17 இடங்களில் 1788 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் வகையில் 17 திரவ எரிபொருள் மின் நிலையங்கள் அமைப்பதைத் தனியார் வசம் ஒப்படைக்கப் பரிசீலனை நடந்து வருகிறது.

சீரோ யூனிட் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கப்பட்டிருப்பது, மின் துறையைத் தனியார்வசமாக்கும் திட்டத்தின் முதல் அடி. மின் உற்பத்தியிலும், விநியோகத்திலும் தனியார் நிறுவனங்களை ஒவ்வொன்றாக அனுமதித்து, ஒரு கட்டத்தில் தமிழக மின் வாரியத்தை இழுத்து மூடிவிடும் சதித்தனம் நிறைந்ததுதான் இத்திட்டம்.

மின்துறை அரசு வசம் இருந்து வருவதால், சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கிடைத்து வருகிறது; வீடுகளுக்கும், சிறு தொழில்களுக்கும் குறைந்த விலையில் மின்சாரம் வழங்கப்படுகிறது. இதில் தனியார் ஆதிக்கம் அதிகரித்தால், இலவச மின்சாரம் மட்டுமல்ல, குறைந்த விலை மின்சாரத்தைக் கூட எண்ணிப் பார்க்க முடியாது. ஒரு யூனிட் மின்சாரத்திற்கு நாலு ரூபாய், ஐந்து ரூபாய் கொடுக்கக்கூடிய அளவிற்கா நமக்குப் பண வசதி இருக்கிறது? இதை எதிர்த்துப் போராடாவிட்டால், நாம் எல்லோரும் பழையபடி காண்டா விளக்கு உலகத்துக்குத் திரும்பிச் செல்ல வேண்டியதுதான்.

இது மட்டுமல்ல; மின் நிலையங்களை அமைக்கவுள்ள தனியார் நிறுவனங்கள் பெரும்பாலானவை திரவ எரிபொருளைப் பயன்படுத்தவுள்ளன. இந்தப் பெட்ரோலிய எரிபொருள் இறக்குமதி செய்யப்படுவதால், அந்நியச் செலாவணி கையிருப்பில் நெருக்கடி ஏற்பட்டு, நமது நாட்டுப் பொருளாதாரம் திக்குமுக்காடத் தொடங்கிவிடும்.

1991-இல் அந்நியச் செலாவணி நெருக்கடியைக் காட்டித்தான் தாராளமயமாக்கலைத் தொடங்கி வைத்தார்கள். ஆகவே, மின் துறையைத் தனியார் மயமாக்குவது நமது நாட்டின் மீது ஏகாதிபத்திய ஆதிக்கத்தை அதிகரிக்கும். நாடு மறுகாலனியாவதைத் துரிதப்படுத்தும். எனவே, மின் துறையில் தரகு முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் நுழைவதை எதிர்ப்போம்! நாடு மறுகாலனியாவதைத் தடுப்போம்!

இவண்,
மக்கள் கலை இலக்கியக் கழகம்,
புரட்சிகர மாணவர் – இளைஞர் முன்னணி,
விவசாயிகள் விடுதலை முன்னணி.

* * *

www.padippakam.com

# 'அமைதிப் பூங்கா'வில் வீசும் மதவெறிப் புயல்

கடந்த மார்ச் 11-ஆம் நாளன்று சென்னை புறநகரான கொடுங்கையூரில் நடந்த இரு முஸ்லிம் தீவிரவாதிகளின் கைது நடவடிக்கையும், கைப்பற்றப்பட்ட வெடி குண்டுகளும் தமிழகத்தையே அதிர்ச்சியில் உறையச் செய்துள்ளது. ''அல்-உம்மா'' எனும் முஸ்லிம் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த முகம்மது கான், ஷாகுல் அமீது ஆகிய இருவரும், ''பம்பாயில் நடந்த தொடர் குண்டு வெடிப்புப் பேரழிவைப் போலவே, சென்னையிலும் நடத்தத் திட்டமிட்டு இப்படி இரகசியமாக வெடிகுண்டுகளைத் தயாரித்துள்ளனர்; அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட டிபன்பாக்ஸ் வெடிகுண்டுகள், எல்.ஐ.சி. கட்டிடம் போன்ற பலமாடிக் கட்டிடங்களைத் தகர்த்துத் தரைமட்டமாக்கக் கூடிய அளவுக்கு சக்தி வாய்ந்தவை; இது தவிர இரும்புக் குழாய், பிளாஸ்டிக் குழாய், கடிகாரம், சைக்கிள் மணி, டார்ச் லைட் முதலானவற்றிலும் வெடிகுண்டுகளை வைத்துத் தயாரித்துள்ளனர். இவை அத்தனையும் வெடித்திருந்தால் சென்னைக்கு மிகப் பெரிய பேரழிவு ஏற்பட்டிருக்கும்'' என்று கூறப்படுகிறது.

1992-இல் பாபர் மசூதியை இந்துவெறியர்கள் தகர்த்ததைத் தொடர்ந்து, அதற்குப் பழிக்குப் பழிவாங்கும் நோக்கத்தோடு கோவையைச் சேர்ந்த பாஷாவினால் ''அல்-உம்மா'' தீவிரவாத அமைப்பு தொடங்கப்பட்டது. 1993-இல் நடந்த சென்னை ஆர்.எஸ்.எஸ். அலுவலக குண்டு வெடிப்பில் குற்றம் சாட்டப்பட்டு, ''தடா'' சட்டத்தின் கீழ் சிறையிலிடப்பட்ட சையத் அகமது பாஷா, இப்போது நிபந்தனை பிணையில் விடுதலையாகியுள்ளார்.

இந்த பாஷாவின் சகோதரர்தான் முகம்மது கான். இவர் மீது கொலை வழக்குகளும் வெடிகுண்டு தாக்குதல் வழக்குகளும் உள்ளன. இவரது கூட்டாளியான ஷாகுல் அமீது, 1994-ல் மதுரையில் இந்து முன்னணித் தலைவர் ராஜகோபாலன் கொலை உட்பட பல கொலை வழக்குகள், வெடிகுண்டு வீச்சு வழக்குளில் குற்றம் சாட்டப்பட்டு இருப்பவர். இவ்விருவரின் கைதைத் தொடர்ந்து, இவ்வியக்கத்தைச் சேர்ந்த குத்புதீன் என்பவரும் இப்போது கைது செய்யப்பட்டுள்ளார். இவர் நாகை இந்து முன்னணித் தலைவருக்கு புத்தக பார்சல் வெடிகுண்டு அனுப்பி, அவர் மனைவியைக் கொலை செய்தவர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மத அடிப்படைவாத இயக்கமான அல்-உம்மா, முஸ்லிம்களுக்குச் சொந்தமான சென்னையிலுள்ள இம்பீரியல் ஓட்டல், லக்கி ஓட்டல்களில் சீமை சாராய விடுதியும், அரை நிர்வாண நடனங்களும் நடத்தப்படுவதை எதிர்த்து, குண்டு வெடிப்புகளை நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளான அல்-உம்மாவும், பழனி பாபாவின் ஜிகாத் கமிட்டியும் மத அடிப்படைவாதத்தின் பெயரால் இளைஞர்களைப் பயங்கரவாதிகளாக்கி வருகின்றனர் என்றும், பாக். உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ.யுடன் இரகசியக் கூட்டுச் சேர்ந்து தேசவிரோத சதிச் செயல்களில் ஈடுபடுவதாகவும் இந்துவெறிப் பரிவாரங்கள் குற்றம் சாட்டுகின்றன. இரகசிய குண்டு தயாரிப்புகளைக் காட்டி சில பார்ப்பன பத்திரிகைகளும் இதேபோல அலறுகின்றன. ஆனால் கோவை பாஷாவும், அல்-உம்மா இயக்கப் பிரமுகர்களும் தமக்கும் பாக். உளவு அமைப்புக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்று பேட்டியளிக்கின்றனர். போலீசாரும் இதற்கான ஆதாரம் எதுவும் தமது விசாரணையில் இதுவரை தெரியவரவில்லை என்கின்றனர். முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு பாக். உளவு அமைப்புடன் தொடர்பு உள்ளதா, இல்லையா என்பது ஒருபுறமிருக்க, முஸ்லிம் தீவிரவாதிகளின் பயங்கரவாத சதி நடவடிக்கைகள் இந்துவெறி பயங்கரவாதத் தாக்குதலின் எதிர்விளைவுதான் என்பதை மறுக்க முடியாது.

கடந்த பல ஆண்டுகளாக மதக் கலவரத்தைக் கண்டிராத தமிழகத்தில் மெதுவாகக் காலூன்றிய இந்து மதவெறியர்கள், பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகு மத்தியில் ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்பு பெருகியதும், சாதி இந்து வியாபாரிகளையும், நிலவுடைமையாளர்களையும் தம்பின்னே அணிதிரட்டிக் கொண்டு வலுவடைந்தனர். தாழ்த்தப்பட்டோரையும் முஸ்லிம்களையும் இழித்துப் பேசி ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு, பெரும்பான்மை மதத்தவரின் சார்பாகச் செயல்படுவதாகக் கூறிக் கொண்டு விநாயகர் ஊர்வலம், யாத்திரைகள், வழிபாடுகள், ஹோலிப் பண்டிகை நடத்தி, தனிநபர் படுகொலைகளிலும் இறங்கினர். இதற்கெதிராகச் சிறுபான்மை மதத்தினரின் பாதுகாப்பு என்ற பெயரில் ஜிகாத் கமிட்டியும், அல்-உம்மாவும் தனிநபர் படுகொலைகள், குண்டு வெடிப்புகளில் இறங்கின. இந்து - முஸ்லிம் மதவெறி பயங்கரவாத அமைப்புகள் தமிழகம் மட்டுமின்றி அண்டை மாநிலங்களிலும் நெருக்கமான வலைப்பின்னலுடன், வெளி மாநில ஆட்களைக் கொண்டு கொலைகளைத் திட்டமிட்டு நடத்தி வருகின்றன. திண்டுக்கல்லில் நடந்த பாரதீய ஜனதா பிரமுகர்களின் கொலைகளும், பொள்ளாச்சியில் நடந்த பழனிபாபா கொலையும் இதை நிரூபிக்கின்றன.

தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 60-க்கும் மேற்பட்ட இந்து - முஸ்லிம்கள் இத்தகைய மதவெறியால் கொல்லப்பட்டுள்ளனர். குறிப்பாக, ஜனவரி இறுதியில் நடந்த பழனிபாபா கொலையைத் தொடர்ந்து, தமிழகத்தின் பல பகுதிகளில் மதவெறித் தாக்குதல்கள் நடந்துள்ளன. கொடுங்கையூர் முஸ்லிம் தீவிரவாதிகள் இரகசிய குண்டு தயாரிப்பு நாசவேலையும் இதன் தொடர்ச்சியாகவே நடந்துள்ளது.

சுருக்கமாகச் சொன்னால், வட மாநிலங்களைப் போலவே தமிழகமும் மதவெறியின் கோரப் பிடியில் சிக்கிக் கொண்டு விட்டது. மதச்சார்பின்மை பற்றி வெற்றுக் கூச்சல் போடும் அனைத்து ஓட்டுக் கட்சிகளும் மதவெறியர்களை - குறிப்பாக, மிக அபாயகரமான இந்து மதவெறி பாசிஸ்டுகளை எதிர்த்துப் போராடாமல், மத நல்லிணக்கம் என்ற பெயரில் சமரச - சந்தர்ப்பவாதமாகச் செல்வதுதான் மதவெறி சக்திகள் மேலும் வளர அடிப்படையாக அமைகின்றன.

கொடுங்கையூர் நடவடிக்கை மூலம் பேரழிவிலிருந்து தமிழகம் காப்பாற்றப்பட்டதாகப் பத்திரிகைகள் பலவும் பாராட்டுகின்றன. ஆனால் இது மட்டும் மதவெறி பயங்கரவாதத்தையும் படுகொலைகளையும் தடுத்துவிடாது. ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி, ஜிகாத் கமிட்டி, அல்-உம்மா முதலான மதவெறி அமைப்புகளைத் தடை செய்வதும், மத நல்லிணக்கம் எனும் பிழைப்புவாத சமரசத்தை அம்பலப்படுத்தி மதவெறியர்களுக்கு எதிராகப் போராடுவதும், மதம் வேறு - அரசியல் வேறு என்று பிரித்து, மதவெறியின் அடிப்படையைத் தகர்ப்பதும்தான் மதவெறிப் படுகொலைகளுக்கும் பயங்கரவாதத்துக்கும் முடிவு கட்டும்.

• முத்து

மதவெறி பயங்கரவாதத்தின் பிடியில் தமிழகம்: கொடுங்கையூரில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் பொருள்வடிவிலான நவீன வெடிகுண்டுகளும்.





படிப்பகம்

www.padippakam.com



## இமயமலையில் ஒரு சந்தர்ப்பவாத சிகரம்

இந்தியாவின் அண்டைநாடான, இமயமலையின் உச்சியிலுள்ள நேபாளத்தில் போலிக் கம்யூனிஸ்டுகள் சந்தர்ப்பவாதத்தில் புதிய சிகரத்தையே எட்டியுள்ளனர். இதுநாள் வரை எந்தக் கட்சியை தமது எதிரி வர்க்கக் கட்சியாகச் சாடி வந்தார்களோ, அக்கட்சியுடன் கொஞ்சமும் கூச்சநாச்சமின்றி கூட்டணி கட்டிக்கொண்டு போலிகள் ஆட்சியை அமைத்துள்ளனர்.

1990-இல் நேபாளத்தில் மன்னராட்சிக் கொடுங்கோன்மைக்கு எதிராக நடந்த மாபெரும் எழுச்சிக்குப் பிறகு முதலாளித்துவ நாடாளுமன்ற ஆட்சிமுறை ஏற்பட்டது. கடந்த 7 ஆண்டுகளில் இரண்டு பொதுத் தேர்தல்கள் நடந்துள்ளன. ஆனாலும் எந்தக் கட்சியும் நிலையாக ஆட்சி செய்யமுடியாமல் 5 முறை அரசாங்கங்கள் கவிழ்ந்து நாடாளுமன்ற ஜனநாயகம் படுதோல்வி அடைந்துள்ளது. நேபாளத்தின் இரு பெரும் கட்சிகளான நேபாள காங்கிரசும், போலிக் கம்யூனிஸ்டுகளான நேபாள கம்யூனிஸ்ட் கட்சியும் இதர சிறிய கட்சிகளுடன் மாறிமாறி கூட்டணி சேர்ந்து ஆட்சி அமைப்பதும், பின்னர் கட்சித் தாவல், குதிரை வியாபாரம், கோஷ்டிச் சண்டைகளால் ஆட்சி கவிழ்வதும் அங்கே வாடிக்கையாகி விட்டது.


கடந்த பிப்ரவரி மாதத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பில் நேபாள காங்கிரசு கூட்டணி அரசு கவிழ்ந்ததும், எதிர்க்கட்சியான போலிக் கம்யூனிஸ்டுகள் இதர கட்சிகள் - பிளவுபட்ட கட்சிக் குழுக்களுடன் கூட்டணி கட்டிக் கொண்டு ஆட்சியமைக்க கிளம்பினர். 205 பேர் கொண்ட நேபாள நாடாளுமன்றத்தில் 90 பேராக உள்ள போலிகள், மன்னராட்சியை ஆதரிக்கும் - மன்னர் குடும்பத்துக்கு விசுவாசமான - மன்னராலேயே உருவாக்கப்பட்ட ராஷ்டிரிய பிரஜா தந்திரக் கட்சி மற்றும் சத்பவனக் கட்சியுடன் கூட்டணிக் கட்டிக்கொண்டு வலதும் - 'இடதும்' கலந்த கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதக் கூட்டணி ஆட்சியை நிறுவியுள்ளனர். நாடாளுமன்றத்தில் 10 உறுப்பினர்களை மட்டுமே கொண்ட பிரஜா தந்திரக் கட்சியின் தலைவரான பகதூர் சந்த் அந்நாட்டின் பிரதமராகியுள்ளார். போலிக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாதவ் நேபால் துணைப் பிரதமராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் 1990 வரை மன்னரது கொடுங்கோலாட்சியில் பிரதமராக இருந்தவர் இதே பகதூர் சந்த் தான்! மன்னராட்சிக் கொடுங்கோன்மைக்கு எதிரான மக்கள் எழுச்சியை மிருகத்தனமாக ஒடுக்க முன்னணியில் நின்றவரும் இவர் தான். இன்று இவர் போலிக் கம்யூனிஸ்டுகளின் தோழனாகி 'புரட்சி' அரசின் பிரதமராகி விட்டார். நாடோடி மன்னன் சினிமாவைப் போல, மன்னராட்சியை ஆதரிப்பவரையே புரட்சியாளனாக்கி, 'மக்களாட்சி'யை நேபாளத்தில் போலிகள் நிறுவி விட்டார்கள். எதிரியையே கூட்டணி சேர்த்துக் கொண்டு 'சமாதான மாற்றத்'தைச் சாதிப்பதில் போலிக் கம்யூனிஸ்டுகளை யார்தான் விஞ்ச முடியும்?

## இந்திய மீனவர்களின் எஃகுறுதிமிக்க போராட்டம்

நாட்டை ஏகாதிபத்தியங்களிடம் மறுஅடகு வைக்கும் தனியார்மயக் கொள்கையின் ஓர் அங்கமாக, ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்ட ஆழ்கடல் மீன்பிடிக் கொள்கை, இந்திய மீனவர்களின் விடாப்பிடியான போராட்டத்தையடுத்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளுக்கும் மேலாகப் போராடிவரும் பாரம்பரிய இந்திய மீனவர்களின் மீன்பிடி உரிமைக்குக் கிடைத்த முதற்கட்ட வெற்றியாகும் இது.

1991-இல் அறிவிக்கப்பட்ட ஆழ்கடல் மீன்பிடிக் கொள்கையினால், நாட்டின் 80 இலட்சத்துக்கும் மேற்பட்ட பாரம்பரிய மீனவர்களின் தொழிலும், வாழ்வும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. மீனவர்களின் அன்றாட வருவாய் ரூ.50 - இலிருந்து ரூ.8 - ஆகக் குறைந்தது. இதுதவிர அன்னிய ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்களால் பாரம்பரிய மீனவர்களின் வலைகள் அறுபட்டு பெருத்த நட்டம் ஏற்பட்டது. ட்ராலிங் முறையில் ராட்சத எந்திரங்களுடன் அந்நியக் கப்பல்கள் மீன்பிடிப்பதால், மீன் குஞ்சுகளும், முட்டைகளும் அழிந்து மீன் வளமே நாசமாக்கப்பட்டது. கடல் வளத்தையே நாசமாக்கும் அன்னிய ஆழ்கடல் மீன்பிடி நிறுவனங்களுக்கு ஒரு லிட்டர் டீசல் 2 ரூபாய்க்கு மானிய விலையில் வழங்கப்பட்டது. அதேசமயம் இந்திய பாரம்பரிய மீனவர்களுக்கு இச்சலுகைகள் ஏதும் கிடையாது. அன்னிய நிறுவனங்களுக்கு தாராள சலுகைகள் அளித்து கடல் வளத்தையே நாசமாக்கும் அரசின் கொள்கையை எதிர்த்து மீனவர்கள் தொடர்ந்து போராடிய பிறகு, அரசு நியமித்த முராரி கமிட்டியும், நாடாளுமன்ற நிலைக் குழுவும் கடற்கரை மாநிலங்களில் சுற்றுப்பயணம் செய்து அந்நிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீன்பிடி உரிமத்தை ரத்து செய்யுமாறு வலியுறுத்தின. ஆனாலும் ஆட்சியாளர்கள் இதை எற்று செயல்படுத்தவில்லை.



மும்பை துறைமுகத்தை முற்றுகையிட்டு மறியல் போராட்டம் நடத்தும் மீனவர்கள்.

இந்நிலையில் கடந்த பிப்ரவரி மாத மத்தியில், முந்தைய காங்கிரசு அரசின் ஆழ்கடல் மீன்பிடிக் கொள்கை தொடர்ந்து பின்பற்றப்படும் என்று ஐ.மு. அரசு அறிவித்தது. அதைத் தொடர்ந்து இந்திய பாரம்பரிய மீனவர்களின் போராட்ட ஒருங்கிணைப்புக் குழுவான, அந்நியக் கூட்டு நிறுவனங்களுக்கு எதிரான தேசிய மீன்வள செயற் கமிட்டி (NFACAJ) கண்டன ஆர்ப்பாட்டங்களையும், உண்ணாவிரதப் போராட்டத்தையும் நடத்தியது. ஆனாலும் ஐ.மு. அரசு அசைந்து கொடுக்காததால், கடந்த மார்ச் 5-ஆம் நாளன்று இந்தியத் துறைமுகங்களில் மீனவர்கள் மிகப்பெரிய மறியல் போராட்டத்தை நடத்தினர்.

குஜராத்தின் காண்ட்லா, மகாராஷ்டிராவின் மும்பை, ஆந்திராவின் விசாகப்பட்டிணம் மற்றும் பிற சிறிய துறைமுகங்களில் மீனவர்கள் தமது படகுகளில் குடும்பத்துடன் திரண்டுவந்து மறியல் போராட்டத்தைத் தொடர்ந்தனர். மார்ச் 5 முதல் 7 -ஆம் தேதிவரை 3 நாட்களுக்கு இத்துறைமுகங்கள் செயல்பட முடியாமல் முடங்கிப் போயின. மார்ச் 7-ஆம் நாளன்று, மத்திய உணவுப் பதப்படுத்தல் துறையின் ராஜாங்க மந்திரியான திலிப் குமார் ரே, ''அந்நிய மீன்பிடிக் கப்பல்களின் உரிமங்கள் ரத்து செய்யப்படும்; மூன்று மாதங்களுக்குள் அவை முற்றாக வெளியேற்றப்படும்; பாரம்பரிய மீனவர்களின் தொழிலைப் பாதுகாக்கும் வகையில் புதிய கொள்கை வகுக்கப்படும்'' என்று உத்திரவாதம் அளித்த பிறகே மீனவர்களின் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. இப்போராட்ட வெற்றியைப் பாதுகாக்கவும் உறுதிப்படுத்தவும், மீனவர்களோடு உழைக்கும் மக்களும் ஒன்றிணைந்து போராட வேண்டியது இன்றைய அவசியமாகியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## மே. வங்கத்துக்கு ஒரு சந்தன்பாசு கேரளாவுக்கு ஒரு கிருஷ்ணகுமார்

மே.வங்க போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசு, தனது முதலாளித்துவ மகன் சந்தன்பாசுவுக்கு அரசு அதிகாரத்தைக் கேடாகப் பயன்படுத்தி, சலுகைகள் செய்துகொடுத்து, கோடீஸ்வரனாக்கியுள்ளார் என்பது கடந்த பத்தாண்டுகளாகத் தொடரும் குற்றச்சாட்டு. ஆனாலும் அவர் மீது 'மார்க்சிஸ்ட்' கட்சி இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதைப் பார்த்து தைரியம் அடைந்துள்ள கேரள போலிக் கம்யூனிஸ்டு முதல்வரான நாயனாரும் அரசு அதிகாரத்தைக் கேடாகப் பயன்படுத்தி, தனது மகன் கிருஷ்ணகுமாரை குறுகிய காலத்திலேயே கோடீஸ்வரனாக்கியுள்ளார்.

'மார்க்சிஸ்டு' கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கம் தயாரிக்கும் தினேஷ் பீடி விநியோகிப்பாளராக இருந்த கிருஷ்ணகுமார், ஏறத்தாழ 10 மாதங்களுக்கு முன்பு "திருஷ்ய சித்ர டைமன்ஷன்ஸ்" என்ற விளம்பர முகமை நிறுவனத்தை ஆரம்பித்தார். முதல்வர் நாயனாரும், தொழிலமைச்சர் சுசீலா கோபாலனும் இந்து முறைப்படி குத்து விளக்கேற்றி இந்நிறுவனத்தைத் துவக்கி வைத்தனர். இன்று இந்நிறுவனத்தின் மாதாந்திர வரவு செலவு மட்டும் ஒரு கோடி ரூபாயைத் தாண்டி விட்டது. கிருஷ்ணகுமாரின் விளம்பர முகமை நிறுவனத்துக்கு இத்தொழிலில் போதிய முன் அனுபவமோ, தனிச் சிறப்பான தொழில்நுட்பச் சாதனங்களோ இல்லை. ஆனாலும் கேரள அரசின் பல்வேறு துறைகளும், வாரியங்களும் விளம்பர முகமையை அவருக்கே அளிக்கின்றன. சாதாரண ஒப்பந்தப் புள்ளி விவரங்களிலிருந்து, எய்ட்ஸ் கட்டுப்பாடு விளம்பரம் வரை அனைத்தும் முதல்வரின் மகனுக்கே அளிக்கப்படுகிறது.



போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் நாயனாரின் கோடீஸ்வர மகன் கிருஷ்ணகுமார். (உள்ளே) மகனது நிறுவனத்தைக் குத்து விளக்கேற்றித் துவக்கி வைக்கும் 'மார்க்சிஸ்டு' தலைவர்கள்.

முந்தைய காங்கிரசு ஆட்சிகளில் பாலகிருஷ்ணப் பிள்ளை, ஜேக்கப் முதலான அமைச்சர்கள் தமது மகன்களது விளம்பர முகமை நிறுவனங்களுக்கு மட்டும் அரசு விளம்பரங்களை அளித்ததன்மூலம் கோடிகோடியாய் விழுங்கினர். அப்போது இத்தகைய மோசடிகளை எதிர்த்துக் கூச்சல்போட்ட 'மார்க்சிஸ்டுகள்' இப்போது வாய்மூடிக் கிடக்கின்றனர்.

புரட்சிக்குச் சேவை செய்ய குடும்பம் குடும்பமாகத் திரள வேண்டுமென ஊருக்கு உபதேசம் செய்யும் போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர்கள், தமது வாரிசுகளைக் கோடீஸ்வரராக்குவதில் புதிய 'புரட்சி'யையே சாதித்து வருகிறார்கள்.

## பல்கேரியாவில் பரவும் உணவுக் கலகம்

கிழக்கு ஐரோப்பாவில், ருமேனியாவின் தெற்கே கருங்கடலை ஒட்டியுள்ள முன்னாள் போலி சோசலிச நாடான பல்கேரியாவில் அண்மைக்காலமாகத் தொடரும் உணவுக் கலகங்கள் அந்நாட்டையே உலுக்கி வருகிறது. கடந்த பிப்ரவரி மாத இறுதியில், நாடு முழுவதும் ரொட்டி தட்டுப்பாடு - விலையேற்றம் அதிகரித்ததும், பல கிராமங்களில் மக்கள் ஆத்திரமடைந்து ரொட்டிக் கடைகளைச் சூறையாடினர். தெற்கே, பெட்ரிச் நகரில் தொடங்கிய இந்த உணவுக் கலகம் நாடு முழுவதும் காட்டுத்தீயாகப் பற்றிப் பரவியது. நாட்டின் பல பகுதிகளில் உணவின்மையை எதிர்த்து வேலை நிறுத்தங்கள் பரவத் தொடங்கியதும், போராட்டப் பகுதிகளில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

போலி சோசலிச சேற்றிலிருந்து முதலாளித்துவ புதைகுழிக்குள் விழுந்துவிட்ட பல்கேரியாவை விலையேற்றமும், வறுமையும் பிடித்தாட்டுகிறது. விலைவாசி 400% அதிகரிக்க, வேலையின்மை 25% ஆக உயர, பணவீக்கமோ தலைகால் புரியாமல் வீங்கி விட்டது. இன்று பல்கேரியாவில் ஒரு ரொட்டியின் விலை 1000 லீவா (ஏறத்தாழ 30 ரூபாய்) ஆக உயர்ந்துள்ளது. அதேசமயம் ஒரு தொழிலாளியின் மாத வருமானமோ 20,000 லீவா (ஏறத்தாழ ரூ.700) ஆக உள்ளது. இந்நிலையில் மானிய விலையில் ரேஷன் கடைகளில் வழங்கப்படும் ரொட்டிதான் அந்நாட்டு மக்களை பசியிலிருந்து ஓரளவுக்காவது காப்பாற்றி வருகிறது.

ஆனால், உலக வங்கியின் உத்திரவுப்படி உணவுக்கான மானியங்களைக் குறைப்பது, ரேஷன் கடைகளை இழுத்து மூடுவது என்ற கொள்கையை பல்கேரிய ஆட்சியாளர்கள் விசுவாசமாகப் பின்பற்றி, கடந்த பிப்ரவரி மாத இறுதியிலிருந்து ரேஷன் ரொட்டி விலைகளை உயர்த்தியதோடு, ரேஷன் அளவையும் குறைத்தனர். இந்தியாவைப் போலவே ரேஷன் கடைகளில் மைல் கணக்கில் நீளும் வரிசையும், கூட்ட நெரிசலில் பலர் மயக்கமடைவதும் பல்கேரியாவில் தொடர்கதையாகிப் போனது. ஒருபுறம் ரொட்டி விலையேற்றம், மறுபுறம் தட்டுப்பாடு என்றால் மக்களால் இக்கொடுமையை எத்தனை நாட்கள்தான் தாங்க முடியும்? இனியும் பட்டினிக் கிடக்க முடியாமல் ஆத்திரமடைந்த பல்கேரிய மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு நடத்தியதுதான் இந்த உணவுக் கலகம்.

## பட்டினியில் குழந்தைகள் பகற்கொள்ளையில் முதலாளிகள்

பாசிச ஜெயா ஆட்சியில் அமைச்சர் இந்திரகுமாரி சத்துணவு முட்டை ஊழல்மூலம் கோடிகோடியாய் கொள்ளையடித்ததைப் போல, கர்நாடகத்தில் குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுக்காமல் பட்டினிபோட்டுவிட்டு, ஆண்டுக்கு 50 கோடி ரூபாயை அதிகாரிகள், முதலாளிகள், எம்.எல்.ஏ.க்கள் கூட்டுச் சேர்ந்து கொள்ளையடித்துள்ளனர். ஒரு நாளைக்கு ஏறத்தாழ 14 லட்ச ரூபாய் வீதம் கடந்த பத்தாண்டுகளில் 500 கோடிக்கும் மேலாக இக்கும்பல் விழுங்கி ஏப்பம் விட்டுள்ளது.

கர்நாடகத்தில் 39,000 குழந்தைகள் காப்பகங்கள் (பாலவாடி - அங்கன்வாடி) உள்ளன. மத்திய அரசின் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் உணவுப் பொருட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாநில அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறையின் மேற்பார்வையில் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது. கோதுமையிலிருந்து தயாரிக்கப்படும் ரவாவுடன், சோயா கலந்த சத்துணவு 3 நாட்களுக்கும், சோயா சக்தி உணவு ஒரு நாளைக்கும், சாதாரண உணவு இரு நாட்களுக்கும் வழங்கப்படுவதாக கணக்கு காட்டப்பட்டது. ஆனால் 90% குழந்தைகள் இத்தகைய சத்துணவைக் கண்ணால் கூடப் பார்த்ததில்லை. சத்துணவுக்காக மானிய விலையில் ஒரு கிலோ ரூ.4.25 வீதம் வழங்கப்படும் கோதுமையை ரூ.10 வீதம்



படிப்பகம்

www.padippakam.com



கள்ளச் சந்தையில் விற்று அதிகார வர்க்கமும், முதலாளிகளும் கோடிகோடியாய் கொள்ளையடித்துள்ளனர்.

இந்த உண்மையை கர்நாடக மாநில சட்டமன்றக் குழுவே அம்பலப்படுத்தியுள்ளது. ஜனதாதளக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினரான உக்ரப்பா தலைமையிலான சர்வகட்சிக் குழு 10 மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து சோதனைகளை மேற்கொண்டதில், 19.5 லட்சம் குழந்தைகளில் 10% பேருக்குக்கூட இன்றுவரை சத்துணவு கொடுக்கப்படுவதில்லை. லட்சக்கணக்கான குழந்தைகள் பட்டினியுடன் வீட்டுக்கு அனுப்பப்படுகின்றன. பட்டப்பகலில் நடந்து வரும் இக்கொள்ளையில் கோலார் மாவட்டத்தைச் சேர்ந்த நந்தி அக்ரோ நிறுவனம் முக்கிய பங்காற்றியுள்ளது. மாலூரைச் சேர்ந்த முன்னாள் காங்கிரசு எம்.எல்.ஏ. நாகராஜு இந்நிறுவனத்தின் தலைவர் ஆவார். 1996 - 97-இல் கர்நாடக அரசு 36,200 டன் கோதுமையை மத்திய அரசின் ஒதுக்கீட்டிலிருந்து பெற்றது. இதை குழந்தைகள் காப்பகங்களுக்கு வாரந்தோறும் விநியோகிக்கும் உரிமையை நந்தி அக்ரோ நிறுவனமும் மற்ற இரு நிறுவனங்களும் பெற்றன. 12,000 டன் விநியோக உரிமையைப் பெற்ற நந்தி அக்ரோ நிறுவனம், கடந்த ஆண்டில் வெறும் 900 டன்களை மட்டுமே குழந்தைகள் காப்பகங்களுக்கு விநியோகித்துள்ளது. மீதியை விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டது.

இதுமட்டுமின்றி, கோலார் மாவட்டத்திலுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் 11 மையங்களுக்கு சத்துணவுக் கலவையை விநியோகிக்கும் உரிமத்தை நந்தி அக்ரோ நிறுவனம் பெற்றுள்ளது. ரவாவுடன் சோயா கலந்த சத்துணவுக் கலவைக்குப் பதிலாக, வெறும் ரவாவை மட்டுமே அந்நிறுவனம் விநியோகித்து வந்துள்ளது.

சத்துணவு விநியோக உரிமையைப் பெற்ற ஒரு நிறுவனத்தின் கதையே இப்படியென்றால் மற்ற நிறுவனங்களின் பகற்கொள்ளையைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இக்கொள்ளை தொடர்ந்தபோதிலும், மாநில பெண்கள் - குழந்தைகள் நலத் துறையோ, மாவட்ட வளர்ச்சிக் கவுன்சில் உறுப்பினர்களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ கண்டும் காணாமல் இருந்ததோடு, கூட்டுக் கொள்ளையில் தாமும் பங்கேற்று பல கோடிகளைச் சுருட்டியுள்ளனர். இக்கொள்ளையில் நந்தி அக்ரோ நிறுவனத்தின் பெயர் வெளியில் வராமல் கோப்புகளை மாற்றி விடுமாறு கோலார் மாவட்ட போலீசு துணை கமிஷனருக்கு மிரட்டல்கள் வருவதிலிருந்தே, சர்வ கட்சியினரும் இக்கூட்டுக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர் என்று அம்பலமாகி வருகிறது.



ரூ.500 கோடியை ஏப்பம்விட்ட சத்துணவுக் கொள்ளையை எதிர்த்த ரயில் மறியல் போராட்டத்தில் சத்துணவு ஊழியர்கள்

வரலாறு காணாத இந்த ஊழல் கொள்ளையை எதிர்த்து 40,000-க்கும் மேற்பட்ட சத்துணவு ஊழியர்கள் ஆர்ப்பாட்டங்களையும் மறியல் போராட்டங்களையும் நடத்தி வருவதோடு, சி.பி.ஐ. விசாரணையைக் கோருகின்றனர். ''எங்களைக் குற்றவாளிகளாக்கி பழிபோட்டுவிட்டு அதிகாரிகள் தப்பிக்கப் பார்க்கிறார்கள்; அது ஒருபோதும் நடக்காது'' என்று அவர்கள் உறுதியுடன் போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

## ராம ராச்சியத்தின் முக விலாசம்

இந்து வெறியர்கள் கூட்டணி ஆட்சி நடத்தும் மகாராஷ்டிராவில், வடக்கே மத்தியப் பிரதேசத்தை ஒட்டியுள்ள மல்கட் மாவட்டத்தில் கடந்த நான்காண்டுகளாக ஆதிவாசி குழந்தைகள் சத்துணவின்மையால் ஆயிரக்கணக்கில் மாண்டு வருகின்றனர். 1996-இல் மட்டும் கோர்கு இன ஆதிவாசிக் குழந்தைகள் 1075 பேர் மாண்டு போயுள்ளனர். கடந்த நான்காண்டுகளில் 3800 குழந்தைகள் சத்துணவின்றியும் உரிய மருத்துவ உதவிகள் இன்றியும் இறந்துள்ளனர்.

மல்கட் மாவட்டத்தின் காட்டுப் பகுதியை புலிகள் சரணாலயமாக பத்தாண்டுகளுக்கு முன்பு மாநில அரசு மாற்றியமைத்தது. இதனால் ஆதிவாசிகள் காடுகளில் பிழைக்க வழியில்லாமல் போனது. உரிய நீர்ப்பாசன வசதிகள் இல்லாததால் இம்மாவட்டத்தை நிரந்தரமாகவே வறட்சியும் பஞ்சமும் பீடித்துள்ளது. அற்பக் கூலியும் கொத்தடிமை முறையும் இம்மாவட்டத்தில் தீவிரமாக உள்ளது. மல்கட் மாவட்டத்தில் வறட்சியைப் போக்கி, நல்வாழ்வுத் திட்டங்களை மேற்கொள்வதாக இந்துவெறி ஆட்சியாளர்கள் பரபரப்பான அறிவிப்புகளை வெளியிட்டனர். ஆதிவாசி மக்களுக்கு வேலைவாய்ப்பு, சுகாதாரம், மருத்துவ உதவி, சத்துணவு அளித்தல், குழந்தைகள் காப்பகங்களில் முறையாக மருத்துவப் பரிசோதனை, குழந்தைகளின் எடையைக் கணக்கிடுவது, சத்துணவு அளித்தல் என கவர்ச்சிகரமான திட்டங்களை அள்ளிவீசினர். ஆனால் இந்த அறிவிப்புகள் அனைத்தும் காகிதத் திட்டங்களாகிப் போனது. குழந்தைகளின் இறப்பு ஆண்டுக்காண்டு தீவிரமடையவே செய்தது.

மல்கட் மாவட்ட வறட்சி நிவாரணப் பணிகளை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்த அரசு அதிகாரி சின்கா, ''சத்துணவின்மையாலேயே இம் மாவட்டத்தில் குழந்தைகள் இறந்துள்ளன. அரசின் நடவடிக்கைகள் சாவைக் குறைக்க உதவவில்லை. திட்டங்கள் காகிதத்திலேயே இருந்தன. எந்தத் துறையும் முனைப்போடு செயல்படவில்லை. பஞ்சத்தில் பரிதவிக்கும் ஆதிவாசிகளுக்கு வேலைவாய்ப்பளித்ததாக பொய்க்கணக்கு காட்டப்பட்டுள்ளது'' என்று தமது அறிக்கையில் அரசின் யோக்கியதையை அம்பலப்படுத்திக் காட்டியுள்ளார். ராம ராச்சியத்தின் லட்சணத்தைத் தோலுரித்துக் காட்டும் இந்த அறிக்கையைக் கண்டு அதிர்ச்சி அடைந்த இந்து வெறியர்கள், அதை வெளியிடாமல் மூடி மறைத்தனர்.

ஷீலா பார்ஸ் என்ற பெண் பத்திரிகையாளர் இதை வெளிக்கொணரும் நோக்கத்தோடு, ஆதிவாசி குழந்தைகள் சாவு பற்றி பம்பாய் உயர்நீதி மன்றத்தில் பொதுநல வழக்கொன்றைத் தொடுத்தார். இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள், சின்காவின் அறிக்கையை கோர்ட்டில் ஒப்படைக்குமாறு மாநில அரசுக்கு அண்மையில் ஆணையிட்டனர் அதன்பிறகே, அரசின் அலட்சியத்தால் ஆதிவாசி குழந்தைகள் மாண்டுவரும் உண்மை அம்பலமாகியது.



படிப்பகம்

www.padippakam.com

# கே.சி.பி. பேக்கேஜிங் நிர்வாகத்தின் அராஜகப் போக்கு

கரூர் அருகே மாயனூரில் கே.சி.பி. பேக்கேஜிங் ஆலை உள்ளது. இதில் சிமென்ட்டுக்குத் தேவையான பை தயாரிக்கிறார்கள். ஆலை தொடங்கி 5 ஆண்டுகள் ஆகிறது. தொழிலாளர்களுக்கு உரிய சம்பளமோ, உரிமையோ தராமல் அடிமைகளைப் போல் நடத்தி வருகிறது நிர்வாகம். எட்டு மணி நேர வேலை என்பது இனி போராடிப் பெற வேண்டிய ஒன்று. தொழிலாளியை அடித்து நொறுக்குவது மிகச் சாதாரணம். இதனால் அறிவுடைநம்பி என்ற தொழிலாளி இறந்து விட்டார். இதை மறைத்து, அவர் இறந்ததற்கு வேறு காரணம் கூறுகிறது நிர்வாகம்.

இக்கொடுமைகளை எதிர்த்துப் போராட தொழிலாளர்கள் முனைந்தனர். மதிமுகவின் "எம்.எல்.எஃப்" மற்றும் அம்பேத்கார் தொழிற்சங்கத்தில் அணி திரண்டனர். சம்பள உயர்வுடன் கூடிய பல கோரிக்கைகளை முன் வைத்தனர். நிர்வாகம் ரவுடிகளை வைத்து மிரட்டியது. தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் தொடங்கினர். நிர்வாகம் தொழிற்சங்க முன்னோடிகள் எட்டுப் பேரை வேலையை விட்டு நீக்கியது. தொழிலாளர்களைத் தனித்தனியாக அழைத்து மன்னிப்புக் கடிதம் கேட்டு மிரட்டியது. இதை எதிர்த்துத் தொழிலாளர் அனைவரும் பொது வேலை நிறுத்தம் தொடங்கினர்.

நிர்வாகமோ வெளியூரிலிருந்து ஆட்களைக் கொண்டு வந்து ஆலையை நடத்தியது. இதற்கு போலீசு முழு பாதுகாப்பு தந்தது. தி.மு.க. தலைமையும், கரூர் பரமத்தி சண்முகமும் போராட்டத்தை நசுக்கிவிடும் நோக்கோடு தொழிலாளரை மிரட்டினர். நிர்வாகம் மேலும் 10 பேரை தற்காலிக வேலை நீக்கம் செய்தது. எதற்கும் பணியாத தொழிலாளர்கள் தொடர்ந்து போராடினர். தொழிலாளர் கமிஷனிடம் முறையிட்டும், தொழிலாளர் கமிஷனர் முதலாளிக்குச் சாதகமாகவே செயல்பட்டார். உதவி தொழிலாளர் கமிஷனர் தலைமையில் 4.3.97 அன்று பேச்சு வார்த்தை என முடிவானது. ஆனால் 3.3.97 அன்றே போராடும் தொழிலாளர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, மாயனூரில் திருமண மண்டபம் ஒன்றில் அடைக்கப்பட்டனர். அங்கு உண்ணாவிரதப் போராட்டம் செய்தனர். அப்போது ஒரு தொழிலாளி மயங்கி விழவே, 3 பேர் மீது மட்டும் பொய் வழக்கு போட்டு மற்றவர்களை விடுதலை செய்தனர். அந்த மூவரும் 4 நாட்களுக்குப் பின் பிணையில் வெளிவந்துள்ளனர்.

இந்த கே.சி.பி. முதலாளி ஓர் அரசியல் பிழைப்புவாதி. இன்றைக்கு தி.மு.க.வில் இருப்பதால் அதிகாரிகளும் போலீசும் இவரின் ஏவல் நாய்களாகச் செயல்படுகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன் பரமத்தி சண்முகம் இங்கு தி.மு.க. தொழிற்சங்கம் கட்டியபோது ம.தி.மு.க.வினர் எதிர்த்தனர். ஏனெனில் இம்முதலாளி அன்றைக்கு ம.தி.மு.க. தலைவர். இன்று ம.தி.மு.க. தொழிற்சங்கம் கே.சி.பி. முதலாளியை எதிர்ப்பதாகச் சொல்கிறது.

அம்பேத்கார் தொழிற்சங்கமோ சாதி ரீதியாக அணிதிரட்டுகிறது. இது தொழிலாளர்களைப் பிளவுபடுத்தவே உதவும். எனவே தான் நியாயமான தொழிலாளரின் போராட்டம் இழுபறியாக உள்ளது.

இவற்றைத் தூக்கியெறிந்து புரட்சிகர சங்கங்களில் இணைந்து, நிர்வாகத்தை அடிபணிய வைக்கும் போர்க்குணமிக்க போராட்டங்களை முன்னெடுப்பதே தொழிலாளர் கொடுமை தீர வழிவகுக்கும்.

தகவல்:
பு.மா.இ.மு. – கரூர்.

# விவசாயிகள் பார்வையில் தேக்குப் பண்ணை அழிப்புப் போராட்டம்

கடந்த ஆண்டு நவம்பர் 25-ஆம் தேதி, விவசாயிகள் விடுதலை முன்னணியினர் தேக்குப் பண்ணை அழிப்புப் போராட்டத்தின் ஒரு பகுதியாக, வைகை மாவட்டம் போடிநாயக்கனூருக்கு அருகிலுள்ள சங்கராபுரம் கிராமத்தில் அமைந்துள்ள அனுபவ் நிறுவனத்துக்குச் சொந்தமான பண்ணையில் நுழைந்து, தேக்கு மரங்களை வெட்டிச் சாய்த்தனர். இப்போராட்டம் விவசாயிகள் மத்தியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு, உத்தமபாளையத்தைச் சேர்ந்த புதிய ஜனநாயக வாசகர் வட்டத் தோழர்கள், அனுபவ் நிறுவனத்திற்கு நிலத்தை விற்ற ஐந்தாறு கிராமங்களில் கருத்துக் கணிப்பொன்றை நடத்தினர். அக்கருத்து கணிப்பைச் சுருக்கமாக இங்கே தருகிறோம்:

**டி. ரெங்கநாதபுரம்:** விவசாயம் செய்வதற்கு அரசு வங்கிகள் கடன் தராததால், தரிசாகக் கிடந்த நிலங்களை விவசாயிகள் அனுபவ்-க்கு விற்றுள்ளனர். ஒரு குழி நிலம் (600 செண்ட்) ரூ. 4000/-லிருந்து ரூ. 15,000 வரை விற்கப்பட்டுள்ளது. தேக்குப் பண்ணையெங்கும் 500 அடி முதல் 800 அடி வரை துளை போட்டு நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதால், விவசாயம் நடந்து வரும் நிலங்களும் நீரின்றிப் பாதிக்கப்படும் அபாயம் எழுந்துள்ளது. இக் கிராமத்தைச் சேர்ந்த போஸ்ராஜ் என்பவர், "இந்தத் திட்டமே மோசடி" எனக் கூறினார்.

**சங்கராபுரம்:** தரிசு நிலங்களை குழி ஒன்றுக்கு ரூ. 15,000/- வரை விலை கொடுத்து வாங்கிய அனுபவ், கிராமத்தின் புறம்போக்கு நிலங்களை வளைத்துப் போட்டுக் கொண்டுள்ளது. பண்ணையின் ஒவ்வொரு ஏக்கரிலும் 400 - 500 அடிக்குத் துளை கிணறுகள் போடப்பட்டுள்ளதால், ஊரில் இருந்த குடிநீர் கிணறு வற்றிவிட்டது. "கம்பெனியை எதிர்த்துப் போராட்டம் தேவைதான்; ஆனால் மரங்களை வெட்டும் அளவு செல்லக் கூடாது" என இக் கிராம மக்கள் போராட்டம் பற்றிக் கூறினர்.

**புதுக்கோட்டை :** பண்ணையைச் சுற்றி வேலியிட்டு மின்சாரம் பாய்ச்சுவதால், "ஆடு மாடு மேய்க்க வழி இல்லாமல் போய் விட்டது" என வேதனைப்பட்ட இக்கிராம மக்கள், "பண்ணை வந்த பின் நிலத்தடி நீர் வற்றி வருவதால், விவசாயிகளும் புதிதாக ஆழ்துளை கிணறு போட வேண்டிய கட்டாயம் வந்து விட்டது" என்றனர். "தேக்குப் பண்ணை அழிப்புப் போராட்டம் தேவைதான்" எனப் போராட்டத்தைப் பலமாக ஆதரித்தனர்.

**புதூர்:** தரிசு நிலங்கள் குழி ஒன்றுக்கு ரூ. 1000/- தொடங்கி ரூ. 20,000 வரை விலை போயுள்ளது. அனுபவ் பண்ணை போர் போட்டு அதிக அளவு நீரை உறிஞ்சுவதால், பயிர் கருகிப் போகும் நிலை உள்ளது. "இன்னும் 10 வருடம் இதே நிலை நீடித்தால், நாங்கள் ஊரை விட்டுக் குடிபெயர வேண்டும். எனவே தேக்குப் பண்ணை எதிர்ப்புப் போராட்டமும், பறிமுதல் செய்வதும் சரியானதுதான்" என்றனர்.

**பொட்டிப்புரம்:** பதிவுப் பத்திரங்களில் 14,000 ரூபாய் கொடுத்து நிலங்களை விலைக்கு வாங்கியதாக எழுதியுள்ள அனுபவ், விவசாயிகளுக்கு ரூ. 6000/-ஐ மட்டும் கொடுத்து மோசடி செய்துள்ளது. "மூன்று வருடங்களுக்கு மேல் கம்பெனியில் வேலை கிடைக்காது" எனக் கூறிய கிராம மக்கள், பண்ணை வந்த பின் விவசாயத்திற்கும், குடிப்பதற்கும் நீரின்றி பூமி வறண்டு வருவதாகக் கூறினர். "தேக்கு மரங்களை வெட்டியது சரிதான்; நிலத்தைப் பறிமுதல் செய்வதும் சரிதான்" எனப் போராட்டத்திற்கு ஆதரவு தந்தனர்.

இக்கருத்துகணிப்பைத் தொகுப்பாகப் பார்க்கும்பொழுது, தேக்குப் பண்ணை அழிப்புப் போராட்டத்தை எதிர்த்து அனுபவ் அடுக்கிய, "மரம் வளர்ப்பதால் மழை பொழிந்து நிலத்தடி நீர் பெருகும்", "உரிய விலை கொடுத்துதான் நிலங்களை வாங்கியுள்ளோம்", "வேலைவாய்ப்பு பெருகும்" என்பன போன்ற வாதங்கள் எத்துணை மோசடியானவை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# “சமரசமும் சித்தாந்தம்தான்”

## -இந்திரஜித் குப்தாவின் வாக்கு மூலம்

இந்திரஜித் குப்தா இந்தியப் பொதுவுடமைக் கட்சியின் முதுபெரும் தலைவர். வயது 75. 32 ஆண்டுகளாக எதிர்க்கட்சி வரிசையிலிருந்து நாற்காலி சுகம் கண்டவர். இன்று ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் உள்துறை அமைச்சர். மிகப் பொறுப்பு மிக்க பதவி. ஆனால் இன்றைக்கு அவர் கேலிக்குள்ளாக்கப்பட்டுள்ள அலங்கார பொம்மை.

சமீபத்தில் இவரது பேட்டி ஆங்கில இதழான 'இண்டியா டுடே'யில் வெளிவந்துள்ளது. நாற்காலி சுகத்திற்கு நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அலையும் அற்பத்தனத்தை அப்பட்டமாக அதில் வெளிப்படுத்தியுள்ளார். கொள்கை பற்றி, தேசிய பிரச்சனைகள் பற்றி, இன்னும் பல பிரச்சினைகள் பற்றி இவர் உதிர்த்துள்ள முத்துக்கள் இந்தப் போலி பாராளுமன்ற ஜனநாயகம் பற்றி அம்பலப்படுத்துகின்றன. இடப் பற்றாக் குறை காரணமாக முழு நேர்காணலையும் வெளியிட இயலவில்லை.

கவர்னர்கள், மத்திய உள்துறை செயலர் எனப் பலருடைய நியமனங்கள் உள்துறை அமைச்சரின் எதிர்ப்பை மீறிச் செய்யப்பட்டுள்ளன. சாதாரண முதலாளித்துவக் கட்சியைச் சேர்ந்தவர்கூட பிரதமர் தனது துறையில் அத்து மீறிச் செயல்படுவதை எதிர்ப்பார். ஆனால் கம்யூனிஸ்டு என்று சொல்லிக் கொள்ளும் இவர் கொஞ்சம் கூட வெட்கம், மானம், சூடு, சொரணை, ரோசம் இன்றித் தனது அற்ப அதிகாரத்தை விட்டுத் தந்துள்ளார். இழிவுபடுத்துதலை இன்முகத்துடன் ஏற்கிறார்.

பேட்டியாளர் மிகுந்த எதிர்பார்ப்புடன் இது பற்றிக் கேட்டு நேர் காணலைத் தொடங்குகிறார். குப்தாவோ பதில் கூற மறுக்கிறார். அதிர்ச்சியடைந்த நிருபர், உள்துறை அமைச்சர் இழிவுபடுத்தப்படுகிறாரே எனத் திரும்பத் திரும்பக் கேட்டும் குப்தா பிடித்து வைத்த களிமண் போல அப்படி இல்லை என விளக்குகிறார். நாற்காலி சுகம் அமைச்சரின் தன்மானத்தைக் கூட குழி தோண்டிப் புதைத்துள்ளது. நிருபரும் வேறு வழியின்றி அடுத்ததாக கேள்வியைத் தொடர்கிறார்.

*கே : மூத்த எதிர்க்கட்சி உறுப்பினராயிருந்து மத்திய உள்துறை அமைச்சராக மாறியுள்ளீர்களே? அந்த மாற்றம் எப்படி நடந்தேறியது?*

*இ.குப்தா : மிக எளிதாக, இணக்கமாக நடந்தேறியது. மிக அற்பப் பிரச்சினைகள் பற்றிய கோப்புக்களைப் பார்க்க மிக நீண்ட நேரம் ஆகிறது என்பது தவிர எனது வேலையில் எனக்குத் திருப்தியே.*

*கே : மத்திய உள்துறை அமைச்சர் அற்ப பிரச்சினைகளைக் கையாள்கிறாரா?*

*இ.குப்தா : ஒரு காவல் நிலையத்திலுள்ள போலீஸ் ஒருவரை வேறிடத்திற்கு மாற்ற வேண்டும் என எம்.பி.க்கள் எழுதும் போது உள்துறை அமைச்சர் வேறு என்ன செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்? எம்.பி.க்கள் எழுதும் போது நான் அதைக் கவனிக்க வேண்டியுள்ளது.*

நாட்டில் எத்தனையோ அவசர, அவசியப் பிரச்சினைகள் இருக்கும் போது கீழ்மட்ட ஊழியர்களின் ஊர் மாற்றல் போன்ற பிரச்சினைகளைத்தான் உள்துறை அமைச்சர் கவனிக்கிறார். இந்தப் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுத்து அனுப்பினால் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து விடுவோம் என இவர்களே தான் வாய்கிழிய கூச்சநாச்சமின்றிப் பேசுகின்றனர். ஆனால் இவர்களின் அதிகாரம் செல்லாக்காசு என இங்கே வெட்ட வெளிச்சமாகிறது.

*கே : வெளிப்படையாகப் பேசுபவராகிய நீங்கள், தற்போதெல்லாம் ஏன் திடீர் மௌனம் சாதிக்கிறீர்கள்?*

*இ.குப்தா : தற்போது பேச வேண்டும் என நான் விரும்பவில்லை. நான் சொல்ல என்ன இருக்கிறது?*

*கே : நீங்கள் பேசக் கூடாது என உத்திரவிடப்பட்டுள்ளதா? அல்லது இந்த அமைதி சுய கட்டுப்பாடா?*

*இ.குப்தா : இந்த நாட்களில் அதிகம் பேசாதிருப்பது மிக நல்லது. நான் பேசினால் உங்களில் பலரும் என்னைப் பிடித்துக் கொள்கிறீர்கள். பேசுவதென்பது உங்களுடைய வேலை. எதைப் பற்றியும் கருத்துக் கூற உங்களுக்குச் சுதந்திரமுள்ளது. குறைந்த பட்சம் இப்போதைக்கு எனக்குச் சுதந்திரம் இல்லை.*

*கே : அமைச்சராயிருப்பதால் வழமையாக உள்ள கட்டுப்பாடுகளினால் தங்களின் கொள்கைகளுக்கு விடை கொடுத்து விட்டீர்களா?*

*இ.குப்தா : கொள்கைகளை மாற்றிக் கொள்ள விருப்பமில்லையெனில், எந்நேரமும் மந்திரி பதவியை விட்டு விலக வழி உள்ளது.*

*கே : ஆனால் இது முரண்பாடாக இல்லையா? நீங்கள் உங்கள் கொள்கைப்படி நடக்கவில்லை எனில், மந்திரியாக ஆனது எதற்காக?*

*இ.குப்தா : கட்சி முடிவுப்படி நான் இங்கிருக்கிறேன். இது எனது சொந்த முடிவல்ல. நான் ஒரு கட்சி ஊழியன். கட்சி முடிவுப்படி நடக்கக் கடமைப்பட்டவன்.*

*கே : உங்களால் கட்சித் திட்டத்தை எந்த அளவு அரசாங்கத்தில் நடைமுறைப்படுத்த முடிந்தது?*

*இ.குப்தா : கட்சியைப் பொருத்தவரை, அங்குள்ள ஒரு பிரிவு அரசாங்கத்தின் ஒரு பகுதியாக செயல்பட்டு வருகிறது. மற்றொரு பிரிவு அரசாங்கத்திற்கு வெளியே உள்ளது. இந்த இரு பிரிவும் எப்போதும் ஒரே அலைவரிசையில் இருக்காது.*

*கே : அரசாங்கத்திலிருப்பவர்கள் அதற்கு வெளியிலுள்ள கட்சித் தோழர்களுடன் ஒத்திசைந்து செயல்படமாட்டார்கள் என்றா சொல்கிறீர்கள்?*

*இ.குப்தா : நிச்சயமாக. இந்தக் கண்ணோட்டங்கள் ஏற்கனவே நன்கு தெரிந்தவைதான். இவைபற்றி பத்திரிகைகளிலெல்லாம் எழுதப்பட்டுள்ளனவே.*

*கே : உங்களைப்பற்றி என்ன? கட்சியில் கட்சியுடன் ஒத்துப் போவது, அரசாங்கத்தில் அரசாங்கத்துடன் ஒத்துப் போவது என்பதா?*

*இ.குப்தா : நான் எனது கட்சியிலிருந்து விலகவில்லை. எனவே வெளிப்படையாக கட்சிக் கருத்தை மறுக்க மாட்டேன்.*

*கே : ஆனால் அங்கு மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன?*

*இ.குப்தா : அப்படி இருப்பின் கட்சிக் கமிட்டிகள் மூலம் கொண்டு செல்வேன்; பத்திரிகைகள் மூலமாக அல்ல.*

கட்சித் திட்டத்தை எந்த அளவு நடைமுறைப்படுத்த முடிந்தது என்ற நேரிடையான கேள்விக்கு நேரிடையான பதில் இல்லை. திருவாளர் குப்தா திசை திருப்புகிறார். கட்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத போது அப்படி ஒரு திட்டம் எதற்கு? பூசையறையில் வைத்துப் பூசிக்கவா? இங்கும் தனது பதவி சுகத்தைப் பாதுகாக்கப் படாதபாடு படுகிறார்.

*கே : பாபர் மசூதி பற்றி என்ன? அதே இடத்தில் அது கட்டப்படுமா?*

*இ.குப்தா : அது பாபர் மசூதி என அழைக்கப்படுமா என்பது கூட எனக்குத் தெரியாது. நடைமுறைக் கண்ணோட்டத்தில் பார்த்தால், அதே இடத்தில் அது கட்டப்படும் என நான் நினைக்கவில்லை. இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் ஒரு தீர்வுதான் இதற்கு முடிவு.*




பாபர் மசூதி பிரச்சினை மற்றும் அரசியல் சாசனப் பிரிவு 356 குறித்து பிழைப்பு வாதமே குப்தாவின் பதில். இந்து மத வெறியர்கள் இணங்கிப் போனால், குப்தா அவர்களுடன் சேர்ந்தும் அதிகாரத்தைப் பங்கு போட்டுக்கொள்ளத் தயார்!



படிப்பகம்

www.padippakam.com




பாபர் மசூதி பிரச்னையில் இவரின் துரோகம் அப்பட்டமாக வெளிவருகிறது. பாபர் மசூதியை அதே இடத்தில் கட்ட வேண்டும் என 1992-ல் குரல் கொடுத்தது இவரது கட்சி. ராவ் பல்யடித்த போது கண்டித்ததும் இவரது கட்சியும் இவரும் தான். இன்று மசூதி கட்டும் உரிமையுடைய உள்துறை மந்திரி பதவி இவருக்கு; மசூதி கட்டுவதை பா.ஜ.க. தவிர எந்தக் கட்சியும் வெளிப்படையாக எதிர்க்கவில்லை. ஆனால் பாபர் மசூதியா? எது? என்பது போல இன்றுபேசுவ்தை என்னவென்பது? அற்பத்தனமான பிழைப்புவாதம் என்பதைத் தவிர.

*கே : சிறந்த பாராளுமன்றவாதியாகிய நீங்கள் அரசியல் சாசனத்தின் 356-வது பிரிவுக்கு கடும் எதிர்ப்பாளர். இப்போது நீங்கள் அரசாங்கத்திலிருப்பதால், அதை ஏன் ஒழிக்கக் கூடாது?*

*இ.குப்தா : அது மாநிலங்கள் கழகம் செய்ய வேண்டிய வேலை. இது கட்சி வேறுபாட்டை மீறி எல்லா முதல்வர்களையும் உள்ளடக்கியது. பல்லாண்டாகச் செயல்படாது முடங்கிக் கிடந்த இதை நாங்கள் திரும்பச் செயல்படுத்தியுள்ளோம். அங்கு எல்லாவற்றையும் வெளிப்படையாக விவாதிக்க வேண்டும்.*

*கே : அரசாங்கத்தில் இணைந்தவுடன் உங்கள் கருத்தை மாற்றிக் கொண்டீர்களா, என்ன?*

*இ.குப்தா : நான் உங்களுக்குச் சொல்கிறேன். பிரிவு 356-ஐ ஒழிக்க வேண்டும் என்று கூறிய சில முதல்வர்கள் தற்போது தமது கருத்தை மாற்றிக் கொண்டு விட்டார்கள்.*

*கே : நாங்கள் கேட்பது உங்கள் கருத்தை. அது நீர்த்துப் போனதா?*

*இ.குப்தா : நீர்த்துப் போனது எனக் கூறமாட்டேன். ஆனால் எல்லாவற்றிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. நமது பொருளாதாரக் கொள்கையை எடுத்துக் கொள்ளுங்கள். முந்தைய கொள்கைகள் நீர்த்துப் போனவைதானே இவை. இந்நாட்களில் பழைய கருத்துக்களை விடாப்பிடியாக ஒருவர் வைத்துக் கொண்டிருக்க முடியாது.*

*கே : ஆக இறுதியாக சமரசவாத அரசியல், கொள்கை அரசியலை வென்று விட்டதா?*

*இ.குப்தா : சமரசம் என்பதே ஒரு கொள்கை தான்; இதுதான் இந்த அரசாங்கத்தின் சிறந்த கொள்கையாயிருக்க முடியும்.*

*கே : கொள்கைக்கு இனிமேல் முக்கியத்துவம் இல்லை என்றால், எல்லா கட்சிகளும் பங்கு கொள்ளும் ஒரு தேசிய அரசாங்கம் அமையலாம் என எடுத்துக் கொள்ளலாமா?*

*இ.குப்தா : பத்திரிகைகள் இதற்கு ஆழ்ந்த முக்கியத்துவமளித்தால், ஒரு வேளை இது அமையலாம்.*

*கே : பாரதீய ஜனதா கட்சியை அந்த அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்வீர்களா?*

*இ.குப்தா : தேசிய அரசாங்கம் என நீங்கள் எதை வரையறுக்கிறீர்களோ அதைப் பொறுத்தது இது.*

*கே : அவர்கள் (பா.ஜ.க.) ஏற்கெனவே 25 சதவீத ஓட்டு வாங்கியுள்ளனர். பஞ்சாபை போல, மக்கள் இன்னும் அவர்களுக்கு வாக்களிக்கின்றனர். எனவே நீங்கள் அவர்களுடன் கருத்து வேறுபடுகிறீர்கள் என்பதாலேயே ஒதுக்கி வைத்து விட முடியுமா?*

*இ.குப்தா : எந்த தேசிய அரசாங்கமும் சமரசத்தின் அடிப்படையில் தான் அமையும். மதவாதக் கட்சிகளும் சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்பதுதான் இதற்கு அர்த்தம்.*

*கே : அரசாங்கத்தில் சேர்ந்தபின் நீங்கள் ஏதாவது கற்றுக் கொண்டீர்களா?*

*இ.குப்தா : நீங்கள் ஏன் மாற்றத்தை எதிர்க்கிறீர்கள். எல்லாமே மாறுகின்றன. நாங்கள் வறட்டுக் கோட்பாட்டை வைத்துத் தொங்கிக் கொண்டிருக்க முடியாது. சில பொதுவுடமை அரசாங்கங்கள், குறிப்பாகி சோவியத் யூனியன், மாற்றத்திற்கேற்ப இணக்கமாகச் சென்றிருந்தால், அவை வீழ்ந்துபட்டிருக்காது. இது மாபெரும் மார்க்சியமாயில்லாமலிருக்கலாம், ஆனால் நிச்சயமாக நடைமுறைக்கானது.*

*பேட்டி முடிவடைகிறது*

☆ ☆ ☆

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசை கவர்னர் கலைக்கும் அதிகாரம் தரும் 356-வது சட்டப் பிரிவை ஏன் ரத்து செய்யவில்லை என்றபோது இதிலும் தனது துரோகத்தனத்தைச் சுற்றி வளைத்து மழுப்புகிறார். இதை விட கேடு கெட்ட துரோகத்தனம் சமரசவாதம் ஒரு கொள்கை எனக் கூறுவதுதான். இதில் வெட்கக்கேடு என்னவென்றால், கம்யூனிஸ்டாகிய இவர் சமரசம் செய்து கொண்டார். மதவெறி பாசிஸ்ட்டான பா.ஜ.க. விட்டுக் கொடுத்து சமரசம் செய்ய வேண்டுமாம். அதனுடன் கூட்டுச் சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைக்கத் தயார் என்கிறார்.

நல்ல முன்னேற்றம்தான். கம்யூனிசக் கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைத்து, தனது பதவி நாற்காலியைப் பாதுகாக்க எந்த இழிவையும் ஏற்றுக் கொண்டு, மதவெறி பாசிஸ்டுகள் சமரசம் செய்ய வேண்டும் என அறிவுரை கூறுகிறார். உச்சகட்டமாக ரசிய புதிய ஜார்களாக சீரழிந்த போலி கம்யூனிஸ்டுகளுக்கு அறிவுரை கூறப் புறப்பட்டுவிட்டார். உண்மைதான். அப்பனுக்கே புத்தி சொன்ன தகப்பன் சாமிகளைப் போல திரிபுவாதக் குரு பீடத்துக்கே அறிவுரை கூறும் தகுதி இந்த இந்திரஜித் குப்தாவுக்கு உண்டு என்பதை யாரும் மறுக்கவே முடியாது.

• பரிதி

## விலைவாசி உயர்வுக்கு எதிராக...

தாராளமயம் நடைமுறைக்கு வந்த பின் உணவுப் பொருட்கள் தொடங்கி உயிர் காக்கும் மருந்துகள் வரை விலை உயராத அத்தியாவசியப் பொருட்களே இல்லை என்றே கூறலாம். வரிக்குறைப்பும் விலைவாசி உயர்வும் தான் புதிய பொருளாதாரக் கொள்கையால் நாம் கண்ட பலன். இதோ இன்னும் இரண்டொரு மாதங்களில் பெட்ரோல் விலை உயர்ந்து விடும்; அதைத் தொடர்ந்து மீண்டுமொரு விலை உயர்வு மக்களைத் தாக்கக் காத்திருக்கிறது. ஆனால் பெரு முதலாளிகளுக்கும், புது பணக்கார கும்பல் அனுபவிக்கும் ஆடம்பரப் பொருட்களுக்கும் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் வரிச் சலுகைகள். ஓட்டுக்கட்சிகளின் இந்த இரட்டை நியாயத்தைக் கண்டித்து *பென்னாகரத்தில் விவசாயிகள் விடுதலை முன்னணி* சார்பாக 25.2.97 அன்று பொதுக் கூட்டம் நடை பெற்றது. இக் கூட்டத்திற்கு பென்னாகரம் பகுதி வி.வி.மு. தோழர் வெங்கடேசன் தலைமை தாங்கினார். ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன், பகுதி வி.வி.மு தோழர்கள் அருண், ஆனஸ்ட் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்ட முடிவில் ம.க.இ.க. கலைக் குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடைபெற்றது. 2000-க்கும் மேற்பட்ட பகுதிவாழ் மக்கள் திரண்டு வந்து, இப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

*ஒசூரில் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி* சார்பாக விலைவாசி உயர்வுக்குக் காரணமான புதிய பொருளாதாரக் கொள்கையைக் கண்டித்து 28.02.97 அன்று பொதுக்கூட்டம் நடைபெற்றது. இப்பொதுக் கூட்டத்திற்கு பு.மா.இ.மு. தோழர் ரவி தலைமை தாங்க, ம.க.இ.க., மாநிலப் பொருளாளர் தோழர், சீனிவாசன் சிறப்புரையாற்றினார்.



படிப்பகம்

www.padippakam.com




*• உயர்திரு காமராஜர் அவர்களைப் பற்றி, சாதி அரசிய லைக் கொண்டு வந்தவர் எனச் சாடியுள்ளீர்கள். காமரா ஜர் அவர்கள், நாட்டுச் சுதந்திரத்திற்காக தம்முடைய வாழ் வையே தியாகம் செய்தவர். திருமணம் முடித்தால் தம்மு டைய பொதுச் சேவையில் குறை ஏற்பட்டுவிடுமோ என நினைத்து மணமுடிக்காமலேயே இருந்தவர். அத்தகைய பெருமகனாரைப் பற்றி இப்படிக் கீழ்த்தரமாக எழுதியுள் ளீர்கள். இதற்காக நீங்கள் மன்னிப்புக் கோரவேண்டும். நீங்கள் எந்த அடிப்படையில் அந்த குற்றச்சாட்டைக் கூறி னீர்கள்? உங்களுடைய துணிச்சலைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் பெரிய தலைவர்களை ஆதாரமில்லாமல் அபாண்டமாகக் குற்றம் சாட்டாதீர்கள்.*

-ஏ. பத்மநாபன், சென்னை-12.

★ காமராஜர் பற்றி புதிய ஜனநாயகம் எழுதியவை எல்லாம் ஆதர அடிப்படையிலான, அரசியல் ரீதியிலான மதிப்பீடும் விமர்சனமும் தான். அதில் வாசகர் குறிப்பிடுவதைப் போன்ற கீழ்த்தரமான விசயம் எதுவுமே கிடையாது. பெரிய தலைவர் கள் என்றாலே அதிகாரபூர்வப் பாடங்களிலும், மக்கள் தொடர் புச் சாதனங்களிலும் கற்பிக்கப்படும் கருத்துக்களுக்கு மாறாக எழுதினாலே கீழ்த்தரமாகிவிடுமா? காந்தி என்றாலே மகாத்மா, நேரு என்றாலே சமாதான சிற்பி - ஆசிய ஜோதி, அண்ணாதுரை என்றாலே பேரறிஞர், எம்.ஜி.ஆர் என்றாலே பொன்மனச் செம்மல் - மனிதரில் புனிதர் - மனித நேயம் மிக்கவர் என்பதெல்லாம் உண்மையே கிடையாது. நம் கண் முன்னாலேயே, இலஞ்ச ஊழல் பேர்வழியும், பிழைப்புவாதப் பொறுக்கி அரசியல்வாதியும் பாசிச வக்கிர கோமாளியுமான எம்.ஜி.ஆர், மக்கள் திலகமாகவும் புரட்சித் தலைவராகவும் சித்தரிக்கப்பட்டு, மிகப் பெரிய வரலாற்றுப் புரட்டு நடந்ததைக் கண்டோம். இதற்கு ஒருபடி மேலே போய்தான் அவரது வாரிசு பார்ப்பன - பாசிச ஜெயலலிதா நிறுத்தப்பட்டார். அவரது ஆட்சி மட்டும் நீடித்திருந்தால் அதிகாரபூர்வ வரலாறு என்ன சொல்லியிருக்குமென்று எண்ணிப் பாருங்கள்!

இங்கே சஞ்சய் காந்தி, ராஜீவ் காந்தி முதல் மிக மோச மான சாதி, மத பிழைப்புவாதத் தலைவர்களுக்கெல்லாம் சிலைகள், நினைவுச் சின்னங்கள், அவர்கள் பெயரில் மாவட் டங்கள், போக்குவரத்துக் கழகங்கள் - பல்கலைக்கழகங்கள் இருப்பதே நாட்டுக்கு அவமானமில்லையா! இப்படி நிகழ்கால வரலாறே திரித்துப் புரட்டப்பட்டிருப்பது நமது வருங்கால சந்த தியினருக்குச் செய்யும் மிகப்பெரிய துரோகமல்லவா! இவற் றையெல்லாம் அகற்றுவதோடு மறுமதிப்பீடு செய்து வரலாற் றையே மாற்றி எழுதித் தூய்மைப்படுத்தும் மிகப்பெரிய கடமை யும் நமக்கிருக்கிறது.

''செத்தவர் எல்லாம் உத்தமர் அல்ல'' என்று அவரவர் காலத்து அரசியல் ஏடுகளைச் சற்று புரட்டிப் பார்த்தாலே புரி யும். காமராஜரும் அப்படிப்பட்டவர்தான். காமராஜரின் நம்பக மான கட்சித் தலைவர்களாகவும், அமைச்சர்களாகவும், சட்ட மன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் நிறுத்தப்பட்டவர் களின் பட்டியலைப் பாருங்கள். செங்கையில் மணலி ராமகி ருஷ்ண முதலியார், வட ஆற்காட்டில் தட்சிணாமூர்த்தி முதலி யார், தர்மபுரியில் தீர்த்தகிரி கவுண்டர், சேலத்தில் ராமசாமி உடையார், தென்னாற்காட்டில் ராமசாமி படையாச்சி, தஞ்சை யில் மூப்பனார், வாண்டையார், தென்கொண்டார், திருச்சியில் ரத்னசாமித் தேவர், கோவையில் மகாலிங்கக் கவுண்டரும் ராமகிருஷ்ணன், தாமோதரன், சுந்தரம் போன்ற நாயுடு ஆலை முதலாளிகள், ஈரோட்டில் நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடி யார், மதுரையில் சுப்பராஜா, புதுகையில் அரசர் விஜயரகுநாத தொண்டைமான், முகவையில் கரியமாணிக்கம் அம்பலம், ராமகிருஷ்ணத் தேவர், விருதுநகரில் ராமசாமி நாடார், நெல் லையில் சௌந்திரபாண்டியன், ஏ.பி.சி. வீரபாகு, குமரியில் மத்தியாசு, சென்னையில் டிவிஎஸ், ஈஸ்வர அய்யர், சிம்சன் சிவசைலம் ஆகியோரின் பிரதிநிதியாக ஆர். வெங்கிடராமன் - இவர்கள் எல்லாம் யார்? பெரும் பண்ணை நிலப்பிரபுக்கள், ஆலை முதலாளிகள் மட்டுமல்ல, அந்தந்த சாதிகளின் சார்பில் நிறுத்தப்பட்டவர்கள். ஏன், காமராஜரே 1967 விருதுநகர் தேர் தல் தோல்விக்குப் பிறகு, நாகர்கோவில் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் கு. காமராஜ நாடார் என்று தனது சாதிப் பெயருடன் சேர்த்தே போட்டுத்தான் பிரச்சாரம் செய்தார். அவ்வளவு பெரிய பிரபலத் தலைவர், தன் சாதிப் பெயரைச் சொல்லி ஓட்டுக் கேட்டது சாதியை முன்னிறுத்தி அரசியல் ஆதாயம் தேடிக் கொள்வதைத் தவிர வேறென்ன?

☆ **பெருமகனார் காமராஜர் தியாக சீலரா? அல்லது சாதி அரசியலைக் கொண்டு வந்தவரா?**

☆ **கெட்டதை மட்டுமே புதிய ஜனநாயகம் பார்த்து வருகிறதா?**

☆ **'மார்க்சிஸ்டு' கட்சியைத் தாக்கி எழுதுவது ஏன்?**

*• பு.ஜ.வில் தோழர் ஜீவா பற்றி எழுதியதற்கு (சி.பி.எம் மின்) செம்மலர் பிப்ரவரி இதழில், ''இதனால்தான் இந் தியா முழுக்க நக்சலைட்டுகள் சிதறிக் கிடக்கிறார்கள். இவர்கள் கெட்டதை மட்டுமே பார்ப்பவர்கள். நல்லதைக் காணாதவர்கள்'' என்று எழுதியுள்ளனரே, இதுபற்றி பு.ஜ. வின் கருத்து என்ன?*

— ராவணன், நெய்வேலி.

★ அடிப்படையில் ஒத்த கருத்துடைய மார்க்சிய - லெனினி யக் குழுக்கள் 3,4 ஆகப் பிளவுண்டு இருப்பது உண்மையே. இது வருத்தத்துக்குரியதும் அக்கறைக்குரியதும் ஆகும். ஆனால் இந்த நிலை உலகக் கம்யூனிச இயக்க வரலாறில் புதியதல்ல. மார்க்சு - எங்கெல்சு, லெனின் காலத்திலேயே குழுக்களாக இயங்கியிருக்கின்றன. அரசியல், சித்தாந்தப் போராட்டங்களினூடாகச் சரியானது நிலைநாட்டப்படுகிறது. நாம் குழுக்களாகப் பிளவுண்டிருக்கிறோம் என்பதையும்,



படிப்பகம்

www.padippakam.com

நாமே சுயவிமர்சனம் செய்து நிராகரித்துவிட்ட 'இடது' தீவிர வாதத் தவறுகளையும் தவிர, வேறு எதையாவது சுட்டிக்காட்டி இந்தப் போலி மார்க்சிஸ்டுகளால் விமர்சனம் செய்யமுடிகிறதா பாருங்கள்! கட்சிப்பிளவு என்று பேசினால், இந்தப் போலி மார்க்சிஸ்டுகளின் நிலைமைதான் என்ன? கேரளா, மே. வங்கம், திரிபுரா மட்டுமல்ல, இவர்கள் பெயர் சொல்லுமளவுள்ள மாநிலங்களில் கூட பிளவும் போட்டிக் குழுக்களும் இல்லையா? தமிழ்நாடு, ஆந்திரா, மராட்டியம், ஒரிசா, பீகாரில் கூடப் பிளவுண்டு போகவில்லையா? இப்போதுள்ள கட்சியின் யோக்கியதைதான் என்ன? பிரகாஷ் காரட், சீதாராம் யெச்சூரி, நாயனார், நம்பூதிரி ஒரு பக்கம், ஜோதிபாசு, சுர்ஜித் மறுபக்கம் நின்று ''உட்கட்சி'' விவாதத்தை முதலாளித்துவப் பத்திரிகைகள் மூலம் நடத்துகின்றனரே, இதுதான் ஒரே கட்சியாக இயங்குவதா?

அப்புறம், ஜீவா அன்று இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம், பாரதியில் நல்லதைக் கண்டவர் என்றால் இன்று மணி ரத்தினத்தின் ''பம்பாய்'', பாலச்சந்தரின் ''கல்கி'', கமலகாசனின் ''அவ்வை சண்முகி'' ஆகியவற்றில் புரட்சியைக் காண்கிறார்கள் இந்தப் போலி மார்க்சிஸ்டுகள். இதனால்தான் அவரைச் சொன்னதும் இவர்களுக்குப் பொத்துக் கொண்டு வருகிறது கோபம்!

- *உங்கள் ''புதிய ஜனநாயகம்'' பத்திரிக்கையை நான் தொடர்ந்து வாசித்து வருகிறேன். நீங்கள் எல்லா பதிப்புகளிலும் சி.பி.எம். கட்சியை மட்டுமே தாக்கி எழுதிக் கொண்டிருக்கிறீர்களே. அதை விட்டுவிட்டு பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்., பி.எச்.எம்.எஸ். (பாரதீய மக்கள் சபா) விசுவ இந்து பரிசத் போன்ற மதவாத இயக்கங்களையும், சி.பி.ஐ. போன்ற அரசுக்கு ஆதரவு கொடுக்கும் போலிகளையும் வெளிப்படுத்தி எழுதலாம் அல்லவா? சி.பி.எம். அப்படி என்னதான் பாவம் செய்தது. இந்த தேவையற்ற மறைமுக போராட்டம் (சி.பி.எம். மீது) தேவையா?*

*— தீபன், தும்கூர்.*

★ வாசகர் குறிப்பிடும் விவரம் ஏற்கத்தக்கதல்ல. பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். முதலிய இந்து மதவெறி பாசிஸ்டுகளைப் பற்றி எழுதுவதைப் போல, பத்தில் ஒரு பங்கு கூட சி.பி.எம். பற்றி ''புதிய ஜனநாயகம்'' எழுதுவதில்லை. அப்படி எழுதுவதில்லை என்பதுதான் உண்மையில் தவறாகும். புரட்சிக்கான தயாரிப்பு என்பதே இன்னின்னார் தாம் தமக்கு எதிரி, தாம் தாக்கி அழிக்கவேண்டிய சக்திகள் என்பதை மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் அரசியல் போராட்டங்கள் நடத்தி, எதிரிக்கும் மக்களுக்கும் நேரடி மோதல் ஏற்படும் வகையில் களத்தில் சக்திகளைக் கொண்டு வந்து நிறுத்துவதுதான் பிரதானப் பணி. ஆனால் மக்கள் இதை அறிந்து கொள்ள இயலாத வகையில் மழுப்பி திசைதிருப்பும் வகையில், தாங்களும் எதிரிக்கு எதிரான தாக்குதல் தொடுக்கப் போவதாகக் கூறி, மக்களை அணி திரட்டி, இறுதியில் சமரச சரணடைவு மூலம் தாக்குதல் முனையை மழுங்கடிக்கும் பணியை, எதிரிக்கும் மக்களுக்கும் இடையில் உள்ள சமரச ஊசலாட்ட சக்திகள் செய்து வருகின்றன. எதிரிக்கு எதிரான தாக்குதலைத் தாங்கும் மெத்தைகளாக இருந்து பலம் இழக்கச் செய்கின்றன. இத்தகைய சமரச ஊசலாடும் சக்திகளை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்த, அவர்களின் கீழுள்ள மக்களைப் புரட்சியின் பக்கம் வென்றெடுக்காமல், எதிரிக்கும் மக்களுக்கும் இடையில் நேரடி மோதல் ஏற்படுமாறு களத்தில் கொண்டு வந்து நிறுத்த முடியாது. இந்த அரசியல் பணியைத்தான் ஒரு புரட்சிகர இயக்கம், தனது பிரதான தாக்குதல் திசைவழியாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது மார்க்சிய - லெனினிய மூல யுக்தியாக, அரசியல் யுத்த தந்திரமாக உள்ளது.

ஒரு சின்ன எடுத்துக்காட்டு: ஒரு கந்துவட்டி லேவாதேவிக்காரன் ஊருக்குள் புகுந்து கடன், வட்டி வசூல் என்ற பெயரில் ஒரு ஏழை விவசாயியை அடித்துப் போட்டுவிட்டு, அவனது பண்ட பாத்திரங்களை அள்ளிக் கொண்டு போகும் போது, ஊர் இளைஞர்கள் சிலபேர் தடுத்து அவனைப் பிடித்து வைத்துக் கொள்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவனை அடித்துத் துவைப்பது; பொருட்களை மீட்டுத்தருவது; அடிப்பட்ட ஏழை விவசாயிக்கு நட்ட ஈடு கோருவது; கடன், வட்டியை ரத்து செய்து கந்து வட்டிக்காரனை எச்சரித்து விரட்டுவது, திரும்பத் தாக்காதவாறு எச்சரிக்கையாக இருப்பது போன்ற தீர்வை சில போர்க்குணமிக்க முற்போக்காளர்கள் வைப்பார்கள். ஆனால் பழமையில் ஊறிப் போன சமரசவாதிகளோ, கடன் வாங்கினால் வட்டியோடு திருப்பித் தரத்தானே வேண்டும்; ஏதாவது கொடுத்துச் சமாதானமாகப் போகவேண்டும்; இல்லையானால் காவல் நிலையத்துக்குப் போய் புகார் கொடுக்கலாம்; சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்று தீர்வு சொல்லுவார்கள். ''என்ன இருந்தாலும் அடிதடிங்கறது தப்பு; ஏதோ இயலாமையிலே ஏழை விவசாயி திருப்பித் தர முடியல; நீயும் சட்டப்படி கேட்டிருக்க வேண்டும்; கந்து வட்டிக்காரன் செல்வாக்குள்ளவன்; அவனை அடிச்சா வம்பு வரும், சமாளிக்க முடியாது'' என்று பேசுவார். இதன் மூலம் ஏழை விவசாயிக்குப் பரிந்து பேசுவதுபோலத் தெரியும்; ஆனால் கந்துவட்டிக்காரனுக்குச் சாதகமான தீர்வு இருக்கும். ஊரில் பலருக்கும் இந்த சமரசவாதிகள் பேசுவதுதான் நியாயம் போலத் தெரியும். ஆகவே முற்போக்காளர்கள் செயலில் இறங்கும் முன், இந்த சமரசவாதிகளின் மக்கள் விரோதத் தீர்வு, அநியாயக் கந்துவட்டி, அத்துமீறிய அக்கிரமமான தாக்குதல் ஆகியவற்றை எடுத்துச் சொல்லி, அவர்களைத் தனிமைப்படுத்துவது அவசியமாகும். இல்லையென்றால், எதிரிக்கு எதிராக முழுமையான அல்லது பெரும்பான்மையான ஊர் மக்களைத் திரட்ட முடியாது. ஆனால் மேல் பார்வைக்கு இந்த அணுகுமுறை எப்படித் தெரியும்? ஏதோ எதிரியை எதிர்ப்பதை விட்டுவிட்டு, தீவிரவாதிகள் ஒரு பிரிவு மக்களையே - அவர்களின் தலைவர்களை எதிர்ப்பது போலத் தெரியும். ஆனால் உண்மை அதுவல்ல; சரியான தீர்வுக்காகவும், சமரச சக்தியை முறியடிக்கவும் நடக்கும் போராட்டம்தான் இது. அதே போலத்தான் சி.பி.எம்.க்கு எதிரான நம்முடைய அரசியல் சித்தாந்தப் போராட்டம் அவசியமாக உள்ளது.

சி.பி.ஐ. யைப் பொருத்தவரை காங்கிரசு அல்லது ஜனதா தளத்தின் பின்னே வால் பிடித்துச் செல்வதோடு நேரு, இந்திரா போன்ற முதலாளித்துவவாதிகளையே ''சோசலிஸ்டுகள்'' தாம் என்று மக்களை நம்பச் சொல்லி, அம்பலப்பட்டு நீண்ட நாட்களாகி விட்டன. ஆனால் சி.பி.எம்., தான் இடதுசாரி, முற்போக்கு, புரட்சிக் கட்சி என்றும், தனக்கு காங்கிரசு, பா.ஜ.க. இரண்டுமே எதிரிதான் என்றும் கூறிக் கொள்கிறது. ஆனால் பாகிஸ்தானுடன் உறவு உட்பட வெளிநாட்டுக் கொள்கைகள், காஷ்மீர் - பஞ்சாப் - அசாம் உட்பட பல்வேறு தேசிய இனப் பிரச்சினைகள், புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்ப்பதுபோல நாடகமாடி ஆதரிப்பது, ஈழப் பிரச்சினை, இசுலாமியருக்குச் சொந்தமான பாபரி மசூதியை நினைவுச் சின்னமாக்குவது என்கிற சமரசம், இலஞ்ச ஊழலைக் கண்டும் காணாமல் இருப்பது - இப்படி எல்லா விவகாரங்களிலும் பா.ஜ. கட்சி, ஆர்.எஸ்.எஸ்.உடன் இசைந்து போவதாகவே சி.பி.எம்.மின் நிலைப்பாடு உள்ளது. நாடாளுமன்ற ஜனநாயகச் சாக்கடையில் மூழ்கித் திளைத்துக் கொண்டே, பொருளாதாரவாத இயக்கத்துக்குள் உழைக்கும் மக்களை இழுத்துப் போட்டுச் சீரழித்துவிட்டு, புரட்சிக்கு மக்கள் தயாராக இல்லை என்று மக்கள் மீதே பழிபோட்டு அரசியல் பிழைப்பு நடத்தும் அந்தக் கட்சியை அம்பலப்படுத்துவது புரட்சிக்கு மிகவும் அவசியமானது.

★ ★ ★


படிப்பகம்

www.padippakam.com



# டெங்கின் மரணத்திற்கு ஒப்பாரி வைப்பது யார்?

சர்வதேசப் போலிக் கம்யூனிசம் இன்னுமொரு மூத்த தலைவரை இழந்து விட்டது. டெங் என்ற பெயரில் சீனாவில் பிரபலமாக விளங்கிய டெங் ஷியாவோ பிங் கடந்த பிப்ரவரி 19-ஆம் நாளன்று, தனது 92-ஆவது வயதில் மரணமடைந்துள்ளார்.

சீனாவில் ஆரம்பகால கம்யூனிசப் புரட்சியாளர்களில் டெங்கும் ஒருவர். 1920-களில் பாரீசுக்குப் படிக்க வந்த டெங், தோழர் சூ என் லாய் மூலம் மார்க்சிய - லெனினியத்தைக் கற்று, சீனாவுக்குத் திரும்பிய பிறகு கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து புரட்சிப் பணியாற்றினார். சீனாவின் புதிய ஜனநாயகப் புரட்சி காலகட்டத்தில், கொரில்லாக் குழுக்களைக் கட்டியமைத்துச் செம்படைகளின் வெற்றிக்குப் பாடுபட்டார். மாவோ தலைமையிலான சீன மக்கள் குடியரசின் துணைப் பிரதமராக இருமுறை அவர் பதவி வகித்தார்.

ஆனால் இறுதிமூச்சு உள்ளவரை கம்யூனிசத் துரோகியாகவே வாழ்வேன் என்ற இலட்சிய வெறியோடு வாழ்ந்தவர்தான் டெங். அப்பட்டமான முதலாளித்துவப் பாதையாளராக விளங்கிய டெங், தோழர் மாவோவின் மறைவுக்குப் பிறகு கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றிக் கொண்டு, சீனாவின் சோசலிசக் கட்டுமானத்தை அழித்தொழித்தார். கம்யூனிசத்தின் பெயராலேயே முதலாளித்துவச் சந்தைப் பொருளாதாரத்தைத் திணித்தார். ''சீனாவின் சிறப்புத் தன்மைக்கேற்ற சோசலிசம்'' என்ற பெயரில் சீனாவின் விவசாயக் கூட்டுப் பண்ணைகளை அழித்துத் தனியார்மயமாக்கியதோடு, நாட்டை ஏகாதிபத்தியங்களின் கொள்ளைச் சுரண்டலுக்குத் திறந்துவிட்ட எதிர்ப் புரட்சியாளராகத் திகழ்ந்தார். சர்வதேசப் போலி கம்யூனிசத்தின் சித்தாந்த தலைமைக் குருவாகவும், ஏகாதிபத்தியங்களின் நம்பகமான கூட்டாளியாகவும் திகழ்ந்த மார்க்சிய துரோகி தான் டெங். எனவேதான் ஏகாதிபத்தியவாதிகளும் போலிக் கம்யூனிஸ்டுகளும் டெங் சாவை அறிந்ததும் ஒப்பாரி வைத்து அரற்றுகின்றனர்.

''சுற்றிய துணியில் மறைத்து வைக்கப்பட்ட ஊசியைப் போன்றவர்'' என்று மாவோவினால் வர்ணிக்கப்பட்ட டெங், தனது முதலாளித்துவப் பாதையை மூடிமறைத்துக் கொண்டு, கட்சிப் பொறுப்புகளிலும் நீடித்து வந்தார். 1957 - 58இல் அன்றைய துணைப் பொதுச் செயலாளரும் முதலாளித்துவப் பாதையாளருமான லியூ ஷாவோ ஷியுடன் கள்ளக்கூட்டு கொண்டிருந்தார். 1962-இல் விவசாயத்தில் சோசலிசக் கூட்டுப் பண்ணைகளை எதிர்த்துத் தனியார்மயத்தை ஆதரித்தார்.

''பூனை கறுப்போ, வெள்ளையோ, எலியைப் பிடித்தால் சரி'' என்று உற்பத்தி பெருகினால்போதும் - அது சோசலிச உற்பத்தியா, முதலாளித்துவ உற்பத்தியா என்று பார்க்க வேண்டியதில்லை என்று தனது முதலாளித்துவப் பாதையை நியாயப்படுத்தினார். இதனால் கட்சியிலும் மக்களிடமும் அம்பலப்பட்டுப் பொறுப்புகளிலிருந்து தூக்கியெறியப்பட்டார். சுய விமர்சனம் செய்துகொண்டு மீண்டும் கட்சியில் செயல்பட்ட டெங், முதலாளித்துவப் பாதையாளர்களுக்கு எதிராக 1966-இல் தொடங்கிய மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின்போது மீண்டும் கட்சியிலிருந்து விரட்டப்பட்டார். பின்னர் தனது தவறுகளைத் திருத்திக்கொண்டு, மாவோவின் சரியான வழியை ஏற்பதாகக் கூறிக்கொண்டு, 70-களின் துவக்கத்தில் மீண்டும் கட்சியில் இணைந்து செயல்பட்டார்.

மாவோவின் மறைவுக்குப் பிறகு, கட்சியிலும் ஆட்சியிலும் தனது செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொண்ட டெங், 1976-லிருந்து சர்வ அதிகாரம் கொண்டவராக உயர்ந்தார். 1978-ஆம் ஆண்டின் இறுதியில் 4 வகை நவீனப்படுத்தல் எனும் கொள்கையை அறிவித்த அவர், சீனாவின் இரண்டாவது புரட்சி தொடங்கிவிட்டது என்றும், சீனாவை வல்லரசாக மாற்றுவோம் என்றும் பிரகடனப்படுத்தினார். விவசாயத்தில் சோசலிசக் கூட்டுப் பண்ணைகளை உடைத்து, தனியார்மயமாக்கி புதுப் பணக்கார விவசாயிகள் வளர வழிவகை செய்தார். நாட்டை நவீனப்படுத்துவது என்ற பெயரில், சிறப்புப் பொருளாதார வளையங்களை உருவாக்கி ஏகாதிபத்தியங்களின் கொள்ளைச் சுரண்டலுக்கு கதவை அகலத் திறந்து விட்டார். பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியில் செம்மைப்படுத்தப்பட்ட சோசலிச ஜனநாயக சட்டத்தைத் தகர்த்தெறிந்தார். எதிர்த்தரப்பினரையும் கம்யூனிசப் புரட்சியாளர்களையும் கைது செய்து சிறையிலடைத்தார். லியூ ஷாவோ சியின் புரட்டல்வாதத்தை மீண்டும் உயிர்ப்பித்து, அவரை தேசியத் தலைவராக அங்கீகரித்தார். மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை மாபெரும் சீரழிவு என்று வருணித்து, அப்புரட்சி தொடராமல் ஒடுக்கினார். மாவோ 'இடது' சந்தர்ப்பவாதத் தவறுகள் இழைத்து, கட்சியையும் நாட்டையும் தவறான திசையில் இழுத்துச் சென்றதாக முத்திரை குத்தினார்.

சீனாவின் போலிக் கம்யூனிசப் பேரரசராகத் திகழ்ந்த டெங் காலத்தில் சீனா முதலாளித்துவச் சந்தைப் பொருளாதாரத்தில் பெரும் 'வளர்ச்சியை'க் கண்டது. ஆனால் அதற்கே உரித்தான விலையைத் தரவேண்டியிருந்தது. சீன விவசாயிகள் 2 கோடிப் பேர் வேலை இழந்தனர். நகர்ப்புற வேலையின்மை அதைவிடத் தீவிரமானது. இலஞ்சமும் ஊழலும் தலைவிரித்தாடியது. போலிக் கம்யூனிசக் கோடீஸ்வரர்களும் புதுப் பணக்கார அதிகார வர்க்கமும் பெருகினர். அழகிப் போட்டிகள், ஆபாசம், விபச்சாரம், வரதட்சிணை என பெண்கள் மீண்டும் இழிநிலைக்குத் தள்ளப்பட்டு அடிமைகளாயினர்.

டெங் கும்பலின் போலிக் கம்யூனிசத் தலைமையின் கீழான முதலாளித்துவ மீட்சிக்குப் பதிலாக, அப்பட்டமான மேற்கத்திய முதலாளித்துவ ஜனநாயகத்தைக் கோரி 1989-இல் சீன மாணவர்கள் போராடிய போது, டெங் அதை மிருகத்தனமாக ஒடுக்கினார். ஆயினும் போலிக் கம்யூனிசத்தின் பெயரால் முதலாளித்துவத்தை அவர் அங்கீகரித்து ஆதரித்தே வந்தார். ரஷியாவின் குருச்சேவ் - பிரஷ்னேவைப் போல, அரசு ஏகபோக முதலாளித்துவத்தை முழுமையாக அவர் சார்ந்திருக்கவில்லை. கோர்ப்பசேவைப் போல கம்யூனிச வாடையே இல்லாமல் முற்றாக முதலாளித்துவத்தை நிலைநாட்

டெங்கின் சீர்திருத்தம் குறித்து மூன்றாமாண்டு பு.ஜ.வில் வெளியாகியிருந்த கேலிச் சித்திரம்.






படிப்பகம்

www.padippakam.com

டவுமில்லை. அரசு ஏகபோக முதலாளித்து வத்தோடு தனியார் - அந்நிய ஏகபோகக் கொள்ளையும் கலந்த வீரிய ஒட்டுரக முதலா ளித்துவத்தையே அவர் உயர்த்திப் பிடித்தார். அரசியல் அதிகாரம் போலிக் கம்யூனிஸ்டுக ளின் பிடியில் இருக்கும் அதேசமயம், தனி யார் முதலாளித்துவம் வேரூன்றப் பாடுபட் டார். இதுதான் டெங் பிராண்டு சோசலிசம். சீனாவின் சிறப்பான நிலைமைக்கேற்ற சோச லிசம்! போலிக் கம்யூனிசத் தலைமையின்கீழ் முதலாளித்துவத்தை நிலைநாட்டும் டெங் கின் எதிர்ப்புரட்சிக் கொள்கை, தோற்றத்தில் கம்யூனிசம் போலவும் உள்ளடக்கத்தில் முத லாளித்துவமாகவும் உள்ளதாலேயே எல்லா ஏகாதிபத்தியவாதிகளும் அவரை உச்சி முகர்ந்து பாராட்டுகின்றனர்.

தமது சந்தர்ப்பவாத பித்தலாட்டங்க ளுக்கு முன்னோடியாகவும் குருவாகவும் திகழ்ந்து வந்த டெங் மறைந்ததும், இந்திய போலிக் கம்யூனிச மூத்த தலைவரான ஈ.எம். எஸ். நம்பூதிரிபாடு, உலகப் புரட்சிகர இயக் கத்தின், சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் முக்கியத் தலைவராக டெங்கை சித்தரித்து ஒரு கட்டுரையை ''பிரண்ட்லைன்'' இதழில் (மார்ச் 21) எழுதி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

ரஷியாவில் சோசலிசத்தின் ஆரம்ப ஆண்டுகளில் வரம்புக்குட்பட்ட அளவுக்கு முதலாளித்துவத்தை அனுமதித்த தோழர் லெனினது புதிய பொருளாதாரக் கொள்கை யும், டெங்கினுடைய கொள்கையும் ஒன்று தான் என்றும், லெனினுடைய உண்மையான சீடர் டெங் தான் என்றும் நரியைப் பரியாக் கும் சித்தாந்த மோசடியை தனது அஞ்சலி கட்டுரையில் செய்துள்ளார். ரஷியாவில் 1917-இல் சோசலிசப் புரட்சி ஏற்பட்ட ஆரம்ப ஆண்டுகளில் - 14 தேசங்களின் படையெடுப்பும், வெண்படையினரின் கலக மும் நிலவிய காலத்தில் - உற்பத்தி சக்திக ளின் வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு, வரம்புக்குட்பட்ட அளவுக்கு முத லாளித்துவத்தை அனுமதிக்கும் புதிய பொரு ளாதாரக் கொள்கையும், சோசலிசத்தை நிறுவி ஏறத்தாழ 20 ஆண்டுகள் முடிந்த பிறகு சீனாவில் டெங் கும்பல் முதலாளித்துவத்தை வளர அனுமதித்ததும் ஒரே கொள்கைதான் என்று கட்சி அணிகளின் காதில் பூ சுற்றுகிறார்.

நம்பூதிரியார் பிதற்றல்கள் இத்தோடு நின்றுவிடவில்லை. ''மாவோ, 'இடது' குறுங் குழுவாத - வறட்டுவாதத் தவறுகளைச் செய் தார். கலாச்சாரப் புரட்சியை நடத்தி நாட் டைப் பேரழிவில் தள்ளினார். தோழர் டெங் தலைமையிலான சீனக் கம்யூனிஸ்டுகள் நாட் டையும் கட்சியையும் அழிவிலிருந்து காப் பாற்றினர். டெங்கின் கொள்கைகள் உலகக் கம்யூனிச இயக்கத்துக்கு மாபெரும் பங்களிப் பைச் செய்துள்ளது'' என்று மார்க்சியத் துரோ கியை மாபெரும் ஆசானாகச் சித்தரிக்கிறார்.

டெங்கின் சாவு ஏகாதிபத்தியவாதிக ளுக்கும், போலிக் கம்யூனிசத் துரோகிகளுக் கும் உண்மையில் பேரிழப்புதான்! அதேசம யம் டெங்கை சர்வதேசக் கம்யூனிசப் புரட்சி இயக்கமும் மறந்துவிடாது. அதன் புரட்சிகர வரலாற்றில் துரோகிகளின் வரிசையில் அவ ருக்கு முக்கிய இடமுண்டு.

• குமார்.

## ''இனியும் ஏமாற மாட்டோம்!'' உழைக்கும் மக்கள் விடுத்த எச்சரிக்கை

**வை**கை அழகு முத்து மாவட்டத் தைச் சேர்ந்த சிறு கிராமம் என்.டி.பட்டி என்ற நாராயணத்தேவன் பட்டி. இக்கிராமத்தை யும், அருகிலுள்ள கம்பம் நகரையும் பிரிக் கும் பெரியாற்றின் மீது கட்டப்பட்டிருந்த பாலம், 92-ஆம் ஆண்டு பெய்த புயல் - மழையில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. அதன் பின் கடந்த நான்கு ஆண்டுகளாக என்.டி. பட்டிக்கும், கம்பத்திற்கும் சென்று திரும்பும் மக்கள், தங்களின் அன்றாட வேலைகளுக்கும், அவசரத் தேவைகளுக் கும் எட்டு கி.மீ. தூரம் சுற்றிக் கொண்டுதான் செல்ல வேண்டியுள்ளது. பாலமிருந்தால் இந்த இடைத்தூரம் இரண்டு கி.மீ.தான். நேரத்தை மட்டுமல்ல, வாழ வேண்டிய மனி தர்கள் அல்பாயுசில் வெள்ளத்தில் சிக்கி மடிந் துபோனதைக் கூட பாலமிருந்திருந்தால் தவிர்த்திருக்க முடியும்.

கடந்த நான்கு ஆண்டுகளாக இப்பகுதி மக்களும், கிராம நல மன்றங்களும் பாலத்திற் காக ஏறி இறங்காத அரசு அலுவலகங்கள் இல்லை; பார்க்காத அமைச்சர்களில்லை; அதிகாரிகளில்லை. எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகிப் போனது. ஆனா லும், வெள்ளத்தில் அடித்துச் சென்ற இரும்பு பாலத்தைத் திருடித் தின்ன மட்டும் காலதாம தம் செய்யவில்லை. தஞ்சையில் உலகத் தமிழ் விழாவிற்காக மிதவைப் பாலம் கட்டிச் சாதனை செய்ததாகப் பீற்றிக் கொண்ட ஜெயா ஆட்சியிலும் சரி, அதன்பின் பாலம் கட்டித் தருவதாக ஓட்டுப் பொறுக்கிச் சென்ற தி.மு.க. ஆட்சியிலும் சரி, இப்பகுதி மக்கள் பாலமின்றி படும் துன்பத்தை உணர்ந்தோர் ஒருவருமில்லை.

விவசாயிகள் விடுதலை முன்னணியி னர், பாலத்தைக் கட்டித் தரக்கோரி 17.02.97-இல் சாலை மறியல் நடத்தப் போவதாக புத்தாண்டு தினத்தன்று அறிவித்த னர். போராட்டத்திற்கு மக்களை அணிதிரட் டும் பொருட்டு புத்தாண்டு தொடங்கி 47 நாட் கள் பல வடிவங்களில் பிரச்சாரம் செய்தனர். 10.02.97 அன்று சாலை மறியலை விளக்கி, கே.கே. பட்டி பேருந்து நிலையத்தில் ஆர்ப் பாட்டம் நடத்தப் பெற்றது.

வழக்கம்போலவே சாலை மறியலைக் கைவிடக் கோரி வி.வி.மு. தோழர்கள் தேவ ராசு, கணேசனிடம் கெஞ்சிக் கூத்தாடிய அதி கார வர்க்கம், அவர்களின் உறுதிகண்டு தோற் றோடிப் போனது. மறியல் நாளன்று பெரும்ப டையோடு வந்த போலீசு, தோழர்களையும், கிராம மக்களையும் கைது செய்துவிடுவோம் என மிரட்டினர். போலீசின் மிரட்டலுக்கு தோழர்கள் மட்டுமில்லை, கைக்குழந்தை களோடு வந்திருந்த பெண்களும் அஞ்ச வில்லை. மேலும், இதே கோரிக்கையை வலி யுறுத்தி கம்பம் நகரில் மறியல் செய்வதாக அறிவித்திருந்த தி.க. அமைப்பினரும், வி.வி.மு. வினர் நடத்திய மறியலில் கலந்து கொண்டு போராட்டத்தைப் பலப்படுத்தினர்.

போராட்ட பலத்தைக் கண்டு அரண்டு நின்ற போலீசார் சமரசம் பேச அதிகாரிகளை வரவழைத்தனர். பேச்சுவார்த்தைக்கு வந்த வட்டாட்சியர் ''என்னால் எதுவும் முடியாது; மேலதிகாரிகளிடம் கூறி நடவடிக்கை எடுக்கி றேன்'' எனக் கூறி நழுவிக் கொள்ள முயன் றார். ஆனால் வி.வி.மு. தோழர்கள், ''அவர் கூறியதை அப்படியே எழுதிக் கொடுக்க வேண்டும்'' என நிபந்தனை விதித்தனர். நீண்ட போராட்டத்திற்குப் பின் மக்களின் நிபந்தனைக்கு அடிபணிந்த வட்டாட்சியர், தான் கூறியதை அப்படியே எழுதி, அதை மக்களின் முன் படித்துக் காட்டினார்.

''அடுத்த மாதத்திற்குள் (17.03.97) பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கவில்லையெ னில், இதைவிடத் தீவிரமான போராட்டத்தை அறிவித்து நடத்துவோம்'' என அதிகாரிக ளுக்கு எச்சரிக்கை விடுத்து, வி.வி.மு.வினர் சாலை மறியலை விலக்கிக் கொண்டனர்.

**தகவல்: வி.வி.மு., என்.டி.பட்டி**

## போராளிகளுக்குப் பாராட்டு!

கம்பம் பள்ளத்தாக்கு பகுதி விவசாயி களின் வாழ்வைச் சூறையாடி வரும் புதிய விவசாயத்தை எதிர்த்துப் போராடி வரும் விவசாயிகள் விடுதலை முன்னணி, கடந்த ஆண்டு நவம்பர் 25-ஆம் தேதி அனுபவ் பிளாண்டேசன் என்ற நிறுவனத்துக்குச் சொந்தமான பண்ணையில் வளர்ந்து நின்ற 6,000 தேக்கு மரக் கன்றுகளை வெட்டிச் சாய்த்தது. போடி நகரில் அமைந்திருந்த அந்நிறுவனத்தின் அலுவலகமும் வி.வி.மு. தோழர்களால் சூறையாடப்பட் டது. இப்போராட்டத்தில் ஈடுபட்ட 115 விவசாயிகள் மீது கொலை முயற்சி உள் ளிட்ட ஒன்பது வழக்குகள் பதிவாகின. வி.வி.மு.-வைச் சேர்ந்த 10 தோழர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப் பட்டனர்.

அந்நியச் செலாவணிக்காக பாரம்பரிய மிக்க நமது நாட்டு உணவு விவசாயம் நாச மாக்கப்படுவதை எதிர்த்துச் சிறை சென்று மீண்ட இத்தோழர்களைப் பாராட்டி, 20.02.97 அன்று போடியில் பொதுக்கூட் டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வி.வி.மு. போடி வட்டாரச் செயலர் தோழர் மோகன் தலைமை தாங்கினார். வி.வி.மு. உத்தமபாளையம் வட்டாரச் செயலர் தோழர் சேகரும், ஆண்டிப்பட்டி பகுதி வி.வி.மு. தோழர் செல்வராசும் சிறப்புரையாற்றினர். கூட்டமுடிவில் ம.க.இ.க.வினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

**தகவல்: வி.வி.மு., போடி**



படிப்பகம்

www.padippakam.com

# மணற்கொள்ளையும் மனித வேட்டையும்

தமிழ்நாட்டின் நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கடற்கரை கிராமங்களான பஞ்சல், பெருமணல் பகுதிகளில் ஏகாதிபத்தியக் கொள்ளைக்கு எதிரான போராட்டம் தீவிரமாக உருவெடுத்து வருகிறது. இக்கடற்கரை கிராமங்களின் கடல் மணலில் ''கார்னெட்'' எனப்படும் சிவப்பு நிற மணல் அதிக அளவில் கிடைக்கிறது. இந்த சிவப்பு நிற மணல், தொலைக்காட்சி பெட்டியின் முன்புறக் கண்ணாடிகள், கப்பல் போன்ற கலன்கள் கடல் நீரால் துருப்பிடிக்காமல் இருக்கப் பூசப்படும் முலாம், பாறைகளை வெட்டும் கூரான ஆயுதங்கள் மற்றும் சாணக் கல் தயாரிக்கப் பயன்படுகிறது. மேலும், இந்த சிவப்பு மணலோடு கலந்து கிடக்கும் கருப்பு மணல் கதிரியக்கத் தன்மை கொண்டதால், அணு ஆயுத உற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது.

கடற்கரை நெடுகிலும் பலமைல் தூரத்திற்கு இயற்கையாகக் கொட்டிக் கிடக்கும் இம்மணலை வழித்தெடுத்து, அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும் குத்தகையை வி.வி. மினரல்ஸ், டி.எம். மினரல்ஸ் மற்றும் மத்திய அமைச்சர் தனுஷ்கோடி ஆதித்தனின் மனைவிக்குச் சொந்தமான ''இந்தியன் கார்னெட் சாண்ட்'' என்ற மூன்று தரகு முதலாளித்துவ நிறுவனங்களுக்கு வழங்கியது ராவ் அரசு. ''அந்நியச் செலாவணி வருமானம்'' என முலாம் பூசப்பட்ட இக்கொள்ளையை, ஒரு வரம்புக்குள் கட்டுப்படுத்த சில சட்ட திட்டங்களும் உருவாக்கப்பட்டன.

அலை ஓங்கியடித்து கடல் நீர் புகும் பகுதியில் இருந்து (High tide line) 500 மீ. தொலைவிற்கு அப்பால், 5 செ.மீ. ஆழத்திற்கு மட்டுமே மணலை வழித்தெடுக்க வேண்டும்; ஆண்டுக்கு 90 நாட்களுக்கு மேல் மணல் எடுக்கக் கூடாது; நாளொன்றுக்கு 11 பேருக்கு மேல் வேலை செய்யக் கூடாது; மணலை அள்ளுவதற்குப் பகுதி மக்களின் சம்மதம் பெற வேண்டும்; கதிரியக்கம் கொண்ட கருப்பு மணலை இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டும்'' - இவையெல்லாம் மைய அரசு வகுத்த விதிமுறைகள்.

கொள்ளையென்று வந்த பின் சட்டமாவது, திட்டமாவது? அக்கடற்கரைப் பகுதிகளை ஏலத்தில் எடுத்த அந்த மூன்று நிறுவனங்களும் விதிமுறைகளைக் காற்றில் பறக்கவிட்டன. 12 அடி ஆழத்திற்குத் தோண்டி கடற்கரை மணல் வாரி எடுக்கப்பட்டது; வருடத்தில் ஒருநாள் கூடப் பாக்கியின்றி, மணலை வாரி எடுக்க 200 தொழிலாளர்களும், வாரியெடுத்த மணலை அள்ளிச் செல்ல சில நூறு லாரிகளும் பரபரப்பாக இயங்கின. சிவப்பு மணலோடு சட்டவிரோதமாகக் கருப்பு மணலையும் ஏற்றுமதி செய்து மாதமொன்றுக்கு சில கோடிகளை இலாபமாக ஈட்டின குத்தகைக்கு எடுத்த நிறுவனங்கள்; மைய அரசுக்கு அந்நியச் செலாவணி கிடைத்தது. அதிகாரிகளுக்கு இலஞ்சம் கிடைத்தது. ஆனால், மக்களுக்கு?

கடல் நீர் உட்புகுந்ததால் நன்னீர் உவர்ப்பாக மாறி, விவசாயம் பாழானது; இறால் மீன்கள் குஞ்சு பொரிக்க இயற்கையிலேயே சாதகமாக அமைந்த பஞ்சல் பகுதியில் கடல் நீரோட்டம் திசை மாறியதால், மீனவர்கள் வாழ்விழந்தனர்; பிறந்து வளர்ந்த கடற்கரை மணலில் நடந்து போக முடியாதபடி வேலி போட்டும், தொழில் செய்வதற்குச் சட்டவிரோதமாக வரி விதித்தும் அப்பகுதி மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து விட்டனர், அத்தரகு முதலாளிகள். எப்பொழுதும் துப்பாக்கியோடு திரியும் வி.வி. மினரல்ஸ் முதலாளி வைகுந்தராஜ், எதிர்த்துக் கேட்போரை மிரட்டிப்பணிய வைப்பதற்காகவே, இக்கிராமங்கள் நெடுகிலும் குண்டர் படையைக் கொண்டு வந்து இறக்கியுள்ளார்.

இச்சட்ட விரோத மணற்க் கொள்ளையை எதிர்த்தும், தங்கள் வாழ்வுரிமையை மீட்டெடுக்கவும் அம்மாவட்ட மீனவர்கள் கடந்த ஒன்றரை ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். ஆனால் அரசோ வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியதைப் போல, உவரி பகுதியில் சிவப்பு மணல் எடுக்கும் ஏலத்தை கனடா நாட்டுடன் தொழில் நுட்பக் கூட்டணி கொண்டுள்ள ''டிரான்ஸ் வேர்ல்டு'' என்ற நிறுவனத்துக்கு வாரி வழங்கியுள்ளது.

உழைக்கும் மக்களை மதியாத அரசின் இந்த அதிகார மமதையை எதிர்த்து மீனவர்கள் அடுத்த கட்ட போராட்டதிற்குத் தயாராயினர். இந்நிலையில் போராட்ட முன்னணியாளர் ஒருவரைப் பொய் வழக்கின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தது, தமிழக அரசு. இதை அறிந்த பெருமணல் பகுதி மக்கள், 15.12.96 அன்று நான்கு அரசுப் பேருந்துகளைச் சிறை பிடித்தனர். பேருந்தை மீட்க வந்த அரசு அதிகாரிகள், கிராம மக்களின் வாழ்வு பறி போகும் அவலத்தைக் காது கொடுத்தும் கேட்கவில்லை.


பெருமணல் மக்களின் போராட்டம் மறுநாளும் தொடர்ந்தது. அன்று மதியம் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் ஜாங்கிட் தலைமையில் 24 வண்டிகளில் வந்திறங்கிய ஆயுதப் போலீசுப் படையால் போராட்டக்காரர்கள் சுற்றி வளைக்கப்பட்டனர். எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி, உருட்டுக் கட்டைகளாலும், துப்பாக்கிகளாலும் நீதி கேட்டு நின்ற மக்கள் தாக்கப்பட்டனர். உயிரைக் காத்துக் கொள்ள கடலினுள் பாய்ந்தவர்களை நோக்கித் துப்பாக்கி குண்டுகள் சீறிப் பாய்ந்தன. பெண்களை மார்பகங்களிலும், பிறப்புறுப்புகளிலும் குறி வைத்துத் தாக்கியதோடு, அவர்களை மானபங்கப்படுத்தியது அரசு குண்டர் படை.

பேருந்தை அடித்து நொறுக்கி விட்டு, அப்பழியையும் மக்களின் மீது சுமத்திய போலீசார், அவர்களின் குடிசைகளைப் பிய்த்தெறிந்து, அற்ப சொற்ப உடமைகளையும் சூறையாடினர். 150-க்கும் மேற்பட்டோர் ப்டு காயமடைந்து, இரத்தப் பெருக்கோடு கிடந்த நிலையிலும், அவர்களுக்கு மருத்துவ உதவி மறுக்கப்பட்டது. அடக்கு முறையின் பின், பத்திரிகைகள், வானொலி, வானொளி மூலம் போராட்டக்காரர்கள் மீது வன்முறையாளர்கள் என்ற அவதூறு அள்ளி வீசப்பட்டது. மேலும், போராடும் மக்களை கிறிஸ்தவர் - இந்து என மதரீதியாகப் பிளவுபடுத்தி, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை மதக் கலவரமாகத் திசை திருப்பவும், வி.வி.மினரல்ஸ் முதலாளி வைகுந்தராஜ் சதி செய்து வருகிறார்.

ஏகாதிபத்தியங்கள் - தரகு முதலாளிகளின் கூட்டால் நாசமாக்கப்பட்டு வரும் தங்கள் வாழ்வையும், இம்மண்ணையும் காப்பதற்காக நிராயுதபாணியாக நின்று போராடிய இவர்களா வன்முறையாளர்கள்? இல்லை. தாராளமயம் என்ற பெயரில் நாடு மீண்டும் காலனியாக்கப்படும் சதியை எதிர்த்துப் போராடி வரும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராளிகள் அவர்கள். அவர்களின் போராட்டம் காலனியச் சுரண்டலில் இருந்து நாட்டை விடுவிப்பதற்காகத் தொடுக்கப்பட்ட சமராகும். அப்போராளிகளுக்குத் தோள் கொடுக்க வேண்டியது நாட்டின் மீதும், மக்களின் மீதும் பற்றுக் கொண்ட அனைவரின் கடமையாகும்.

• அக்னி

**சுற்றுப்புறச்சூழல் சட்டவிதிகளைக் காற்றில் பறக்கவிட்டு, சிவப்பு மணல் வழித்தெடுக்கப்படுகிறது.**





படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## மா.ஃபியாக்களை எதிர்த்து பம்பாய் தொழிலாளர்கள்

பம்பாயில் இயங்கி வரும் ''கட்டாவ்'' என்ற துணி ஆலைத் தொழிலாளியான நாராயணன் வேந்தே, அருண் காவ்லி மா.ஃபியா கும்பலால் மார்ச் 8-ஆம் தேதி ஆலைக்குள்ளேயே தாக்கப்பட்டு, அக்கும்பலின் மறைவிடத்துக்கு கடத்திச் செல்லப்பட்டார். இச் சம்பவம் நடந்து மூன்று நாட்கள் கழித்து, அவ்வாலையைச் சேர்ந்த ஏழு தொழிலாளர்கள் ஆலையினுள் மா.ஃபியா கும்பலால் தாக்கப்பட்டனர். இத் தொழிலாளர்கள் அருண் காவ்லியின் மருமகன் சசின் அஷிர் தலைவனாக உள்ள காங்கிரசு ஆதரவு தொழிற்சங்கத்தைப் புறக்கணித்துவிட்டு, இறந்துபோன தத்தா சமந்த் உருவாக்கிய கிர்னி கம்கர் சங்கர்ஷ சமிதியை ஆதரித்த காரணத்திற்காகவே தாக்கப்பட்டனர். மா.ஃபியா கும்பலின் தொழிற்சங்க ஆதிக்கத்தை எதிர்த்து அவ்வாலைத் தொழிலாளர்கள், பல்வேறு தொழிற்சங்கங்களின் ஆதரவோடு மார்ச் 12-ஆம் தேதி பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

## சோதனைச் சாலைப் பன்றிகளாக ஏழை இந்தியப் பெண்கள்

கல்கத்தாவிலும், டெல்லியிலும் கர்ப்பத் தடை செய்துகொள்ள விரும்பும் ஏழைப் பெண்களின் கருப்பையில் அவர்களுக்கே தெரியாமல் மலேரியா நோயைக் கட்டுப்படுத்தக் கொடுக்கும் ''கொய்னாகிரைன்'' எனும் மாத்திரையைத் திணித்து விட்டு, அதன் பக்க விளைவுகளை ஆராயத் தொடங்கியுள்ளனர் பல மருத்துவர்கள். கர்ப்பப் பையினுள் இரத்தக் கசிவை ஏற்படுத்தி உயிரையே குடித்து விடும் இக்கருத்தடை முறை சிலி, வியட்நாம் நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளன. எனினும், கல்கத்தாவைச் சேர்ந்த இரு தன்னார்வக் குழுக்கள் அமெரிக்காவின் வலதுசாரிகளிடமிருந்து காசை வாங்கிக்கொண்டு, இந்த உயிர்க் கொல்லி கர்ப்பத் தடை முறையை நாடு முழுவதும் தடையின்றிப் பரப்பி வருகின்றன.



பான் நகரில் போலீசாரோடு மோதும் ஜெர்மன் சுரங்கத் தொழிலாளர்கள்.

## நஞ்சு கலந்த தேன்

பாகிஸ்தானைச் சேர்ந்த இளம் பெண் சைமா வாஹீத். அவர், தனது பெற்றோர்களின் சம்மதமின்றி காதல் திருமணம் செய்து கொண்டது சட்டப்படி செல்லத்தக்கது என லாகூர் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. இத்தீர்ப்பு பெண்ணுரிமைக்கு ஆதரவாக இருந்தாலும், அதன் இறுதி வாசகங்கள் திருமண உரிமையைப் பெண்களிடமிருந்து பறித்துவிட அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளன. அத்தீர்ப்பை வழங்கிய நீதிபதிகள், பெற்றோர்களின் சம்மதம் திருமணத்திற்கு வேண்டும் என்பதைச் சட்டமாக்க வேண்டும் என்றும், ஆணும் - பெண்ணும் நட்புடன் பழகுவதையும், காதல் திருமணங்கள் செய்து கொள்வதையும் தடைசெய்து தண்டிக்க வேண்டும் என்றும், அச்சட்டம் நிறைவேற்றப்படும்வரை இது போன்ற வழக்குகளை நீதிமன்றங்கள் விசாரிக்கக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

## ஈழத் தமிழர் விரோதத் தீர்ப்பு

1993-ஆம் ஆண்டு ''யகாதா'' என்ற கப்பலை சென்னையை ஒட்டி சர்வதேசக் கடல் எல்லையில் வழிமறித்த இந்தியக் கப்பற் படை, அக்கப்பலைத் தீக்கிரையாக்கி, விடுதலைப்புலி கிட்டுவையும் உள்ளிட்டு பத்து தமிழீழப் போராளிகளைக் கொன்றொழித்தது. இதுதொடர்பாக நடந்த வழக்கில் அக்கப்பலில் இருந்து உயிருடன் சிறைபிடிக்கப்பட்ட பிற ஒன்பது போராளிகளையும் குற்றமற்றவர்களாகத் தீர்ப்பளித்தது விசாகப்பட்டினம் 'தடா' நீதிமன்றம். இவ்வழக்கை மீண்டும் விசாரித்த உச்சநீதி மன்றம், ''கப்பற் படை அதிகாரிகள் அக்கப்பலைத் தீக்கிரையாக்க எவ்வித அவசியமும் இல்லை; அதிகாரிகள் கடமையை நிறைவேற்றுவதைத் தடுக்க, இக்கிரிமினல்கள்தான் கப்பலுக்குத் தீ வைத்து விட்டனர்'' என புதிய தீர்ப்பை எழுதி, அப்போராளிகளுக்கு மூன்றாண்டு சிறை தண்டனை விதித்துள்ளது.

## தாய்மொழிப் பள்ளிகளுக்கு மூடுவிழா

கேரள மாநிலத்தில் கடந்த ஐந்து வருடங்களில் 110 அரசுப் பள்ளிகள் இழுத்து மூடப்பட்டு விட்டன. இப்பள்ளிகளின் ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களின் எண்ணிக்கை 25-ஐக் கூட எட்டாததால், இப்பள்ளிகளை நடத்துவதில் பயனில்லை எனக் கூறி மாநில அரசு பள்ளிகளை மூடிவிட்டது. மூடப்பட்ட பள்ளிகளில் பெரும்பான்மையானவை தாய்மொழியான மலையாளம் மூலம் கல்வி கற்பிப்பவை. தற்பொழுது அரசுப் பள்ளிகளில் 56.28 இலட்சம் மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். இந்த எண்ணிக்கை 2001-ஆம் ஆண்டில் 52.92 இலட்சமாகக் குறைந்து விடுமாம். ஆங்கில மோகம் பிடித்தாட்டுவதுதான் இதற்குக் காரணம். இப்போக்கைத் தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்காமல், பள்ளிகளின் மூடுவிழாவை விரைந்து நடத்திவருகிறது மாநில அரசு.

## பட்ஜெட் பற்றாக்குறைக்கு தொழிலாளர்கள் பலிகடா

ஜெர்மன் அரசு, ஐரோப்பிய ஒன்றிய ஒப்பந்தத்தின்படி தனது பட்ஜெட் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்கு 60,000 நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களை வேலையில் இருந்து துரத்திவிடத் தீர்மானித்துள்ளது. சுரங்கத் தொழிலாளர்களின் வயிற்றலடிப்பதன் மூலம் 10,500 கோடி ரூபாயை நிலக்கரி மானியமாக வழங்குவதை மிச்சப்படுத்தி விடலாம் என்பதுதான் ஜெர்மனி அரசின் நப்பாசை. தொழிலாளர்கள் பலிகடாவாக்கப்படுவதை எதிர்த்து நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் பான் நகரம் உள்ளிட்டு பல்வேறு ஊர்களில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

## தென் ஆப்பிரிக்கா: கருப்பின மாணவர்களின் போர்

மண்டேலா அரசு, அந்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு அளித்துவந்த மானிய உதவியை நிறுத்திவிடத் தீர்மானித்ததையடுத்து, கருப்பின மாணவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். மானிய உதவி நிறுத்தப்பட்டதால், கல்லூரிக் கட்டணம் தாறுமாறாக உயர்ந்துவிடும். இது சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் வாழும் வெள்ளைநிற மற்றும் இந்திய மாணவர்களைப் பாதிக்கப் போவதில்லை. ஆனால் இன்றும் ஏழ்மையில் உழன்றுவரும் கருப்பின மாணவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி விட்டதால், நாடெங்கும் கருப்பின மாணவர்களின் போராட்டம் தீவிரமாக உருவெடுத்துள்ளது. ஆட்சி மாறிய பின்னும், கருப்பின மக்களின் அவலம் மட்டும் தொலைந்தபாடில்லை.

## அமிதாப் பெயரில் அரசுக் கல்லூரி

ராஜீவின் பீரங்கிக் கொள்ளைக்குத் துணைபோனவன் அமிதாப் பச்சன். ''மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு உதவுகிறேன்'' என்ற போர்வையில் உலக அழகிப் போட்டியை நடத்தி, கோடிகோடியாய் சுருட்டிக் கொண்டவன். இம்மோசடிப் பேர்வழியின் பெயரை, உத்தரப் பிரதேசத்தில் முலயம் சிங் யாதவின் சொந்த ஊரிலுள்ள அரசுக் கல்லூரிக்குச் சூட்டி மகிழ்ந்துள்ளது, உ.பி. மாநில அரசு.

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

படிப்பகம்

# இதுதான் இன்றைய இந்தியா



பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ் தனது மக்கள் செல்வாக்கைக் காட்டுவதற்காக அம்மாநிலத் தலைநகர் பாட்னா நகரில் சமீபத்தில் நடத்திய ஊர்வலம்தான் இந்தப் படம். அந்த ஊர்வலத்திற்கு "ஏழைகளின் ஊர்வலம்" எனப் பெயரிட்டிருந்தார், அவர். இலவச உடை, இலவச விருந்து, இலவசப் போக்குவரத்து, வேடிக்கைக் களியாட்டங்களைக் காட்டி, அப்பாவி மக்களை மயக்கித் திரட்டி வந்து, இந்த ஊர்வலத்தை நடத்திக் காட்டினார், லல்லு. "பீகார் மாநிலம் வர்க்க ரீதியாகப் பிளவுண்டு கிடப்பதற்கு இந்த ஊர்வலமே சாட்சி" எனத் தலையங்கம் எழுதியது "டைம்ஸ் ஆஃப் இந்தியா" என்ற ஆங்கில நாளிதழ். இலட்சக் கணக்கில் திரண்டிருந்த அந்த ஏழைகளைக் காட்டி, "எத்தனை ஊழல் குற்றச்சாட்டுகள் தன்மீது சுமத்தப்பட்டாலும், அடித்தட்டு மக்கள் மத்தியில் தன் செல்வாக்கு குறையவில்லை" என மார்தட்டினார் லல்லு. இந்த 'மக்கள் தலைவன்', மண்டல் தூதுவனின் ஆறு ஆண்டுகால ஆட்சியிலாவது, அந்த ஏழை மக்களில் பெரும்பகுதியினரான தாழ்த்தப்பட்ட கூலிகளுக்கு சமூக நீதி கிடைத்ததா?

இல்லை என்பதற்கு சாட்சிதான் இந்தப் படம். துக்கம் தாளமுடியாமல் ஓ...வென்று கதறி அழுகின்ற இத்தாழ்த்தப்பட்ட பெண்களின் உறவினர்கள் 10 பேரைச் சட்டவிரோத மேல்சாதி குண்டர்படையான ரன்பீர் சேனா சமீபத்தில் சுட்டுக் கொன்று விட்டது. பாட்னா நகரிலிருந்து 60 கி.மீ. தொலைவில் உள்ள ஹாய்பஸ்பூர் கிராமத்தில், ஹோலி பண்டிகைக்கு முதல் நாள் நடந்தது இக்கொடூர சம்பவம். எதிர்க்க முடியாத வண்ணம், கையும் காலும் கட்டப்பட்ட நிலையில் அத்தாழ்த்தப்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். தப்பிப் பிழைத்த ஒருவர் குண்டு காயத்தோடு போலீசு நிலையத்திற்கு ஓடினார். குண்டடிபட்டவருக்கு முதல் உதவியும் செய்யாமல், அவர் கொடுத்த புகாரையும் பதிவு செய்யாமல், ஆபாச வார்த்தைகளால் அவரைத் திட்டி விரட்டி விட்டது லல்லுவின் போலீசு. சமூக நீதிக் காவலனின் ஆட்சியில், போலீசு யாரைப் பாதுகாக்கிறது பார்த்தீர்களா?

பீகாரில் பெல்ச்சி, புரைகியா, பரஸ்பிகா, பதனிடோலா, ஹாய்பஸ்பூர் என மேல்சாதி குண்டர் படையால் தாழ்த்தப்பட்டோர் படுகொலையான பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. இக்கிரிமினல் குண்டர்படையின் அட்டூழியங்கள் முடிவின்றித் தொடர்வதற்கு, ஜனதா தளம், காங்கிரசு, பாரதீய ஜனதா போன்ற 'தேசிய'க் கட்சிகளின் வர்க்கப் பாசமும், சாதிப் பற்றும்தான் முக்கிய காரணம். தாழ்த்தப்பட்டவர்களை ஓட்டு வங்கியாய், ஆட்டு மந்தையாய் எண்ணித் திரியும் இக்கபட வேடதாரிகளைப் புரிந்துகொள்ள இன்னுமா படுகொலைகள் தொடர வேண்டும்?

